கவிச்சக்கரவர்த்தி

கம்பர் வரலாறு



கம்பர்

(திருவரங்கம் நாதமுனி கோயில் முன் மண்டபத்தில் உள்ளபடி அமையப் பெற்றது)

ஆசிரியர்

பண்டிதர், அ. கி. நாயுடு

பீளமேடு

கவிச்சக்கரவர்த்தி

கம்பர் வரலாறு

ஆசிரியர்
பண்டிதர் அ. கி. நாயுடு
பூளைமேடு

பதிப்புரிமை—1963] [விலை ரூ. 2-00

முதற்பதிப்பு: 1963.

உரிமை ஆசிரியருக்கு

பதிப்பில் வந்தவை.

1. திருவள்ளுவர் காவியம் ரூ. 10-00
2. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் முழுநூல் ரூ. 10-00
3. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் முதலும் முடிவும் ரூ. 00-60
4. கம்மவாரும் தென்னுடும்
5. கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு

பதிப்பில் வருகின்றவை.

1. திருபகவன் கீதை இராமாநுஜபாஷியம்
2. பகவனும் பகவன் கீதையும்

பதிப்பில் வருபவை.

(உரையாடல் நூல்)

1. பழங்காலக் கிராம சமுதாயம்—பூளைமேடு
2. காந்தி முடிவும் கண்ணன் முடிவும்
3. கொங்குக் கோசர்வேளாளர்—வரலாறு
4. கம்பரும் வான்மீகரும்
5. கம்பர் கருப்பொருள்

(செய்யுள் நூல்.)

1. சமதரும நேரு
2. பருத்திப் பெண்டிர்—சமதரும நாடகம்
3. மகளிர் மாண்பு

நூல் கிடைக்குமிடம்:—

முப்பால் நிலையம்,

40. அ. கிரியம்மன் வீதி, பூளைமேடு (அஞ்சல்)

கோவை-4, தமிழ்நாடு.


காந்திதாசன் அச்சகம், கோவை-9. தொலைபேசி எண்: 5354.

முகவுரை

கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு எழுதின வித்துவான் மகாவித்துவான், புலவர், பெரும்புலவர் எவருமே இது காறும் முறையாக எழுதவில்லை. ஒன்றுக்கொன்று மாருகப் புனையப் பெற்றகதைகளையும் அதற்கு ஆதரவாகச் சிலபாடல் களையும் துணைக்கொண்டு எழுதப் பெற்ற கதைகளே உரைத் தனர். அவருள் ஒருவர், கம்பர் பிறந்த குலத்தைப் பற்றி ஒச்சர்குலம் என ஓங்கியுரைத்து மணியடிப்பவராகிமகிழ்வர். மற்றொருவர், கம்பர் கலியாணம் இல்லாமலேயே காலம் கழித்துத் தாசிகளுடன் கூடிக்குலாவிக் கழித்திருந்தனர் எனத் தாசி மனப்பான்மை வாணிகத் தாசராகிச் சொல்வர். இன்னெருவர்,கம்பர் அரசரின் காமக்களியாடல்களைப் பாடிப் பாடி அரசரை மகிழ்வித்துப் பரிசுகள் பெற்று ஆடம்பர வாழ்க்கையுடன் ஆடை அணிகளை அணிந்து சிவிகை ஏறித் திரிந்தனர் என அரசர், அரசர் போன்ருர் உளம் ஒட்டப் பாடிக் கூத்தாடிப் பரிசுகள் பெறும் ஒட்டக்கூத்தராகிச் சொல் வர். வேறு சிலர், கம்பர் தமது கருத்தில் பலப்பல ஆண்டுகள் ஆய்ந்தாய்ந்து அமைத்து வைத்துப் பாடிய இராம காதையைஉரிமை எண்ணத்துடன் பாடவில்லை; அரசர் வற் புறுத்தலினல் அடிமை எண்ணத்துடன் பாடினர் என உரிமையையறியாத ஆனந்த அடிமையராகியரைந்தனர். பின்னும் அறிஞர் சிலர், தமிழர் சமுதாயத்தையும் உலகர் சமுதாயங்களையும் கண்டு தெளிந்து சமுதாயம் இங்ஙனம் இருந்தது, இங்ஙனம் இருத்தல் வேண்டும் எனப் பாடிய கம்பர் காவியத்தின் உண்மையை ஒரு சிறிதும் உணராமல் கம்பர் காவியம் காமரசக்கடாம் எனக் காமரசக்களியராகிக் கழறுவர். சமயத்தார் சிலர் கம்பரது காவியத்தை ஆய்ந்து கற்காமல் மேலாகச்சிலவரிகளைப் படித்த பெருமிதத்துடன் கம்பர் ஒரு சமயத்தவரும் அல்லர் என திருமண் திருநீற்றைக் குழப்பி மேலும் குறுக்கும் பூசும் வேடதாரிகளாகி விளம்புவர்.

விழாக்காரர் சிலர் கம்பர் தமது கலைகளாம் மலைச்சிகரத்தில் வைத்து உலகம் உணர்ந்து உவக்கச்செய்த தன்னிகர் இல்லாத தலைவன் தலைவிகளைப் போற்றியாங்காங்கு பாடியுள்ள மரபு முறைகளைத் தேர்ந்து தெளியாமல் அத்தலைவன் தலைவியரைப் போற்றுபவர் போலத் தூற்றும் பட்டிமண்டபப் பறையடிப்பவராகிப் பகர்வர்.

இங்ஙனம் பலப்பலவாறு கம்பரையும் கம்பர் காவியத்தையும் பற்றிக் கூறுபவரின் கூற்றுக்களுக்குத் தக்க மறுப்புக்களை அகச்சான்று புறச்சான்றுகளுடன் கூறிக் கூறி அவர் கூற்றுக்களாம் மனக்களையைப் போக்கி அவர் மனப்புலத்தில் வைப்பதே கம்பர் வரலாற்றுக் கற்பகமாகும். கம்பர் நல்ல குலத்தில் பிறந்தவர் முறையாகக் கல்வி பயின்று கவிச்சக்கரவர்த்தியானவர்; அரசரை ஒரு சிறிதும் அண்டியிருக்காதவர்; சடையப்பரால் அன்பு செலுத்தப் பெற்றவர்; மக்கள் மன மகிழ்ந்தளித்த பரிசுகளுக்குப் பாத்திரம் ஆனவர்; அறப்பால் முறையில் இல்வாழ்க்கையில் இருந்தவர் உரிமையாகஇராம காதை பாடினவர்; உலகுள்ளவரை புகழுடல் எய்தினவர் என்பனவற்றை எனது இளமையிலிருந்து முதுமை 74 ஆண்டுவரையும் ஆய்ந்தறிந்த அனுபவ உண்மைகளே கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு. இதனை அன்பர் அறிந்து அறிவுறுத்துக.



கம்பர் — வல்லியம்மை

(தேரழுந்தூர் சிலையைப் பார்த்து வரையப் பெற்றது)



ஆசிரியர்
பண்டித அ. கி. நாயுடு
மனைவி கிருஷ்ணம்மாள்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு

1. கம்பர் காலம்

எண்ணிய சகாப்தம்—அவனிமுழுதுண்டு—ஆவின் கொடை

என்னும் இத்தலைப்புப் பாடல் மூன்றையும் பிறவற்றையும் ஆதாரமாகக் கொண்டு இதுகாறும் கம்பர் காலத்தை ஆராய்ந்த புலவர் பெருமக்களில் பெரும்பாலோர் கம்பர் காலம் 12ஆம் நூற்றாண்டென்னும் ஒரே முடிவிற்கு வந்துள்ளனர். அஃதாவது:- கம்பர் கி. பி-1100 முதல் கி. பி. 1200 வரை இருந்தனர் என்பதாம்.

2. கம்பர் வாழ்வு நிகழ்வின் ஆண்டுகள்

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் கம்பரையும் அவர் வாழ்வின் நிகழ்வுகளையும் என் மனப்பண்பின் பாவனைகளில் கண்டு கண்டும் அவர் வாழ்வின் நிகழ்வுகளை எண்ணி எண்ணித் தெளிந்தும் தேர்ந்தனவற்றை முறையாக எழுதுகின்றேன்.

கம்பர் கி. பி. 1110இல் பிறந்து கி. பி. 1175 வரை இருந்தனர்.

1. கம்பர் கல்வி பயின்றுசரசுவதி அந்தாதி பாடியபொழுது —வயது-17
2. கம்பர் சடையப்பரிடம் வரும்பொழுது —வயது-20
3. கம்பர் சடையப்பரின் மூவேந்தர் விருந்து கண்டபொழுது —வயது-22
4. கம்பர் சடையப்பர்மேல் மும்மணிக்கோவை பாடியபொழுது—வயது-23
5. கம்பர் ஏரெழுபது பாடியபொழுது —வயது-24
6. கம்பர் ஏரெழுபது அரங்கேற்றி வரிசைகள் பெற்றபொழுது—வயது-25

வரலாறு — பிரிவுகள்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு

1. கம்பர் பிறந்த ஊர் திருவழுந்தூர்

கம்பன் பிறந்தஊர் காவேரி தங்கும் ஊர்
கும்பமுனி சாபம் குலைந்த ஊர் — செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையுந்தே டிக்காணு
ஓதகத்தார் வாழும்அழுந் தூர். — த. நா. சரிதை-185

என்பதால் கம்பர் பிறந்த ஊர் திருவழுந்தூர் எனத் தெரிகின்றோம். தஞ்சை மாவட்டம் குற்றாலம் இரயில்வே நிலையத்திற்குத் தென்கிழக்கில் 2 மைலில் திருவழுந்தூர் உள்ளது. அவ்வூரில் வைணவப் பார்ப்பனர் குடியிருப்பிற்குத் தெற்கில் அரை மைலுக்கப்பால் கம்பர் வீடு இருந்ததாகச் சொல்லுகின்றனர். அந்த இடம் இன்று ஊர்ச் சமுதாயத்திற்குள்ளது. அஃது 50 சென்டு அல்லது 150 குழி நிலம் இருக்கும். அது பூமியின் மட்டத்திற்கு மேல் ஒரு 10 அடி மேடாக உள்ளது. அதைக் கம்பர் மனை, கம்பர் மேடு என்கின்றனர். அம்மேட்டில் வீடு இருந்ததற்கடையாளமாகச் சல்லிகள் உள்ளன. இன்று அம்மேட்டைச் சுற்றி முகம்மதியர் குடியிருக்கின்றனர். அம்மேட்டின் தென்பால் வெட்டிப் பரிசோதித்ததில் ஒரு கிணற்றைக் கண்டு சேறெடுத்திருக்கிறார்கள். நச்சினார்க்கினியர் அகத்திணையியல் 30 ஆம் சூத்திர உரையில் சொல்லும் அழுந்தூர் இதுவே. குற்றாலம் இரயில் வழியில் கம்பர் மேடு என்னும் குறியும் நடப்பட்டுள்ளது.

பெற்று வளர்த்தும் வித்தைதனைப் பேணிக் கொடுத்தும்
பெயர்பொறித்தும்
பற்ற அரும்பா லமுதளித்தும் பகைத்த வறுமைப் பகைதீர்த்தும்
கற்ற முதனால் திருவழுந்தூர்க் கம்பன் தழையக் கருணைசெய்வார்
மற்றும் புலவோரையும் வாழ வைத்தார் சோழ மண்டலமே.

எனச் "சோழமண்டலசதகமும்" கம்பன் பிறந்தவூர் திருவழுந்தூர் என்கின்றது.

2. கம்பர் தகப்பன் பெயர் ஆதித்தன்

1 — தராதலத்தி லுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவும் அரம்ஆயிற் றன்றே—இராவணன்மேல்
அம்புநாட் டாழ்வன் அடிபணியும் ஆதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி. — இராம-பாயிரம்-செ-4

2 — ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறெழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு— மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
காரார் காகுத்தன் கதை

3 — இம்பரும் உம்பர் தாமும் ஏத்திய இராம காதை
தம்பமா முத்தி சேர்தல் சத்தியம் சத்தி யம்மே
அம்பரம் தன்னில் மேவ ஆதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன்செங் கமல பாதம் கருத்துற இருத்து வாமே

என்பன "செந்தமிழ்" 3ஆம் தொகுதியில் கம்பர் தலைப்பில் உள்ளன.

இவற்றுள் 2, 3 செய்யுட்களில் ஆதித்தன் சேய், ஆதித்தன் புதல்வன் எனக் கம்பர் தகப்பன் பெயர் ஆதித்தன் என்கின்றனர். தசரதராமன், சங்கரன்சடையன் என இராமனையும் சடையனையும் தத்தம் தகப்பனார் பெயருடன் சேர்த்துச் சொல்வதைப் போலக் கம்பரையும் தன் தகப்பன் பெயருடன் சேர்த்து ஆதித்தன்கம்பன் என முதற் செய்யுளில் சொல்லினர். இதனால் கம்பர் தகப்பன் பெயர் ஆதித்தன் என்பது தெளிவாகும். மூவலூர் தஞ்சை மாயவரம் இரயில் நிலையத்திற்கு மேல்பாலுள்ளது. ஆதித்தனுக்கு நிலமோ வீடோ உறவோ இருப்போ பற்றிய ஓர் உரிமை மூவலூரில் இருந்திருக்கும். ஆனால் கம்பர் பிறக்கும்பொழுது ஆதித்தன் திருவழுந்தூரில் இருந்தனர். எனவே, கம்பர் பிறந்தது திருவழுந்தூர் ஆகும்.

3. கம்பர் பெயர் தமது முன்னோரின் நாட்டின் பெயர்

பெற்று வளர்த்தும் வித்தைதனைப் பேணிக் கொடுத்தும்
பெயர்பொறித்தும்
பற்ற அரும்பால் அமுதளித்தும் பகைத்த வறுமைப் பயம்தீர்த்தும்
கற்ற முதனூல் திருவழுந்தூர்க் கம்பன் தழையக் கருணைசெய்தார்
மற்றும் புலவோ ரையும் வாழ வைத்தார்சோழ மண்டலமே.

எனச் 'சோழ மண்டல சதகம்' கம்பருக்குப் பெயர் கொடுத்ததைப்பற்றிச் சொல்லியுள்ளது. குழந்தை பிறந்ததும் பெற்ருேர் நாள் குறித்துப் பெயர் வைப்பதுமுண்டு. இன்றேல், குழந்தையை ஒரு செல்வப் பெயரால் அழைத்துவந்து, குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பும்பொழுதோ, வேறு சடங்குகள் செய்யும்பொழுதோ பெயர் வைப்பதுமுண்டு. அதுகாலே, தமது நாடு ஊர்களின் பெயர்களாகவோ, குணம், தொழில்களின் சிறப்பினுல் காரண இடுகுறிப்பெயர்களாகவோ வைப்பதுமுண்டு. அவற்றுள் நாட்டின் பெயரையே கம்பருக்கு வைத்தனர்.

ஆந்திரநாட்டுக் கருநூல் பக்கம் கம்பம் என்ற நாடு அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது. அதனுல், அதைக் கம்பம் மாவட்டம் எனவும் சொல்லுகின்றனர். அக்கம்பநாட்டிலிருந்து கம்பர் தகப்பன் ஆதித்தன் மரபினுர், வடுகவழி மேற்கு எனும் வாணகப்பாடி நாட்டிற்கு (தொண்டைநாட்டிற்கு) வந்து அங்கிருந்து சோழநாட்டிற்கு வந்து மூவலுர், திருவழுந்தூர், புதுவை முதலிய ஊர்களில் குடியிருந்தனர். அங்ஙனம் வடுகுமொழிக் கம்பநாட்டிலிருந்து குடிவந்த ஆதித்தன் தன் மகனுக்குத் தனது தாய்நாட்டின் பெயரையே வைத்தல் வேண்டும் என எண்ணி முடிவு செய்தனர். எவருமே தமது மக்களுக்குத் தாம் குடியிருக்கும் ஊரின் பெயரை வைக்கமாட்டார். தாம் முன்பு குடியிருந்த ஊரின் பெயரையோ, தான் சிறப்பாகக் கருதும் ஊரின் பெயரையோ தான் வைப்பார். அங்ஙனமே, கல்லாடம், இடைக்காடு என்னும் ஊர்களின் பெயர்கள் கல்லாடனுர், இடைக்காடனுர் எனச் சங்கப் புலவர்க்கு வைக்கப்பெற்றன. அவ்வாறே ஆதித்தன் தனது தாய்நாடு கம்பம் என்ற பெயரையே தனது மகனுக்குக் கம்பன் என வைத்தனர். இதனைச் செவ்வனே தேர்ந்து தெளிந்த திருமணம் செல்வகேசவராய முதலியார், எம். எ. 'கம்பநாடர்' எனும் புத்தகம் 18ஆம் பக்கத்தில் "கம்பநாடு இவர்களது முன்னேர்களது ஜன்மதேசமாகையால், இவர் கம்பர், கம்பநாடர் என்று பெயர் பெற்றிருக்கலாம்" என்றனர். இங்ஙனமே, மோ. வே. கோவிந்தராஜய்யங்காரும் 'கம்பநாடர்' பத்திரிகை கம்பர் சரிதம் 18ஆம் பக்கத்தில் "இவரது முன்னேரது ஜந்மதேசம் கம்பநாடு என்னும் பெயருடையதாதலால், அதுபற்றி இவர்க்கு இப்பெயர் தோன்றியிருத்தல் வேண்டும்; அதனுற்றுன் கம்பநாடர் என்றழைக்கப்

படுகிறுர்'' என்பர். இங்ஙனம் தமக்குள்ளிருந்த ஒரு முடிவையே இப்பெரும் புலவர் இருவரும் சொல்லினர். இம்முடிவை அறிந்தோ அறியாமலோ புலவர் என்போர் எவரும் புனைந்து கதைப்பதாவது :—

1. ஏகாம்பரன் என்னும் சிவன் பெயரின் மரூஉமொழி கம்பர் என வந்ததாகச் சைவர் சொல்லுவர்.

2. விளையாடும்பொழுது நன்முக விளையாடாமல் கம்பம் போல் நின்றமையால் கம்பன் எனப் பெயர் வைத்தனர் என விளையாட்டுச் சிறுர் சொல்வர்.

3. இளமையில் கணக்காயரது கம்பங்கொல்லையைக் காத்துவந்தமையால் கம்பன் எனப் பெயர் வந்ததெனக் காடுகளைக் காவல் காக்கும் காட்டுப் பிள்ளைகள் சொல்வர்.

4. காளிங்கராயன் குதிரையைச் சாவவும் பிழைக்கவும் பாடிய கவித்திறமையைக் கேட்ட அரசன்முன், கையில் மாடு மேய்க்கும் கம்புடன் சென்றமையால் கம்பன் எனப் பெயர் வந்ததென மனனுணர்வில்லா மாக்கள் சொல்வர்.

5. யாருமின்றிக் கப்பத்தினடியில் கிடநதமையால் கம்பன் எனப் பெயர் வந்ததென வழிப்போக்கர் சொல்வர்.

6. கம்பத்தில் தோன்றிய நரசிம்மமூர்த்தியை உபாசனை மூர்த்தியாகக் கொண்டமையால் கம்பன் எனப் பெயர் வந்ததென வைணவர் சொல்வர்.

இங்ஙனம் புனைந்துரைக்கும் கதைகளுக்குக் கம்பர் இயற்றிய நூல்களிலோ, கம்பரைப்பற்றிச் சொல்லிய நூல்களிலோ எவ்வித ஆதாரமும் இல்லை. ஆதித்தன் தன் மகனுக்கு வைத்த கம்பன் என்ற பெயரையே போற்றிப் புகழ்ந்து சொல்லுகின்றதை ஆராய்ந்தறிந்து சோழமண்டல சதகத்தார் "பெயர் பொறித்தும்'' எனச் சொல்லினர். எனவே, கம்பம் என்னும் தமது தாய்நாட்டின் பெயரை ஆதித்தன் தன் மகனுக்குக் கம்பன் என வைத்தனர். இது வரலாற்றில் உள்ளதை ஆலிநாட்டுச் சந்தணிபுயத்து வள்ளல் சடையன்—திருமுடிசூ–33 என்பதால், தொண்டைமண்டலத்து ஆலிநாட்டிலிருந்து சடையப்பன் தகப்பனே முன்னேரோ சோழநாட்டிற்கு வந்தமையால் சடையப்பனை ஆலிநாட்டு வள்ளல் எனச் சொல்வதை ஆராயின் தனது தாய்நாட்டின் பெயரையே தனக்கு வைத்தனர் எனக் கம்பநாடரே கருதினராவர்.

4. கம்பர் வடுகர் என்பதற்குக் காரணம்

வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றின் ஆயினும்
திடமுள ரகுகுலத் திராமன் தன்கதை
அடைவுடன் கேட்பவர் அமரர் ஆவரே. —இராம-பாயி-4

இதனால் கம்பர் காலத்தில் வடமொழி, தென்மொழி, வடுகு, கன்னடம் என்ற மொழிகளில் இராமன் கதைகள் இருந்தன எனத் தெரிகின்றோம். அதனால், கம்பர் இவ்விரா மாயண கதைகளைப் படிப்பதற்காக இந்நான்கு மொழிகளை யும் பயின்றனர். தென்கலையில் பெரும் புலவரும் கவிஞரும் ஆயினர்.

வடுகுமொழி கம்பர்க்குத் தாய்மொழி. வடுகமொழி பேசு வோர் வடுகர் என்ற பெயருடன் வாணகப்பாடி அல்லது வடுகவழி என்னும் தொண்டைநாட்டில் நிறையக் குடியிருந் தனர். சோழநாட்டில் மூவலூர், வெண்ணெய்நல்லூர், திரு வழுந்தூர், புதுவை முதலிய இடங்களில் கூட்டம் கூட்ட மாகக் குடியிருந்தனர்.

சேதிராசர் தெலுங்கர் கருநாடர் —பால-உலாவி-49

என்பதால் கம்பர் காலத்தில் வடுகுமொழி தெலுங்கு என் னும் பெயர் பெற்றிருந்தது. எனினும் தமிழ்நாட்டில் தெலுங்கு மொழி பேசும் இனங்களில் கம்பர் மரபினர் மொழியை வடுகு என்றும், கம்பர் மரபினர் வடுகர் என்றும் தமிழர் வழங்கினர். தாம் வடுகர் என்பதற்கும், வடுகமொழிக் கலை அறிவை மிக வும் உள்ளவர் என்பதைத் தமிழரும் மற்றவரும் அறிதல் வேண்டும் என்பதற்கும் தாம் இயற்றிய இராமகாதையில் பலப்பல இடங்களில் வடுகமொழிகளை வைத்திருத்தல் காண்போம்.

1. மூங்கையான் பேசலுற்றான் —பால-நாட்டு-1
மூங்கையர் சொல் பெற்றென்ன —உயுத்த-திருமுடிசூ-10

இவற்றில் வரும் மூங்கை என்பதற்கு ஊமை எனப் பொருள். பேசாதவனை, ஊமை எனத் தமிழர் சொல்வர். மூங்கை எனச் சொல்லார். வடுகர் தெலுங்கர் ஊமை எனச் சொல்லார். மூங்கை என இரு வழக்கிலும் சொல்வர்.

2. மசரதம் அணியவர் —பால-திருவவதாரம்-24

மசரதம் என்பது கொசு. வடுகர் தெலுங்கர் கொசுவை மசரதம் என்பர். தமிழர் என்னார்.

3. தம்மி மிடைந்தென—பால-எழுச்சி-30

தம்மி என்பது தாமரை. வடுகர் தாமரையைத் தம்மி என்பர். தமிழர் என்னார். இதைப்பற்றிச் 'செந்தமிழ்' தொகுதி–3, பக்கம் 101-ல் "தெலுங்குமொழிப் பெருநூல்கள் எல்லாம் நன்று வழங்கப்பட்ட "தம்மி" என்னும் அரும்பதத்தையும் எடுத்தாண்ட சிறப்பால் கம்பருக்குத் தெலுங்குமொழி நூலுணர்ச்சியும் உண்டு" என்றிருப்பதால் கம்பர் வடுகமொழிப் புலவராவர்.

4. வெதிர்பொள் கோலினர் —அயோத்தி-கங்கை-12

வெதிர் என்பது மூங்கில். தமிழர் மூங்கிலை வெதிர் என்னார். வடுகர் மூங்கிலை "வெதிர்" என்பர்.

5. தோலுடை நிமிர் கோலில் துழவிட நெடுநாவாய்
—கங்கை-66

தோல் உடை நிமர்கோல் என்பதற்குத் தள்ளும் தன்மையுடைய நிமிர்ந்த கோல் என உரையும், தோல் என்பது தள்ளுதல் என்னும் பொருளுள்ள தெலுங்குச் சொல். விளக்கவுரையும் எழுதியுள்ளனர். இன்றும் தோல் = தள்ளு, ஓட்டு என்னும் பொருளில் தமிழர் வழங்கார்; வடுகர் கம்மவார் வழங்குவர்.

6. காலின்மா மதலை —கிட்கிந்தா-அனும-2

காலி என்பது காற்று. தமிழர் காற்றைக் காலி என்னார். வடுகர் காற்றைக் "காலி" என்பர்.

7. கிச்சிடை இடும் என —பிணிவீட்டு-3
கிச்சுறு கிரி —படைத்தலைவர்வதை-45

கிச்சு என்பது நெருப்பு. தமிழர் நெருப்பைக் கிச்சு என்னார். வடுகர் கம்மவார் நெருப்பைக் "கிச்சு" என்பர். வடுகமொழியின் திருபு கன்னடம். ஆதலால் கன்னடரும் நெருப்பைக் கிச்சு என்பர்.

8. அவிரிழைக் குப்பை —பிலநீங்கு-35

குப்பை என்பது குவியல். தமிழர் குவியலைக் குப்பை என்னார்.

வடுகர் கம்மவார் தானியம் கதிர் குவியல்களைக் "குப்ப" என்பர்.

9. நென்னல் கண்ட திருமேனி —கடல்காண்-5

நென்னல் என்பது நேற்று. தமிழர் நென்னல் நேற்று என்னும் பொருளில் உலகவழக்கில் வழங்கார். வடுகர் நென்னல், நென்ன, நின்ன என உலகவழக்கில் வழங்குவர்.

10. தள்ளவாரி நிலைமையும் —ஒற்றுக்கேள்வி–57

பிங்கல நிகண்டு ஏழாவது 133, 134-ல் "தூங்கல், அசைதல் அலசுதல் சோம்பே", "சடம், மடி, தள்ளுவாரமும் தகுமே" என்பதால் தள்ளவாரி என்பவன் வீணுகச் சோம்பித் திரிகின்றவன் என்பர். இவனைத் தள்ளவாரி எனத் தமிழர் சொல்வதில்லை. இன்றும் வடுகர் கம்மவார் சொல்லுகின்றனர். தள்ளவாரி என்பது தெள்ளவாரி, தெல்லவாரி எனவும் வழங்குகின்றது.

11. அக்கட இராவணற் கடைந்த ஆற்றல்
—இராவணன்மந்தரம்-32

அக்கட என்பது அதிசயம். தமிழர் அதிசயம் என்னும் பொருளில் வழங்கார். வடுகர் வழங்குவர்.

12. அந்து செய்குவன் —இராவணன் வதை–61

அந்து என்பது அவ்வாறு. தமிழர் அவ்வாறு என்னும் பொருளில் வழங்கார். வடுகர் கம்மவார் வழங்குவர்.

இராமகதையில் வெள்ளம் என்னும் சொல் அரசியல் படலம் 6லும், கோலம் காண் படலம் 6லும் வருகின்றது. நீரை வெள்ளம் எனத் தமிழர் உலகவழக்கில் வழங்கார். மலையாளர் வழங்குவர். மேலே குறித்த செய்யுட்களில் வரும் கிச்சு, அக்கட, அந்து என்னும் சொற்களை உலகவழக்கில் கன்னடியரும் வழங்குவர். இதனுல் கம்பரை மலையாளன், கன்னடன் என ஏன் சொல்லக்கூடாதென்பர்? தமிழின் திரிபாகிய மலையாளமொழி 10ஆம் நூற்ருண்டில் தமிழிலிருந்தும் பிரிந்து உலகவழக்கில் பேசப்பட்டுவந்து 13ஆம் நூற்ருண்டில் இலக்கணம் அமைக்கப்பெற்றுச் செய்யுள்வழக்கில் வந்தது. வடுகின் திரிபாகிய கன்னடமொழி 5ஆம் நூற்ருண்டில் வடுகிலிருந்தும் பிரிந்து உலகவழக்கில் பேசப்பட்டுவந்து 10ஆம் நூற்ருண்டில் இலக்கணம் அமைக்கப்பெற்றுச்

செய்யுள்வழக்கில் வந்தது. இதனால் கம்பர்காலம் 12 ஆம் நூற்ருண்டில் உருப்பெற்றமையாத மலையாளச் சொல் இராம கதையில் வந்திருந்தாலும் அது தமிழ்ச் சொல்லேயாகும். கம்பர் காலத்திற்கு 2 நூற்ருண்டுகளுக்கு முன்னர் உருப்பெற்றமைந்த கன்னடச் சொல் இராமகதையில் வந்திருந்தாலும் அது வடுகச் சொல்லேயாகும். இதனால் கம்பர் மலையாளர், கன்னடர் ஆகார். வரலாற்றுத் தொடக்கத்திலிருந்தே தமிழ் மொழியைப்போல் தனி மொழியாக இருந்த வடுகமொழிச் சொற்களைக் கம்பர் தமது இராமகதையில் ஆங்காங்கு வைத்துப் பாடியிருப்பதால் கம்பர் தாய்மொழி வடுகமொழியாகும்; கம்பர் வடுகர் ஆவார்.

5. கம்பர் குலம் வடுகர் கம்மவார் குலம்

தொழும் குலத்தில் பிறந்தாலென்? சுடர்முடிமன் னவராகி
எழும் குலத்தில் பிறந்தாலென்? இவர்க்குப்பின் வணிகரெனும்
செழும் குலத்தில் பிறந்தாலென்? சிறப்புடையர் ஆனலென்?
உழுங் குலத்தில் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே.
—ஏரெ-பா-8

விழுப்பாரினி எம்மையார்? பிறவித்துயர் மெய்யுறவந்து
அழுப்பாதொழிமின்; அருவினைகாள்! நும்மை அப்புறத்தே
இழுப்பான் ஒருவன்வந் தின்றுநின்ருன்; இளநாகுசங்கம்
கொழுப்பாய் மருதம்சுலாம் குருகூர்எம் குலக்கொழுந்தே.
—சடகோபர-செ-26

இவற்றுள் எக்குலங்களிலும் பிறந்தவரைக் காட்டிலும் உழும் குலத்தில் பிறந்தவரே உலகு உய்யப் பிறந்த உயர் குலத்தோர் என்கின்றனர். அவ்வுயர்ந்த உழுங்குலமாகிய வேளாளர் குலமே தன் குலம் என்பதற்காக "எம் குலம்" என்றனர். ஆழ்வார்களில் நம்மாழ்வார் பிறந்த குலம் வேளாளர் குலம் எனக் குரு பரம்பரையினரும், வரலாற்றுக்காரரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்டனர். எனவே, திருக்குருகூரில் நம்மாழ்வார் தோன்றிய வேளாளர் குலமே தனது குலம் என்பதைத் தெளிவு செய்வதற்காக, "குருகூர்எம் குலக்கொழுந்தே" என்றனர். கம்பர் வேளாளர் குலத்தினர் என்பதற்குச் சான்ருகத் திருமணம் செல்வகேசவராய முதலியார், எம். எ. 'கம்பநாடர்' 20ஆம் பக்கம் ''உழும் குலத்தில் பிறந்தாரே உலகு உய்யப் பிறந்தாரே" என வேளாளரைப் புகழ்ந்து

பாடிய ஏரெழுபது என்னும் நூலைக் கூலிக்குப்பாடியிருக்க லாம். தமது அன்ன தாதாவான சடையப்பரை இராமாயா ணத்தில் பல இடத்திலும் புகழ்ந்ததன்றி, திருவபிடேகப்பட லத்தில் 'வெண்ணெய்யூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்கவாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி' எனப் பாடியிருப்பதும், சடகோபரந்தாதி 26 ஆம் செய்யுளில் வேளாண் மரபினரான நம்மாழ்வாரைக் 'குருகூர் எங்கள் குலக்கொழுந்தே' எனக் கூறியிருப்பதும் இவர் வேளாளரே எனக்கொள்ளக் கிடக்கின்றன. 'சீரணி சோழநாட்டுத் திருவ ழுந்தூர் உவச்சன்' என்ற பாடமும், 'கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன்' என வாணியன் தாதன் இவரைப் பாடிய வசைப் பாட்டும் கம்பரை ஓச்சன் என்பார்க்கு இயைந்த சான்று, ஆனால் சந்தத்தை நோக்கும் பொழுது 'திருவழுந்தூருவச்சன்' என்ற பாடம் விசுவாமித்ர ஸ்ருஷ்டி யாய்ச் செருகிவிடப்பட்டதென்பது வெட்ட வெளி என எழுதியுள்ளனர். ஏன்? 'சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூரில் வாழ்வோன்' என்னும் அடியில் 6 சீர்களும் 2 அசைச் சீர்களாகப் பொருத்தமாக வந்துள்ளன. அங்ஙனமின்றி 'திருவழுந்தூர் உவச்சன்என்பதை திருவழுந்தூரு வச்சன்' எனச் சொல்லின் 'தூரு வச்சன்' எனச் சீர் பிரித்துச் சொல்லல் வேண்டும். அங்ஙனம் பிரித்தல் பொருத்த மன்று; பெயர்ச் சொல்லைப் பொருத்தமின்றிப் பிரிக்கும் வகையுளிக் குற்றம் ஆகும். மேலும் திருவழுந்தூர் உவச் சன் எனச் சீர்பிரிப்பதே பொருத்தமாகும். அப்பொழுது 'ஊர்' ஓரசைச் சீராகும். ஓரசைச் சீர் அச்செய்யுளில் வராது. எனவே, பிற்காலத்தார் கம்பர் பேரில் கட்டியக் கட்டுக்கதை களில் ஒன்றாக உவச்சன் கதையையும் கட்டி அச் செய்யுளில் செருகிவிட்டனர். இதனைச் செவ்வனே தேர்ந்து தெளிந்து 'கம்பநாடர்' புத்தகம் பக்கம் 18 லும், கோபாலகிருஷ்ணமாச் சாரியார் பாலகாண்டம் உரைப்பதிப்பிலும் கம்பன் கவிதை பக்கம் 97 லும் 'திருவழுந்தூரில் வாழ்வோன்' எனச் சொல்லினர்.

"ஆதித்தன் கம்பன், ஆதித்தன் சேய், ஆதித்தன் புதல் வன்'' என ஆதித்தனுக்கும் கம்பனுக்குமுள்ள தொடர்பைப் பற்றிச் சொன்னதைப்போல எங்குமே எவருமே ஒரு தொடர்பேனும் உவச்சருக்கும் கம்பருக்கும் உள்ளதாகச் சொல்லவில்லை. இதனால் கம்பர் குலம் கோவில் பூசாரி

யான உவச்சர் குலம் அன்று என்பதும் வேளாளர் குலம் என்பதும், ஆதித்தன் மகன் கம்பர் என்பதும் உண்மையும் உறுதியும் ஆயிற்று. இதனை ஒப்புக் கொண்டே 'கம்பநாடர்' பத்திரிகையில் கம்பர் சரிதம் 19 ஆம் பக்கத்தில் 'கம்பர் வேளாளரைப் புகழ்ந்து பாடியிருப்பதால், இவர் வேளாளரே' என்று மோ. வே. கோவிந்தராஜய்யங்கார் எழுதியுள்ளார். கவிச்சக்கரவர்த்தி கம்பர் 74 ஆம் பக்கத்தில் 'வேளாளராகிய சடையப்பரை இராமயணத்தில் பல இடங்களில் புகழ்ந்திருப்பதாலும் அவருடன் உணவு உட்கொண்டதாகச் சொல்லியிருப்பதாலும் கம்பரை வேளாளர் என்றே துணிய வேண்டியிருக்கிறது' என உள்ளது. இச்சான்றுகளே கம்பர் வேளாளர் என்பதற்குச் சாலும். இனிக் 'கைம்மணிச் சீர்' என்பதற்குக் 'கம்பர் மும்மணிக் கோவை' என்னும் தலைப்பைக் காண்க.

ஆந்திர மாவட்டங்களிலிருந்து தமிழ் நாட்டிற்கு கம்மவார் வாணகப்பாடி என்னும் வடுக நாட்டின் வழியாக வந்தனர். அவருள் சிலர் வடுகநாட்டில் தங்கினர்; சிலர் தமிழ் நாட்டிற்குள் வந்தனர். வடுகநாட்டில் தங்கிய வடுகரை வாணர் என்றும் சொல்வர். கம்பர் காலத்திற்குப் பின்னர் வடுகநாட்டு ஆறையூரில் வாணன் என்பவன் மாபெரும் செல்வனும் வள்ளலும் ஆக இருந்தனன். கம்பரும் வடுக வழி வாணன் இனத்தவராதலால் 'கம்ப வாணன்' எனத் தொண்டைமண்டல சதகம் செய்யுள் 57-ல் சொல்லியுள்ளது. எனவே கம்பர் வடுகவழிநாட்டு வேளாளராவார். உழு தொழில் செய்பவர் அனைவருக்கும் வேளாளர் என்பது பொதுப் பெயர். அவருள் காப்பார் என்ற ஓர் பிரிவினருளர். காப்பார் தமிழ்ச் சொல். அது வடுகில் காபுலு காபாண்ளு என வழங்குகின்றது. தமிழ் நாட்டில் காபுலு காபாண்ளு என இன்னும் மற்றைய தெலுங்கரால் அழைக்கப் பெறுபவர் கம்மவாரே யாவர். கம்பரும் 'காப்பாரே வேளாளர் காண்' எனச் சொன்னதும் காப்பவர் கம்மவார் என்னும் குறிப்புத் தெரிவித்ததற்காம்.

'செந்தமிழ்' தொகுதி 3. பக்கம்87-ல் 'இப்போதும் கம்பர் வமிசத்தினர் கம்பர் மகள் காவேரி என்னும் கற்புடையாட்டியைத் தங்கள் வீட்டுத் தெய்வமாகக் கொண்டு அவளது திருவுருவத்தை வழிபட்டு வருகின்றனர்' என உள்ளது. இன்றும் கம்மவார் குலத்தில் ராயார் என்பவர் காவேரி

யம்மாளைக் குலதெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர். ‘கம்மவார் சரித்திரம்’ பக்கம் 225 இல் ‘ராயல், ராயா, ராயுடு’ என்னும் வீட்டுப் பெயர்கள் இருக்கின்றன. அப்பெயர்களில் ஒன்றுதான் ராயார் என வழங்குகின்றது. கம்பர் பாடிய ஏரெழுபது அரங்கேற்றியபின் கம்பருக்கு வரிசைகள் தந்தவரில் ஒருவன் சேதிராயனும் இந்த ராயர் குலத்தினன் ஆவான். எனவே, கம்பர் கம்மவாரில் ராயார் குலத்தினர் ஆவர்.

6 - கம்பர் அரசரிடம் செல்லாமல் சடையப்பரிடம் சென்றனர்

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராமன் ஊர் —தமிழ் நாவலர் சரிதை-77

இப்பாடல் சரராமனைக்கண்டு முதன் முதல் கம்பர் பாடிய பாட்டாகும். தகப்பன் ஆதித்தனிடம் இருந்து கொண்டே வடகலை, தென் கலை, வடுகு, கன்னடம் என்னும் நான்கு மொழிகளிலும் சிறந்த புலமை பெற்றார். தென் மொழியில் கவி பாடும் கலைத் திறமையும் பெற்றார். எனினும் அன்றி ருந்த சோழ அரசனிடம் போகாமல், சரராமனிடம் சென்றனர். ஏன்?

1. சரராமன் வேளாளன்.
2. சரராமன் தொண்டைமண்டலம் ஆலி நாட்டார் மரபினன்.
3, சரராமன் இதனால் வடுக இனத்தவன்.
4. சரராமன் தன்னைப்புகழ்ந்து பாடவேண்டும் விருப்பமில்லாதவன்.
5. சரராமன் எவர்க்கும் வரையாது கொடுக்கும் வள்ளல்
6. சரராமன் ஒரு மனைவியோடு வாழும் வரம்புடையவன்.
7. சரராமன் எல்லா நல்லொழுக்கமும் உள்ளவன்.

இவற்றையெல்லாம் சிந்தித்துக் கம்பர் சரராமனிடம் சென்றார். அன்றைய அரசரோ சரராமன் பண்புகளுக்கு மாறானவர்.

மன்னர் குறுநில மன்னர் களியாட்டில்
பின்னும் களிப்பைப் பெருக்கற்காய்—உன்னுவிதம்
ஊடலுக்கும் கூடலுக்கும் உற்றகலைச் சாறுபிழி
பாடலுக்கும் உண்டே பணம்.

—திருவள்ளுவர் காவியம்

எனும் வகையில் அரசர்களைப்பாடிப்பணம் பெற்று வாழ்க்கை நடத்தல் தம் கொள்கைக்கு முற்றும் மாருனது எனக் கம்பர் எவ்வரசரிடமும் செல்லவில்லை.

சரராமன், வெண்ணை நல்லூர்ச்சடையன், புதுவைச் சடையன், புதுவைக் கொடையன், வெண்ணைத்திரிகர்த்தன், புதுவைத்திரிகர்த்தன் என்பன சடையப்பனைக் குறிக்கும் பெயர்கள். சடையப்பன் சங்கரன் மகன். இணையார மார்பன் எனும் தம்பியையுடையவன். ஈழநாடு வறுமையுற்ற பொழுது அந்நாட்டரசன் வேண்டுகோளின்பேரில் 1000 படகு (கப்பல்) களில் நெல்லையனுப்பி அவ்வீழநாட்டின் வறுமையைப்போக்கினவன். நாள் நாளும் பலப்பல வகையில் வந்தவருக்கெல்லாம் பாலும் பழமும் உள்ள சிறந்த உணவைக் கொடுப்பவன். பாவலரைப் பரிந்து போற்றும் பண்புடையவன். இத்தகைய மாசில்லா மாண்பமைந்த சடையப்ப வள்ளலைக் கம்பர் கண்டு 'மோட்டெருமை' என்னும் தலைப்புப் பாடல் பாடினர். அப்பாடலில் தன்னைப் புகழாமல் தனது வெண்ணைநல்லூரைப் புகழ்ந்து பாடியிருத்தலைக் கண்டு களிப்புற்றனன். சடையப்பன் தற்புகழ்ச்சி வேண்டாதவன். கம்பரோ தனிமனிதனைப்பாடும் தன்மையில்லாதவர். எனவே சடையப்பர் கம்பரை வரவேற்றுத் தனது வீட்டிலேயே வைத்துக்கொள்வதற்கு மகிழ்ந்தனன். கம்பரோ சடையப்பன் வீட்டிலிருப்பதற்கு உவந்தனர். உண்ணல், உடுத்தல், உறைதல், உவத்தல் முதலியவற்றில் அண்ணன் தம்பிகளைப் போல இருந்தனர். வயது முறையில் சடையப்பனை அண்ணன் ஆகவும், இணையாரமார்பனைத் தம்பியாகவும் கம்பர் கொண்டிருந்தனர். சடையப்பனும், இணையாரமார்பனும் செல்வத்திலோ, கம்பர் கல்வியிலோ, வேற்றுமையும் உயர்வும் காட்டாமல், ஒற்றுமையும் உவகையும்கொண்டே இருந்து வந்தனர். சடையப்பனுக்குப் புதுவை, வெண்ணை, வியலூர் முதலிய ஊர்களிற் பெருங்காணி நிலங்கள் இருந்தமையால் அங்கும் சடையப்பனும் தம்பியும் இருப்பர். புதுவை கடல் துறைப்பட்டினமாதலால் அங்கும் இருப்பர். புதுவை,

வெண்ணெ, வியலூர் எனும் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அண்மையன. இவ்வூர்களில் அண்ணன் தம்பிகளுடன் கம்பர் இருந்து அவர்களின் பலப்பலவகைக் காணி வளச் செல்வங்களைக் கண்டுகண்டு களித்தனர். கம்பருடன் இருந்து அவ்வண்ணன் தம்பியர் பலப்பலவகைக் கலைச் செல்வங் களைக் கேட்டுக்கேட்டு மகிழ்ந்தனர்.

இன்று குற்றாலம் இரயில் நிலையத்திற்கு வடமேற்கில் 2 மைலில் வெண்ணெய்நல்லூர் உள்ளது. சடையப்ப வள்ளல் வீடு இருந்த இடம் சடையன் திடல் என்கின்றனர். அத் திடலில் வீடுகள் இருந்ததற்கான அடையாளங்கள்உள. அத் திடலுக்குத் தென்மேற்கில் பெருமாள் கோவிலும், வடகிழக்கில் சிவன் கோவிலும் இருந்து பாழாயின. அவற்றிற்கான உருவங்கள் காணப்படுகின்றன. அத்திடலுக்குத் தென் புறம் உள்ள வயலைக் கழுநீர்பாய்ந்தான் வயல் என்கின்றனர். இதைக் கண்டுதான் கம்பர்

> முட்டில் அட்டில் முழங்குற வாக்கிய
> நெட்டி லைக்கழு நீர்நெடு நீத்தந்தான்
> பட்ட மென்கமு கோங்கு படைப்பைபோய்
> நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே

என் நாட்டுப் படலம் 26 இல் சொல்லினர்.

இங்ஙனம் பாடுவதற்கான கலைகளில் கம்பர் நாள் நாளும் நிறைவுற்று வருவதைக் கண்ட நல்லூர்ச் சரராமன் கம்பரோடு மூவரானோம் எனக் களித்திருந்தனர். இக் களிப்பைக் கண்ட கம்பர் சாகேதச் சரராமன் திருவாய் மொழியாகக் 'குகனொடுமைவரானோம்' என வீடணன் அடைக்கலப் படலம் 143 இல் கூறினர்:

7 - கம்பர் பாடிய மும்மணிக் கோவை.

கர்பநாடன் சொன்ன மும்மணிக்கோவை என்பதினால் கம்பர் மும்மணிக் கோவை என ஒன்று பாடியுள்ளனர் எனத் தெரிகின்றோம். மும்மணிக் கோவை என்பது மூன்று அரசர்களைப்பற்றிப் பாடிய ஒரு கோவை என்றே இன்று வரையும் புலவர் என்போர் யாவரும் ஒருமுகமாகப் பொருள் கொண்டிருக்கின்றனர். அது மும்மன்னர்களைப் பற்றிப் பாடிய கோவையன்று; ஆயின், மூவேந்தர் கோவை என்

றிருக்கும். அங்ஙனமின்றி மும்மணிக் கோவை என்றிருப்ப தால், யாரோ ஒருவரைப்பற்றியதாகும். அவ்வொருவர் வெண்ணெய்த்திரி கர்த்தராயன் சடையப்பர் ஆவர்.

மணி என்ருல் இங்கு பாடல்; மும்மணி என்பது மூன்று வகையான பாடல். நான்மணி என்பது நான்கு வகையான பாடல். ஒருவரைப்பற்றி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா என்னும் மூன்று வகையான பாடல்களைப் பாடிய நூலுக்கு மும்மணிக் கோவை என்றும்; வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால் வகைப் பாடல்களுள்ள நூலுக்கு நான்மணி மாலை என்றும் வழங்குகின்றனர். இங்ஙனம் 3—4 வகையான செய்யுள் கோவை மாலைகளையே மும்மணிக் கோவை, நான் மணி மாலை என வேதாந்த தேசிகரும், சிவப்பிரகாசரும், குமரகுருபரரும் ஒரு தலைவனைப்பற்றியே பாடியிருக்கின்ற னர். ஒருவரேனும் மும்மணிக் கோவை நான்மணி மாலை என 3—4, தலைவர்களைப் பற்றிப் பாடவில்லை. எனவே கம்பர் பாடிய மும்மணிக் கோவையும் வெண்ணெய்த்திரி கர்த்தன் சடையப்பரைப்பற்றிப் பாடிய 3 வகையான பாட்டுக் கள் உள்ள நூல் என்பதே புலவர் வழக்கத்திற்குப் பொருந் துவதாகும்.

கம்பர் சோழ நாட்டில் மும்மன்னரால் போற்றப்பெறும் சடையப்பர் வீட்டிலிருந்து கொண்டு தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத சோழனையோ, மற்றைப் பாண்டியன் சேரனையோ பாடவேண்டும் என்னும் அவசியமே இன்று. அதனுல் மும்மணிக் கோவை மும்மன்னர் பேரில் பாடிய தன்று. பல வகைகளிலும் மூவேந்தரையும் காத்தருளிய கர்த்தா என்பதற்காகத் திரிகர்த்த ராயன் என்னும் பட் டத்தை மூவேந்தரும் ஒருமனதாகத் தந்தனர். எனவே, திரிகர்த்தன் என்னும் பொருளுக்கேற்ப ஒருவகை இரு வகைப் பாட்டுகளில் பாடாமல் மூவகைப் பாட்டுகளில் சடை யப்பர்மேல் பாடி மும்மணிக்கோவை எனப் பெயர் வைத்த னர். இது வரலாற்றுக்குப் பொருந்திய உண்மை என்பதை ஐயர் அனைவரும் அறிக; அறிக.

8 - கம்பர் ஏரெழுபது பாடினர்.

ஆழித்தேவர் கடலானுர்; அல்லாத்தேவ ரம்பலத்தார்;
ஊழித்தேவர் தாங்கூடி உலகங்காக்க வல்லாரோ?
வாழித்தேவர் திருமக்கள் வையம்புரக்கும் பெருக்காளர்
மேழித்தேவர் பெருமைக்கு வேறுந்தேவர் கூறேனே.

இது கம்பர் பாடிய ஏரெழுபது பாயிரம் 7 வது பாட்டாக உள்ளது. அதற்குமேல் 6 பாட்டுக்கள் கணபதி, திரிமூர்த்திகள், நாமகள், சோழமண்டலச் சிறப்பு, சோழ ராசன் சிறப்பு, மகாநாட்டுச் சிறப்பு என உள்ளன.

1—தலைப்புச் செய்யுளை ஆய்ந்து சொல்லிக் கொண்டே வந்து 'மேழித் தேவர் பெருமைக்கு வேறுந்தேவர் கூறேனே' என்பதைப் படித்தால் கம்பர் ஏரெழுபதுக்குக் காப்பாகத் தலைப்புப் பாட்டையே வைத்திருப்பர் எனத் தெரிவோம். அன்றியும் கணபதி, விநாயகன், யானைமுகன், வேழமுகன் என்னும் பெயர்களில் ஒன்றேனும் ஓரிடத்தேதேனும் இராமகாதையில் வரவில்லை. எனவே கணபதியைப் பற்றிக் கம்பர் பாடியிருக்கமாட்டார்.

2. நீற்ரேனும் மலரோனும் நெடியோனும் என்கின்ற
தோற்ருளர் இவராலே தொல்லுலகம் நிலைபெறுமோ?
மாற்ருத காவேரி வளநாடர் உழுங்கலப்பை
ஊற்ருணி உளதாயின் உலகுநிலை குலையாதே.

என ஏரெழுபதின் 4 ஆம் செய்யுளைப் பாடியவர் திரிமூர்த்திகளைப்பற்றிப் பாடியிருக்கமாட்டார். ஏன்? திரிமூர்த்திகளோ மற்றை மூர்த்திகளோ புராணகாலத்தில் கற்பனை செய்யப் பட்டவை என்பதை நன்கனம் அறிவர். அதனல் 'தோற்ருளர்' என்றனர். பாவனைப் பண்பில் தோன்றுகின்றவர் 'தோற்ருளர்'.

3—நாமகளைப் பற்றிச் சரசுவதி அந்தாதி என ஒன்று சொல்லியிருப்பதால், இங்குத் தனித்துப் பாடவேண்டிய அவசியமில்லை. 4- 5- 6இல் வரும் 3 சிறப்புக்களைப்பற்றி ஏரெழுபது பாடும்போழுது பாடவேண்டிய அவசியமில்லை. 3இல் சோழ அரசனைப்பற்றிச் சோழன் பாடச் சொன்ன பொழுதே சோழ அரசன் முன்னே பாடாதவர் இங்கு வேண்டாத இடத்தில் வேண்டிப் பாடுவாரல்லர். மகாநாட்டுச் சிறப்பைப்பற்றி மற்றவர் பாடவேண்டுமேயன்றிக் கம்பர் பாடினுரென்ருல் பொருத்தமுடையதன்று. இங்ஙனமே இராமகாதைத் தொடக்கத்திலுள்ள நம்மாழ்வார், சரசுவதி,

அனுமான் இவர்களின் துதிப்பாடல்கள் கம்பர் பாடியதாகச் சொல்வர். அவை கம்பர் பாடியனவல்ல. அவ்வாறேஏரெழு பதின் முன்னுள்ள அவ்வாறு பாடல்களும் கம்பர் பாடியன அல்ல. மேலும் ஏரெழுபது அரங்கேற்றும் அவைக்குச் சோழனோ, வேறு அரசரோ வந்ததாகச் சான்றுகள் இல்லை. இருந்த அரசரையே பாடாத கம்பர் இராத அரசரைப் பாடினர் என்றல் கம்பர் பெருமைக்குச் சிறுமை கற்பிப்பதாகும். ஏரெழுபதில் வாழ்த்துச் செய்யுளன்றி 68 செய்யுள்கள் உள்ளன. எனவே, தலைப்புக்காப்புச் செய்யுளையன்றி அதன் கீழுள்ள செய்யுட்களிரண்டைச் சேர்த்துக் கொண்டால் எழுபதாகும். இராமகாதை அகத்தியப்படலம் 21-ல்.

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் கும்தொழும் தேவர்க ளாகுவார்.

என்பதால் புராண காலத்தில் புனைந்துரைக்கப்பெற்ற விண்ணுலகக் கற்பனைத் தேவர்களைப் பற்றியும், கண்கூடாகக் காணும் மண்ணுலகத் தேவர்களைப் பற்றியும் கம்பர் கருத்துற அறிவர். அறிந்தே தலைப்புக் காப்புச் செய்யுள் மக்களுள் "உலகுய்யத் தோன்றி" மண்ணுலகத் தேவரான "மேழித் தேவரை"ப் போற்றியதாகும்.

9. கம்பருக்குச் சிறப்பு வரிசைகள் மக்கள் கொடுத்தனர்.

குணங்கொள் சடையன் புதுச்சேரிக் கொடையன் சேதிராயன் முதல்
கணங்கொள் பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூற
விளங்கும் பரிசில் ஈந்துபுவி ஏழும்புகழ் ஏர்எழுப தெனும்
மணங்கொள் பெருங்காப் பியப்பனுவல் வகித்தார்
சோழமண்டலமே.

கம்பர் தாம் பாடிய வேளாளர் மேன்மையைச் சொல்லும் "ஏரெழுபது" என்னும் நூலைக் கல்வியிலும், கலை அறிவிலும் சிறந்த சடையப்பன், புதுவைக் கொடையன், சேதிராயன் முதலிய வேளாளர் பெருமக்கள் கூடியிருந்த பேரவையில் படித்துப் பொருள் விளக்கம் சொல்லி அரங்கேற்றனர். அன்று சோழநாட்டை ஆளும் குலோத்துங்கசோழன் இவ்

வரங்கேற்றும் அவைக்கு வரவில்லை. அச்சோழன் பேரவையின் அமைச்சரோ அலுவலகத்தாரோ பரிசனங்களோ மற்று அரசனுக்கு வேண்டிய எவரோ வரவில்லை. அவ்வாறே பாண்டியன் சேரன் இவர்களும் இவர்களைச் சேர்ந்த மற்றைய அன்னோர்களும் வரவில்லை. இதனைத் தெளிவு செய்வதற்காகவே தலைப்புச் செய்யுளில் கணங்கொள் மன்னர் என்னுமல் "கணங்கள் பெரியார்" என்றனர். கம்பர் "ஏரெழுபது" பாடி அதனைப் பல படிகள் செய்து நாட்டில் பலப்பலரும் படிக்கும் படியாகச் செய்தனர். அத்தகைய படிகள் அரசனுக்கும் போயிருக்கும் அன்று சோழன் அவையில் அரசரவைப் புலவராக இருந்த ஒட்டக்கூத்தரும் ஏரெழுபது படித்திருப்பர்; அரசனுக்குப் பொருள் சொல்லியிருப்பர்; ஏரெழுபதுபற்றி அரசனுடன் உரையாடியிருப்பர். அவ்வாறே வாணியதாதன் புலவரும் உரையாடியிருப்பர். அவ்வுரையாடலில்,

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழ லவர். — உழவு–3

என்னும் முப்பாலை முதன்மொழியாகக் கொண்டியற்றியுள்ளன.

தென்னன்முடி சேரன்முடி தேங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கள்முடி
இன்னமுடி அன்றியும்மற் றெடுத்துரைத்த முடிகளெல்லாம்
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றே.

என்பது போன்ற ஏரெழுபது பாடல்களைச் சொல்லி அரசனின் அகத்தில் கம்பரை அரசனைப் பாட வைக்கவேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்கி வைத்தனர்.

ஏரெழுபது பாடி அரங்கேற்றுப்போது புதுவைச் சேதிராயனை விடம் தீண்டத் தீர்த்த வெண்பா

ஆழியான் பள்ளி அணையே! அவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே!—பூழியான்
பூணே! புரம்எரித்த பொற்சிலையில் பூட்டுகின்ற
நாணே! அகல நட. — 78

மங்கை ஒருபாகன் மார்பிலணி ஆரமே!
பொங்கு கடல்கடைந்த பொன்கயிறே!—திங்களைப்பும்
சீறுஅதன் மேலூறும் தெய்வத் திருநாணே!
ஏறிய பண்பே இறங்கு. — 79

எனத் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளது. இதனை ஒட்டி

அழுவதும் கொண்டு புலம்பாது நஞ்சுண்டது மறைத்தேர்
எழுபதும் கொண்டு புகழ்க்கம்ப வாணன் எழுப்ப விசை
முழுவதும் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக் கையின்
மழுவதும் கொண்டு புகழ் கொண்டதால் தொண்டை மண்டலமே

எனத் 'தொண்டை மண்டல சதகம்' — 57லும்

பாவலர்தாம், ஏரெழுபதோதி அரங்கேற்றும் களரியிலே
காரி விட நாகம் கடிக்கும் கை

எனத்'திருக்கை விளக்கம்'–69 – 67லும் பாடியிருக்கின்றனர். விடந்தீர்த்ததாகச் சொல்லும் வெண்பா 2உம் சிதம்பரத்தில் தில்லை மூவாயிரவர் ஒருவருக்கு விடம் தீண்டியதற்குப் பாடிய தென விநோதரசமஞ்சரியிலும், புலவர் புராணத்திலும் உள்ளது. அதைப்பற்றிய ஆராய்ச்சி இங்கு வேண்டாம். பாம்பாட்டி ஆடச் சொன்னால் பாம்பு ஆடும்; படுக்கச் சொன்னால் படுக்கும். இவ்வாறு அன்றும் இன்றும் இருந்தது; இருக்கின்றது. இதனைக்

கடிக்கும் வாளரவம் கேட்கும் மந்திரம் — நிந்தனைப்படலம் 59

என்கின்றனர். இங்கு அரவு ஆணைச் சொற்களாம் மந்திரத்தைக் கேட்டும் என்றாரேயன்றி அரவின் நஞ்சு தீரும் எனச் சொல்லவில்லை. பாம்பு கடித்தால் நச்சு உடம்பிலும், அச்சம் உளத்திலும் இருக்கும். உடம்பிலுள்ள நச்சைக் கடித்த இடத்தில் மருந்து வைத்தோ, வேறு வகையில் மருந்து கொடுத்தோ போக்கலாம். இஃது இன்றும் நடக்கின்ற முறை. கம்பர் அப்பாடல்களை மந்திரச் சொற்களாகச் சொல்லி வேறு ஏதேனும் மருந்துகளைக் கொடுத்தும் தீர்த்திருக்கலாம். உயுத்த காண்டத்தில் நாகபாசம், பிரும்மாத்திரம் என்னும் நச்சுப் படைப் புகையால் மயக்குண்டு கிடந்தவர்களை, மந்திரத்து எழுப்பவில்லை. கருடன் மருத்துமலை என்னும் மருந்துகளைக் கொண்டுவந்தே நச்சு மயக்கங்களைக் கம்பர் தீர்த்தனர். நாகம், விரியன் முதலிய பாம்புகளுக்கு விடமுண்டு; சாரை, நீர்ப் பாம்பு முதலியவற்றிற்கு விடமில்லை. விடம் இல்லாப் பாம்புகள் கடித்தாலும் அச்சத்தினால் மயக்கமுறுவர். அத்தகைய அச்சத்தை மந்திரச் சொற்களால் அச்சத்தைப் போக்கும் சொற்களால் போக்கலாம்; மயக்கந்தீர்ந்து குணம் அடைவர். அத்தகைய அச்சம் சேதிராயனுக்கு இருந்திருந்தால் அதைக் கம்பர் அவ்வாணைச் சொற்களால் தீர்த்திருப்பர். இதனால்

கம்பர் பாம்புக் கடிக்கு மந்திரமும், மருந்தும் தெரிந்தவர் எனத் தெரிகின்றோம்.

சேதிராயன் என்பவனைப்பற்றிப் பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 2–பக்கம் 87இல் "சேதித்திருநாடர் சேவகன்" — "இவன், சேதிநாடு எனவும், மலையமாநாடு எனவும் வழங்கப்பெற்ற நிலப்பரப்பைத் திருக்கோவலூர், கிளியூர் ஆகிய நகரங்களைத் தலைநகரங்கள் ஆகக்கொண்டு ஆட்சிபுரிந்த குறுநில மன்னன். சேதிராயன் மலைய குல அரசன் என்னும் பட்டங்களை உடையவன்'' என உள்ளது. வடுக வழி என்னும் பெரும் வாணர்ப்பாடி நாட்டைச் சேதி நாடு மலைய மாநாடு என முன்னர் வழங்கி இன்று திருக்கோவலூர் என்னும் பெயருள்ள அவ்வடுக வழி நடு நாடு எனப்படும். எனவே, வடுக வழி, வாணர்ப்பாடி நாட்டை ஆண்டவர் வடுகர் கம்மவார் மரபினரான வாணர் ஆவர். அவ்வாணர் "சேதிராயன்'' என்னும் பட்டம் பெற்ற மன்னவர். வாணர்குலச் சேதிராயன் கி. பி. 12ஆம் நூற்றுண்டில் இருந்தவன். சடையப்பனும் சேதிராயனும் ஏரெழுபது அரங்கேற்றும் அவையில் இருந்த பெருமக்களும் பலப்பல பரிசுகளும் வரிசைகளும் ஈந்தனர். இதனை, "கம்பநாடன் களிகூர, விளங்கும் பரிசில் ஈந்து" என்பதனுல் தெரிகின்றோம். அப்பரிசல்களாவன :—

1—இன்று, தஞ்சைக் குற்றுலம் இரயில் நிலையத்திற்குத் தென்கிழக்கில் 2 மைலில் உள்ள கம்பர் மேடே அன்று கம்பர் குடியிருந்த இடம். அது வெண்ணெய் நல்லூருக்குத் தென்கிழக்கே 4 மைல் அளவில் உள்ளதாகும். அவ்விடத்தில் குடியிருப்பதற்கேற்ற வீடும், மற்று வாழ்விற்கான வாய்ப்புக்களும் செய்துவைத்துக் கம்பருக்குக் கலைகளை ஆயும் கவலையன்றி வேறு எக்கவலைகளும் இல்லாமல் வைத்திருந்தனர்.

2—அக்காலம் மதிப்பிற்குரிய பெருமக்கள் செல்லும் முறைப்படி கம்பர் எங்குமே போவதற்கான ஒரு சிவகையும், பல்லக்கை எடுத்துக்கொண்டு போவதற்கு ஆட்களும், சிவகை புறப்படு முன்னும், புறப்பட்டுப் போகும்பொழுதும், புறப்பாடு நின்றபொழுதும் காளங்கள் ஊதுவதற்கு ஆட்களும், குடையைப் பிடிக்கவும், இருக்கும்பொழுதும், போகும்பொழுதும் அடைப்பைக்கும், சாமரம் வீசுவதற்கும், ஆட்களும் கம்பரின் வீட்டு வேலைக்கும், மற்ற வயல் வேலைகளுக்கும் ஆட்க

ளும், அவ்வாட்கள் என்றுமே கம்பரிடம் இருத்தற்கான வருவாய் வரும் வாய்ப்புக்களும் சடையப்பன், புதுவைக் கோன், சேதிராயன் முதலிய வேளாண் பெருமக்கள் செய்து வைத்தனர். அடைப்பைக்காரர் = வெற்றிலே பாக்குக் கொடுப்பவர். அடை = இலே. மலேயாளத்தார் வெற்றிலேயை அடை என்பர்.

இப்புத்தகத்திலுள்ள கம்பர் திருவுருவத்தைக் கருத்து றக் காணின், காதுகளில் குண்டலங்களும், மார்பில் ஆரங்களும், கைகள் தோள்களில் கடகங்களும், கால்களில் கழல்களும் காணலாம். அவ்வணிகள் அனைத்தும் ஏரெழுபது அரங்கேற்றும் பேரவையில் இருந்த வேளாண் பெருமக்கள் கொடுத்தனவாகும். கம்பர் அணிந்துள்ள இத்தகைய துணிகளை அக்காலப் புலவர் அணிந்திருந்தனர். இவற்றை முறையே பிற்காலச்சோழ சரிதம்-2 பக்கம் 78-166இல் உள்ள ஒட்டக்கூத்தர், சேக்கிழார் படங்களில் காணலாம்.

கம்பர் குடியிருப்பதற்கான ஓர் 50 சென்டு நிலத்தில் ஓர் வீடும், மற்று அவ்வாட்கள் இருப்பதற்கான வீடுகளும் பிறவும் கட்டிக்கொடுத்துக் கம்பருக்கும் மற்றவாட்களுக்கும் வேண்டிய வருவாய்களுக்கும் ஆகவேண்டிய வயலும் நிலங்களும் கொடுத்திருந்தனர். அந்நிலம் 30 வேலி என்பர். கம்பரும், கம்பருக்கு வேண்டியவரும் குடியிருக்கும் வீடுகளும் கம்பருக்கான வயல்களும் உள்ள நிலப்பரப்பிற்குக் கம்பநாடு எனப் பெயர் வைத்தனர். கம்பரைக் கம்பநாடன் என அழைத்தனர். இதற்கு மேற்கோளாகத் தலேப்புச் செய்யுளில் "கம்பநாடன்" எனல் காண்க. மற்றும் இராமபாயிரத்திற்கு முன்னுள்ள 7-8-11ஆம் பாடல்களில் "கம்பநாடன்" என வந்துள்ளன.

தலேப்புச் செய்யுளில் வரும் "பெருங்காப்பியப் பனுவல்" என்றது "ஏரெழுபது" பெருங்காப்பியம் ஆகாது. சிறு நூல் ஆகும். காப்பிய பெருநூல். எனவே, பெருங்காப்பியம் ஆகிய பனுவல் எனப் பண்புத் தொகையாகப் பொருள்கொள்ளாமல், பெருங்காப்பியம்-இராம காதையைப் பாடுவற்குக் காரணமான பனுவல் என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகக் கொள்க.

கம்பர் அணிந்துள்ள அணிகளும், பெற்றிருந்த வரிசைகளும், வருவாய் களும் எல்லாம் அவ்வேளாண் மேன்மக்கள்

கொடுத்தனவாகும். இவற்றைச் செவ்வனே தெரிந்திருந்தும் வேண்டும் என்றே மறைத்து மறப்பிப்பதற்காகச் 'செந்தமிழ்த் தொகுதி' 3இல் பக்கம் 7இல் "கம்பரது கல்வியும் காட்சியுமே காசினி முற்றும் மேம்படுத்துப் புகழ்ந்து பாராட்டுதலைச் சோழன் தெரிந்து, அவரைத் தன்பாலழைப்பித்துத் தான் கேள்வியுற்றதினும் இவர் 1000 பங்கு அதிகமாகப் பல்லாற்ருனும் சிறத்தலைக் கண்கூடாகக் கண்டு, அரசர்க்கொத்த வரிசை பல அளித்துக் "கவிச்சக்கரவர்த்தி" எனப் பட்டம் தந்து, அவ்வரிசைக்கும் பெயர்க்கும் தக நாடு ஒன்று நல்கித் தான் நல்கிய அந்நாட்டிற்குக் கம்பனுடு எனப் பெயர் வழங்குவித்துக் கம்பரைப் பெரிதும் உயர்த்தினன்" என எழுதியுள்ளனர். இங்ஙனம் எழுதுவதற்கு மேற்கோளாக சோழ அரசன் கம்பநாடருக்கு வரிசைகளும் பிறவும் தந்து மேன்மை செய்ததாகவோ, கம்பர் சோழனைப்பற்றிப் பாடியதாகவோ, அங்ஙனம் பிறர் பாடியதாகவோ ஒன்றுமே ஒரு சிறு குறிப்புமே, இவரோ எவரோ அன்றுமே இன்றுமே காட்டவில்லை. அன்றுமுதல் இன்றுவரை இன்னேரன்னேரெல்லாம் தமது வாழ்விற்கும் பெருமைக்கும் உயர்வாக

> வேந்தர் களியாட்டும் காம வெறியாட்டும்
> மாந்தர் பசிக்க மகிழாட்டும் — ஏய்ந்த
> மறைத்துப் புகழ்பாடி மன்னரைப் போற்றில்
> நிறைத்துடையூண் உண்டே நெடிது.
>
> — திருவள்ளுவர் காவியம்-பக். 27

எனப் பாடி வந்தமைபோலக் கம்பரையும் கருதினர்.

10. சடையப்பன் திரிகர்த்தராயன் எனும் வரிசை பெறுதல்

> அளிக்கும் படைமுவேந்தருங்கொண் டாடும் விருந்தா லதிசயமாய்த்
> திளைக்கும் திரிகர்த்த ராயன்எனச் செப்பும் வரிசைத்திறம் சேர்ந்தோ
> விளைக்கும் அரிசி மாற்றியநீர் வெள்ளம் கிழக்கு விளையுமென [ன்
> வளைக்குப் பெருமைப் புதுவையர்கோன் வளம்சேர் சோழ மண்டலமே

சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவேந்தரின் ஆட்சிக் காலங்களில் போர்களில்லாத ஆட்சி ஆண்டுகளேயில்லை. ஒவ்வொரு அரசனும் போர் செய்யவேண்டும். அப்போரில் முகத்திலும், மார்பிலும், அம்போ, வேலோ பட்டுப்

புண்களோ, அப்புண்களின் தழும்புகளோ உள்ளவனுயிருத்தல் வேண்டும். இவையில்லாத அரசன் இறந்தால் அவ்வரசனை வாளால் அறுத்துப் புண்களை உண்டாக்கி அடக்கம் செய்வர் என்பதைப் புறநானூறு 93ஆம் பாட்டால் தெரிகின்றோம். மேலும்,

> விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
> வைக்கும்தன் நாளை எடுத்து. —முப்பால்-776

இதற்குக் காலிங்கர் "போர்க்களத்துச் சென்று புக்கார் புறத்துப் படுதல் இன்றி முகத்தினும், தோளினும், மார்பினும் விழுமிய புண்ணாகிய வீரத்தழும்பு படப்பெறுத நாட்களும் உளஅன்றே; அவை எல்லாம் தனக்கு உளவாகக் கருதாது தன்னை வழுக்கிக் கழிந்தனவற்றுள் சிலவையாக அந்நாட்களை வேறே நீக்கி வைக்கும்'' என்றனர். இதனால் அரசனை "அமராபரணன்'' என்னும் பவணந்திப் பாயிரம். இத்தகைய தமிழ் மன்னர் மூவரும் ஓரிடத்தமர்ந்து விருந்துண்டதாக பிற்கால வரலாற்றில் காண்டல் அரிது. அங்ஙனமே அம்மும்மன்னரும் மன்னரல்லாத மற்றவர் வீட்டிற்கு வந்து விருந்துண்டதாக வரலாற்றில் காண்டல் அதனினும் அரிது. இவ்விரு வகையினும் காண்டற்கரிய விருந்து திருவெண்ணெய்நல்லூரில் நடந்தது. சடையப்பவள்ளல் மூவேந்தரையும் தமது வீட்டிற்கழைத்து விருந்து செய்யும் தகுதியும், பெருமையும், புகழும் படைத்தவர். புதுவை, மூவலூர், வெண்ணெய் முதலிய ஊர்களில் பெரும்பெருங்காணி நிலங்களும், பெரும்பெரும் செல்வங்களும் உள்ளவர். வரையாது கொடுக்கும் வள்ளல் தன்மையுள்ளவர். மன்னர்களுக்கும் வேண்டும் பொழுது வேண்டுவன கொடுக்கும் நிறைவுள்ளவர். இம்மன்னர்களால் விலை கொடுத்து வாங்க முடியாத அணிகள், ஆடைகள், சந்தனக்கலவைப் பொருள்களை வாங்கும் கனத்த கருவூலம் உள்ளவர். அநங்கனைச் செல்வர். ஈத்துண்டுவக்கும் இன்பம் உள்ளவர். இத்தகைய சடையப்ப வள்ளல் மூவேந்தருக்கும் பெருவிருந்து வைத்தனர். அவ்விருந்திற்கு மும்மன்னரும், மும்மன்னரின் அமைச்சர்களும், அலுவலர்களும், படைகளும், படை வீரர்களும் வந்திருந்தனர். மற்ற நாட்டிலுள்ள பலப்பல புலவர்களும், புரவலர்களும் வந்திருந்தனர். அனைவரும் ஆன்பாலும், தேனும், அரம்பை முதல் முக்கனியும் தேன் பாய உள்ள பெருவிருந்தை பலப்பல சுவை விருந்தை உண்டு உண்டு உவந்தனர்.

இவ்வுவப்புடன் மும்மன்னர் உரையாடல் முடிபாவது:- சடையப்ப வள்ளல் வடுகநாட்டினர் ஆயினும் பன்னூருண்டு களாகத் தமிழ்நாட்டில் பரம்பரையாக இருந்து தமிழ் உள்ளத் தர் ஆயினர். அதனல், நம்முள் பகை உணர்ச்சி புகையும் பொழுதெல்லாம் நமக்குள் நட்பு நன்னீர் ஊற்றி ஊற்றிப் போர்ப் புகையைப் போக்குவர். நம் நாடுகள் வறுமை நோயுற்றபொழுது அவ்வறுமைப் பிணியைப் போக்குவதற் காக நிலவள மருந்துகளைத் தந்துதந்து உதவுவர். அதற்காக நாம் நம் அவருக்குக் கொடுக்கும் விருந்தினும் மேலானதாக ஒரு வரிசையை—மாராயம்—தரவேண்டும் என முடிவு செய்த னர். மூவேந்தருக்குப் பலப்பலவகையில் உதவிகள் செய்த தற்காக் மூவேந்தர் பெயரால் ஒரு மாராயம் கொடுத்தல் வேண்டும். அம்மாராயம் வடுக இனத்து அரசர்களுக்கும் வழங்கியதாக இருத்தல் வேண்டும் என முடிவு செய்தனர். அம்முடிவில் மும்மன்னர்களையும் பலப்பல முறைகளில் பலப் பல காலம் சடையப்பர் காப்பாற்றியிருப்பதால் திரிகர்த்தன் என்றும், வடுக இனத்து அரசரின் மரபைக் குறிப்பதற்காக இராயன் என்றும் கொடுத்தல் வேண்டும் என ஒருமனதாக முடிவுசெய்து சடையப்ப வள்ளலுக்குத் "திரிகர்த்தராயன்" எனும் வரிசையை மும்மன்னரும் முகம் மலர்ந்து வழங்கினர்.

இராயர் :— விஜயநகரத்தரசருள் கிருஷ்ணதேவராய ருக்குச் சிறப்புப் பெயர் இராயர் அப்பாஜி கதைகளுள் வழங் குவதும் இவரையே என அபிதானசிந்தாமணி அநுபந்தத் திலுள்ளது. மேலும், 'கம்மவார் சரித்திரம்' 152 ஆம் பக்கத்தில் ''கம்மவார் தம் பெயர்களின் முடிவில் "ராயடு, ராயலு" என் னும் பட்டம் வைத்துக் கொள்ளும் வழக்கம் மிகப் பழங்காலத் தில் இருந்திருக்கிறது'' என்பதால் "ராயர்'' என்னும் சிறப்பு வரிசை வடுக இனத்துக் கம்மவாரின் சிறப்பு வரிசை" எனத் தெரிகின்றோம் மேலும், வைதும்பன் என்னும் தெலுங்க அரசன் ''ராயன்'' என்னும் சிறப்புப் பெயர்பெற்று வைதும்ப ராயன் என்றிருப்பதைப் 'பிற்காலச் சோழர் சரித்திரம்' 42-67-ஆம் பக்கங்களில் காணலாம். மேலும், 104-105 ஆம் பக்கங் களில் "குலோத்துங்க சோழ காடவராயன் என்பவன் பல்ல வர் குலத்தில் தோன்றிய ஒரு தலைவன். கி. பி. 1136இல் தென்னாற்காடு ஜில்லாவில் திருமாணிகுழியைச் சேர்ந்த நிலப்பரப்பில், நாடு காவல் புரியும் அரசாங்க அதிகாரியாய் நிலவியவன். அரசனல் அளிக்கப்பெற்ற "குலோத்துங்க

சோழ காடவராயன்,'' ''கச்சிராயன்'' என்னும் பட்டங்கள் பெற்றவன்'' என உள்ளது. இதனால் கம்மவார் மாமனான பல்லவனைப்போல 'ராயன்' என்னும் சிறப்பு வரிசையை ஈற்றில் கொண்ட 'திரிகர்த்தராயன்' என்னும் சிறப்புப்பெற்ற சடையப்பனும் வடுகநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து நடுநாட்டில் தங்கிய வடுக மரபினருள் ஒருவராவர்.

1—புரந்தர தாரு புதுவைச் சடையன்
இருந்தவிய லூர்தெற்கு மேற்கு—பரந்தபொன்னி
ஆற்றுநீ ரால்விளையும் அப்பால் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்விளையு மாம்.

என்னும் விளைவைச் சோழநாட்டினர்க்கேயன்றிக் கண்டி நாட்டிற்கும் அனுப்பியதை

தேனூர் தொடையார் பரராச சிங்கப் பெருமான் செழுந்தமிழுக்குக்
கானூர் நெல்லின் மலைகோடி கண்டிநாடு கரை சேரக்
கூனூர் கப்பல் ஆயிரத்தில் கொடு போயளித்த கொடைத் தடக்கை
மானு கரன்சங் கரன்சடையன் வளர்சேர் சோழ மண்டலமே.

எனப் புகழ்ந்தனர். பாண்டிய மன்னன் தந்த பொன் சிங்காதனத்தில் சடையப்ப வள்ளலை வீற்றிருக்கச் செய்து உலகத்தைக் காக்கும் கொற்றவன் என்பதற்காக ராயன் என்னும் வடுகர் கம்மவார் வரிசையைத் தந்து திரிகர்த்தராயன் எனக் கொண்டாடியதை

2 – யாமார் புகழ இயல்கம்ப நாடன் இராம ரொடும்
பாமாலை சூட்டும் குலமுடை யானைப் படி புரக்கக்
கோமாறன் இட்டபொன் சிங்கா தனம்பெற்ற கொற்ற வனைத்
தேமாலை அச்சம் தவிர்ப்பான் வெண்ணெய் திரிகர்த் தனையே

எனப் போற்றினர். இங்ஙனம் சடையன் என்னும் தரும தேவதைக்கு வெண்ணைத்திரிகர்த்தராயன் என்னும் வடுகர் கம்மவார் வரிசையைப் பெற்றமையைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்தினவர் மும்மன்னர் மட்டுமல்லர்; முவ்வமைச்சர் மட்டுமல்லர்; மூவரசின் அலுவலர் மட்டுமல்லர்; முந்நாட்டுப் புலவர் புரவலர் மட்டுமல்லர்; செம்பொன் அம்பலத்தானும் காவிரியில் துயிலும் கருணை மாமுகிலும் மகிழ்ந்து

வாழ்த்தினர் என்பதை

3- இரவுநண்பகல் ஆகிலென்பகல் இருளறுவிர வாகிலென்
இரவிஎண்டிசை மாறிலென்கடல் ஏழுமேறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகிலென் ஆகிலென்
வளமைஇன்புறு சோழமண்டல வாழ்க்கைகா ரணமாகவே
கருதுசெம்பொனின் அம்பலத்தொரு கடவுள்நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையர்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்தரு சடையன்ஒன்ருெரு தருமதேவதை வாழவே

என்றனர். 1. புரந்தர, 2. யாமார், 3. இரவு என்ற தலைப்புக்களுள்ள 3பாடல்களும் 'செந்தமிழ்' தொகுதி-3 பக்கம் 5-6இல் உள்ளன.

11. கம்பர் சடையப்பர் விருந்தைப் புகழ்தல்

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதும் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் தன்புகழை
யார்போற்ற வல்லார் அறிந்து. தமிழ்-நா-சரிதை-9

நாள்தோறும் புதுவைச் சடையப்ப வள்ளலின் அரண்மனைக்கு விருந்துக்கு வருபவர் காவிரியில் குளிப்பதையும், வந்து விருந்துண்பதையும், உண்டபின் காவிரியில் கைகளைக் கழுவுவதையும் கண்ணாரக் கண்டுகண்டு களிப்படைந்த கம்பர் இப்பாடலைப் பாடினர். இதனை ஒப்பியே

விருந்து நுகர்வோர் கைகழுவ விளங்கும் புனற்கா விரியென்ருர்
தருந்தா யனைய புகழ்ப்புதுவைச் சடையன் கொடையார் சாற்றவல் [லார்
பரிந்தார் எவர்க்கும் எப்போதும் பாலும் சோறும் பசிதீர
வருந்தா தளிக்க வல்லதன்ருே வளஞ்சேர் சோழ மண்டலமே.

எனப் பாடினர்.

12. கம்பர் முதல் முறை குலோத்துங்கன் வரவழைத்தும் பாடவில்லை

கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனுள் என்—இந்நீர்
உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே!
கரைகடக்க லாகாது காண்—தமிழ் நா. சரிதை-81.

எனக் கம்பர் பாடியதின் காரணமாவது:— ஓர் ஆடித் திங்கள் 18ஆம் பெருக்கில் காவிரி பெருக்கெடுத்து இரு கரைகளும் கடந்துபோகும் அளவில் போய்க்கொண்டிருந்தது. அப்பெருக்கைக் குலோத்துங்கசோழனுடன் ஒட்டக்கூத்தன், வாணியன் தாதன் முதலிய அரசரைப் பாடும் புலவர் பலரும் அரண்மனையின் மேல் மாடியிலிருந்து காவிரிப் பெருக்கைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

சோழன் காவிரியைப் பற்றிப் புலவர் பாடவேண்டும் என்றும், அதில் தன்னைப் பற்றிய பெருமை இருக்கவேண்டும் என்றும் எண்ணிய குறிப்பைக் கூருமல் கூறிப் புலவரைப் பாடச் சொன்ஞன்.

ஒட்டக்கூத்தன் அக்குறிப்புரையை அறிந்து கொண்டு, அரசே! யாம் பாடுவோம்; பாடியிருக்கிரும். இனிக் கம்ப நாடரைப் பாடச் சொல்லவேண்டும். கம்ப நாடன் "மெய் கழுவி'' என்னும் பாடலில் காவிரிப் பெருக்கினும், சடையப்பன் புகழ்ப் பெருக்கம் மிகுதி எனப்பாடியுள்ளார். இன்று கம்ப நாடரை வரவழைத்துப் பாடச் சொன்ஞல் அவ்வாறே பாடுவர். அதனுல், கம்பநாடருக்கும் அரசருக்கும் பாடுவதற்கும் பாடப்படுவதற்கும் ஆன வாய்ப்புக்கள் வரவில்லையே எனும் குறைகள் தீர்ந்து விடும். கம்பநாடரும் என்னைப் போலாகி என்னுடன் இருக்கவில்லையே எனும் என் குறையும் தீர்ந்துவிடும் என எண்ணிக்கொண்டு கம்பநாடரை வரவழைக்க வேண்டும் என்றனன்.

அரசன் கம்பநாடரை அழைத்துவர ஆட்களை அனுப்பினன்.

கம்பநாடர்:- தனக்குரிய அணிகலன்களை அணிந்து கொண்டு, சிவிகையில் அமர்ந்து, இருபுறமும் சமரை வீசியும், காளம் ஊதியும், குடை பிடித்தும், அடைப்பைக்காரன் பாக்குக் கொடுத்து, வெற்றிலை மடித்துக் கொடுத்தும் பரிசனங்கள் பின் தொடரச் சோழன் அரண்மனைக்கு வந்தனர்.

அனைவர் :- அரசனும் புலவரும் கம்பநாடரை எதிர் கொண்டழைத்துப் போய் மேன் மாடியில் அமர்த்தினர் ; அமர்ந்தனர்.

ஒட்டக்கூத்தன் :- ஒருவருடன் ஒருவர் உரையாடுங் கால் கம்பநாடரின் கைகுலுக்கிக் கம்பநாடரே! காவிரியின் வெள்ளப்பெருக்கைக் காண்மின் அன்று இக்காவிரியைப்பற் றிப் பாடினதைப் போல இன்றும் பாடவேண்டும் எனக் குறிப்புரைத்து வேண்டினர்.

கம்பநாடர்:- அக்குறிப்பைக் கூர்ந்து சிந்தித்து அங் ஙனம் பாட மனமில்லாதவராய் தலையசைத்துத் தலைப்புப் பாடலைப் பாடினர்.

அரசன், புலவர் :- இதைக் கேட்டதும் புரவலனும், புலவரும் புந்தி வேறுபட்டனர்; வெதும்பினர். இதனை வெளியில் காட்டாமல் கம்ப நாடரே! பாட்டைக் கேட்டோம். இன்றிருந்து நாளை போகலாம் என்றனர்.

கம்பநாடர்:- அதற்கு இசைந்தனர்.

வாணியன் தாதன் :- அரசன் அரியாசனத்தில் அமர்ந் திருக்கும்பொழுது ஒட்டக்கூத்தனும், வாணியன் தாதனும் உரையாடிய முடிவில் கம்பநாடரை எப்படியேனும் பாடச் செய்யவேண்டும் எனச்செய்த தீர்மானப்படி வாணியன் தாதன் அரியாசனத்தண்மை போய் எமது இறைவா எனக் கைகளைக் கூப்பித் தலை வணங்கிச் சொன்னதாவது:- சடை யப்பன் திரிகர்த்தராயன் பேரில் ஒரு மும்மணிக் கோவை யைக் கம்பநாடன் பாடியிருக்கிறான். அதில் முதல் சீர் பிழை எனச் சொல்லிப் பாடும்பொழுது உங்கள் பெருமையையும் புகழ்ந்து பாடுகிறேன். அதற்கு மறுமொழியாகக் கம்பநா டன் பாடும்பொழுது அரசே! உங்கள் புகழைப் புகலாமல் இருக்க முடியாது. எப்படியும் புகழ்வான் எனச்சொல்லினன்.

குலோத்துங்கன்:- இதுவும் ஒரு வழிதான் என மகிழ்ந்து கம்பநாடனை வரவழைத்து நென்னலைப்போல இன்னலும் அண்மையின் ஆசனத்தில் அமர்த்தினன். அன்று கம்பநாடரைக் காணவும், கவியைக் கேட்கவும் என் றுமே வராத புரவலரும், புலவரும், பிறரும் வந்திருந்தனர்.

வாணியன் தாதன்: பாடின பாட்டாவது:-

கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன் சொன்ன
மும்மணிக் கோவை முதல்சீர் பிழை;முனை வாளெயிற்றுப்

பைம்மணித் துத்திக் கனமணிப் பாந்தள் படம்பிதுங்கச்
செம்மணிக் கண்பிதுங் கப்பதம் போர்த்த செயதுங்கனே

என்பதாம். இது தமிழ் நாவலர் சரிதை 102 ஆம் பாடல்.

கம்பநாடர்: மறுபாடல் பாடினர். அஃதாவது:-

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பான்அம் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடில் சின்னம்படும் மன்னர் காதலிமார்
வேளம் பிடித்தகண் வெள்ளம் பிடிக்க வெம்பேய்க் கிளம்பேய்
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே

என்பதாம். இது தமிழ் நாவலர் சரிதை 103 ஆம் பாடல்.

இதன் விளக்கமாவது:- வாணியன் தாதன் போகும் பொழுது தாதன் கவிப்பெருமையைச்சொல்லி ஊதுவதற்கு-துத்தாரி பிடிப்பதற்கு - காளம் என்னும் ஊதுகொம்புகளைச் சோழன் சிறப்பு வரிசையாகக் கொடுத்திருந்தனன். அவ்வாறு சிறப்பு வரிசைக் காளம் பெறுவதற்கான பெருந் தன்மை தாதன் இடத்தில் இல்லை. உயர்வுத் தன்மையில்லாத புலவருக்கு உயர்வுத் தன்மையுள்ள புலவருக்குக் கொடுக்கும் வரிசையாகிய காளம் முதலியவற்றைக் கொடுத்தால் உயர்வுத் தன்மையுள்ள புலவரைக் குறை - சின்னம் - செய்ததாகும் எனக் கம்பநாடர் சொல்லினர். இங்ஙனம் தன்மையறியாமல் புலவருக்கு வரிசை கொடுத்தல் தகாது என நான் மட்டும் சொல்லவில்லை; எனக்கு முன்னரே பெருந்தகைப்புலவர் கபிலர் மலையமான் திருமுடிக்காரியை இடித்துச் சொல்லியதாவது:-

ஒருதிசை ஒருவனை உள்ளி நால்திசைப்
பலரும் வருகுவர் பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!
அதுநற் கறிந்தனை ஆயின்,
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே

—புறநானூறு - 121

என்பதை மேற்கோள் காட்டினர்.

சோழன்:- இதனைக் கேட்டுக் கம்பநாடன் தன்னைப் புகழ்ந்தானா? இகழ்ந்தானா? எனச் சிந்தனைக் கடலில் சிக்குண்டு மயங்கினன்.

ஒட்டக்கூத்தன்:- உதடு திறந்தான்; உள்ளம் திறக்க

வில்லை.

வாணியன் தாதன்:- வாய் திறந்தான்; வாக்கு வரவில்லை.

அரசனை அண்டினோர்:- அரசனைப்பாடாத கம்பநாடன் அரசனைப்பாடினான் என ஒருவருக்கொருவர் உரைத்துக் கொண்டனர்.

அரசனை அண்டாதார்:- அரசனைப்புகழ்வது போல் அரசனுக்கு அமைச்சன் முறையில் அறிவுரை கூறினான் எனச் சிறு சிறு குழுவாய்ப் பேசிக்கொண்டனர்.

நொதுமலர்:- ஆம்; ஆம். இதுதான் கம்பநாடர் கவித் திறமை என்றது. இங்ஙனம் என்றும் காணாத நிகழ்ச்சி வகையில் அரசவை கலைந்தது. அரசனும், புலவரும் கம்பநாடரை வந்தவாறே வழியனுப்பியது.

கைம்மணிச்சீர் என்பதற்கு இதுகாறும் உரையாளரும், ஆராய்ச்சியாளரும் கொண்ட பொருளாவது:— கம்பன் உவச்சர் வீட்டில் பிறந்தவன். அல்லது வளர்ந்தவன்; உவச்சர் காளி கோவில் பூசையை மணியை ஆட்டி ஆட்டிச் செய்பவர்; அதனால் கம்பன் ஒரு பூசாரி என்பதாம். அதற்கு, கை=கையில், மணி=பூசை செய்யும் மணியை, சீர்=சீராக ஆட்டிப் பூசை செய்யத் தெரிந்தவன் என்பதாம். கம்பன் ஓச்சன் வீட்டில் பிறக்கவும் இல்லை: வளரவும் இல்லை. அப்படி வைத்துக் கொள்வோம். கம்பன் அரசவைக்கு வரும்பொழுது காளி கோயிலில் மணியை ஆட்டி ஆட்டிப் பூசை செய்துகொண்டிருந்தானா? அப்பூசைத் தொழிலை விட்டு விட்டு அரசன் அழைப்பிற்காக வந்தானா? என்னில் அன்னார் எவருமே இல்லை; இல்லை என்பர். எனவே, கைம்மணி என்பதற்குப் பூசை செய்யும் மணி எனப் பொருள் கொள்ளல் பொருந்தாது. எனவே, வாணியன் தாதன் கம்பநாடன் திருவடிப் பேரழகை மறைத்து அவற்றின் பேரழகைக் காண்பிக்கும் அணிகலன்களின் பெருமையைக் கண்டு கண்டு களித்தனன். கம்பநாடன் கை எடுத்தும், கை காட்டியும், கை வீசியும் உரையாடும்பொழுது இடம் மாறிய கைகளிலுள்ள அணிகலன்களைச் சீர்ப்படுத்துவதையும் கண்டு கண்டு கருத்திலிருத்தினன். அதனால் கம்பநாடன் தனது கைகளிலுள்ள மணிகள் பதித்த அணிகலன்களைச் சீராக வைத்துக் கொள்ளத் தெரியுமே அன்றிப் பாடல்களில் சீர்களைச் சரியாக வைக்கத்தெரியாது என்னும் பொருளில்

கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன்

எனத் தாதன் சாற்றினன். கம்பன் கம்பநாடன் ஆகி வரிசைகளும், அணிகலன்களும் பெற்றுள்ளான் என்பது தனக்குத் தெரியும் என்பதற்காகவே தாதன் தான் பாடியதில் 'கம்பநாடன்' எனச் சொல்லினன். எனவே, கைம்மணிச்சீர் என்பதற்குக் கைகளிலுள்ள மணி அணிகளைச் சீராக வைத்துக் கொள்ளல் எனப் பொருள் கொள்ளலே வரலாற்றுக்குப் பொருந்தியதாகும். கம்பர் கைகளின் அணி கலன்களைச் சீராகத் திருத்திக்கொண்டு பேசும் காட்சியைக் கண்டு சொல்லியதாகும்.

13 - கம்பரும் பாண்டியனும்

உமையவளும் நீயும் ஒருங்கொப்பை ஒப்பை
உமையவளுக் குண்டங்கோர் ஊனம்—உமையவள்தன்
பாகம்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியன்நின்
ஆகம்தோய்ந் தாண்டான் அரசு. —தமிழ் -நா- சரிதை-87

கம்பர் கவிப்பெருமை சோழநாடு மட்டுமின்றிப் பாண்டிய நாட்டிலும் பரவியிருந்தது. பாண்டிய நாட்டு மக்கள் கம்பரைப்பார்க்க வேண்டும் என மிகவும் விழைந்திருந்தனர். மக்களைப்போலவே பாண்டியனுக்கும், பாண்டிமாதேவிக்கும் விருப்பம் மிகுந்திருந்தது. அதனால் கம்பநாடனை அழைத்து வரும்படி கம்பநாட்டிற்கு ஆட்களை அனுப்பினான். அவ்வாட்கள் கம்பநாடன் வீட்டிற்குப் போயினர். அதுகாலை, சரராமன் சடையப்பன் கம்பருடன் உளங்குளிர உரையாடிக் கொண்டிருந்தனர். பாண்டியன் அழைப்பைச் சரராமனும் கண்டு கம்பநாடனைப் பாண்டிய நாட்டிற்குப்போய் வரும்படி வழியனுப்பினர். கம்பரும் சிவிகையிலமர்ந்து குடை பிடிக்கச் சாமரம் வீசக் காளம் ஊத அடைக்காய் தரப்புறப்பட்டுச்செல்லும்பொழுது வழி நெடுக மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்று அளவிலா மகிழ்வுடன் உபசரித்து வழியனுப்பினர். இங்ஙனமே பாண்டியநாட்டின் ஊர்களைக் கடந்து பாண்டியன் அரண்மனைக்குச் சென்றனர். பாண்டிமாதேவியும் பாண்டியனும் பண்புடன் உபசரித்துப் பேரவையில் தமது ஆசனத்தருகே ஆசனம் கொடுத்துக் கம்பநாடனை வீற்றிருக்கச்செய்து அளவளாவி உரையாடிக் கொண்டிருப்பர். கம்பருக்குத் தெவிட்டும் உணவுச் சுவை வாயமுதம் அன்புடன்

அளிப்பர். கம்பர் தெவிட்டாத கலைச்சுவைச் செவியமுதம் அரசனுக்கும், அரசிக்கும், அவையினருக்கும் கொடுப்பர். அரண்மனையமைப்புக்களையும், படைகளையும், படைக்கொட்டில்களையும் கம்பருக்குக் காட்டிக் காட்டிக் கண்களுக்குக் களிப்பூட்டுவர். கம்பரும் அவ்வவற்றின் அமைப்புக்களையும், கலை நுட்பங்களையும், பயன்களையும் அரசன், அரசி, அலுவலர்களுக்குச் சொல்லிச்சொல்லி நெஞ்சங்களில் நிலைக்கச்செய்வர்.

இங்ஙனம் கவியமுதமும், கலையமுதமும் உண்டு களிப்புடன் வீற்றிருக்கும்பொழுது பாண்டியன் பரிவுடன் தன்னைப் பாடவேண்டும் எனக் கம்பரைக் கேட்டுக்கொண்டனன். அவ் வேண்டுகோளுக்குச் சொன்னதே தலைப்புப் பாடல் ஆகும். அதில் அரசனிலும் அரசியே பெருமையுடையவள் எனச் சொல்லப்பட்டது. பாண்டிமாதேவி அரண்மனைக்கு அரசியாயிருப்பதைப் போன்றே நாட்டை ஆளும் அரசாங்க அலுவல்களிலும் அரசியாயிருப்பதைக் கம்பர் பலப்பல முறையும், பலப்பல அலுவல்களில் கண்டு கண்டு கம்பர் அரசியின் அறிவு ஆற்றல்களைத் தேர்ந்து தேர்ந்து அரசனினும் அரசியே திறமையுள்ளவள் எனத் தெளிந்து கொண்டனர். இதனல், அவன் அறிவு ஆற்றல் அறியும் ஆகலின்

ஏற்றல் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன்

என ஐந்திறம் சொல்லியதை ஆராய்ந்து கணவன் பெருமை உயர்வதற்கான ஏற்றமானவற்றைச்செய்யும் உரிமைபெற்ற தமிழ் மகள் பாண்டியன் மனைவி எனத் தெரிந்து பாண்டிமாதேவியைக் கம்பர் பாடினர். மேலும்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என முப்பால் மொழியும் முறையில் தன்னைக் கொண்ட கணவனை அரசியலில் உயர்வதற்கான வழிகளைச் சொல்லிப் பேணும் மனைவியெனத் தெளிந்தும் பாடினர்.

இதனைக்கேட்ட அவையினர் சிலர் அரசனைப் பாடவில்லை என்றனர்; சிலர் அரசியைப் பாடவில்லை என்றனர். அரசன் அரசியிடம் என்னைப்பாடினர் என்றனன். அரசி அரசனிடம் என்னைப்பாடினன் என்றனள். அமைச்சர் இருவரையும் பாடினர் என்றனர். அனைவரும் ஒருங்கே கம்பர்

பாடலை வியந்தனர். இவ்வியப்பினில் வந்த நாள் போன்றே கம்பரை இன்னும் சில நாள் இருத்தல் வேண்டும் என்றனர்; இருந்தனர். 'பாண்டியன் வரலாறு' பக்கம் 94 இல் மாறவர்மன் ஸ்ரீவல்லபன் கி. பி. 1132 முதல் 1162 வரை அரசாண்டதாக இருத்தலால் கம்பர் கண்ட பாண்டியன் அம் மாறவர்மன் ஆவான்.

14-கம்பர் பாண்டியனிலும் சடையப்பன் சிறந்தமை காட்டல்

என்னுடைய தம்பி சரராம னுக்கிளையான்
கன்னன் மதயானைக் கண்டன்மகன்—முன்னங்
கணையாழி முத்துதிர்க்கும் காவிரிசூழ் சோணாட்டு
இணையார மார்பன இவன். —தமிழ் -நா- சரிதை-86

கம்பநாடன் பாண்டிய நாட்டிற்கு வந்தது இன்றைய பாண்டிய நாட்டு மதுரையை மட்டுமன்று. இம்மதுரைக்கு மேற்கே மலையின்மேல் சமவெளியில் வழுதியா அரண்மனைகள் அமைத்து வாழ்ந்தனர். எல்லாவகையான இன்பங்களும் நுகர்வதற்கான முறையில் அவ்வரண்மனைகள் அமைந்திருந்தன. இயற்கையிலேயே 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும் உடையதாக' வழுதியர் நாடு அமைந்திருந்தது. இன்று வழுதியர் நாடு வலசு நாடு என மருவி வழங்குகின்றது. இதைப் பற்றித் 'திருவள்ளுவர் காவியம்' 5- அமைதிக்காண்டம், 4-வழுதியர் காட்டுப்படலம் விளக்கமாகச் சொல்லலைக் காண்க. அவ்வழுதியர் நாடு காணவே வந்தவனாகையால் அந்நாடுங் கண்டு வந்தனன்.

கம்பருடன் உரையாடிக் கலையமுது உண்ணும் வாய்ப்புப் பல நாட்களாக இல்லாமையால்

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை

என்றதைச் சரராமன் சரியாக உணர்ந்திருந்தனன். செவிச்செல்வம் நிறைந்த கருவூலம் கம்பர் ஆவார். கம்பர் தன்னிடம் இன்மையால் செவிச் செல்வக் கருவல நுகர்ச்சி இல்லாமற்போயிற்று. எனவே, சரராமன் கருத்துரைக்க அவன் தன்னுடைய தம்பி இணையார மார்பன் என்பவனைக்கம்பரை அழைத்து வர அனுப்பினன் அவன் அரசவைக்குப்

போனான். அப்பொழுது பாண்டிமாதேவி இவ்விளம் செல்வன் யார் எனக் கேட்கக் கம்பநாடன் பாடியதே தலைப்புச் செய்யுள் ஆகும். இதைப்பற்றிச் 'சோழமண்டல சதகம்'

நீரம் பெரிய தென்னர்பிரான் சிங்காதனத்தில் சேர்த்தி யிவன்
ஆரென் றுரைப்ப நம்பி இணையார மார்பன் அடியேற்கும்
சாருஞ் சரரா மனுக்குமொரு தம்பியெனக் கம்பன் புகழும்
வாரும் பெருவெண் ணெயர்பெருமான் வளம்சேர் சோழ மண்டலமே

எனச் சொல்லுகின்றது. இணையாரமார்பனுடன் கம்ப நாடனைப் பாண்டிநாட்டிலிருந்து கம்பநாட்டிற்கு அனுப்பும் பொழுது பாண்டிய நகரைப் பலப்பல வகைகளில் பொதுவாக அலங்காரம் செய்யச் சொல்லினன். பாண்டியன் அரண்மனையிலிருந்து நகரின் எவ்வெத் தெரு வழியாகக் கம்ப நாடர் இணையாரமார்பனுடன் செல்வாரோ அத்தெருக்களைச் சிறப்பாக அலங்காரம் செய்யச் செய்தனன். இத்தெருக்களின் வழியாகக் கம்பநாடரை வழியனுப்பி மரியாதைகள் செய்யும் பொழுது கம்பநாடர் களித்திருப்பர். அக்களிப்பில் தம்மைப் பாடச் சொன்னால் பாடுவர் எனப் பாண்டிமாதேவியும், பாண்டியனும் எண்ணியிருந்தனர். அவ்வெண்ணம் முடிவதற்காகக் கம்பநாடரையும், இணையாரமார்பனையும் அரண்மனையிலிருந்து அரசமரியாதைகளுடன் வழியனுப்பிக் கூடவே நகர்ப்புறம் சென்றதும் இவ்வழியனுப்பலங்காரங்களின் சிறப்பைப்பற்றிப் பாடவேண்டும் என அரசனும் அரசியும் கம்ப நாடரைக் கனிந்து கேட்டுக்கொண்டனர். கம்பநாடரோ நாம் மனம்வந்து பாடுவதல்லாமல் பிறர் சொல்லிப் பாடும் வழக்கம் இல்லை என மறுத்துச் சொல்லி, இவ்வலங்காரம் திருவெண்ணெய்நல்லூர் இடுகாட்டு அலங்காரம் ஒக்கும் என உரைநடையில் மறுமொழி சொல்லினர். பாடல்பெருமலே மாற்றமுற்ற அரசியும் அரசனும் திருவெண்ணெய் அலங்காரம் நம் அலங்காரத்திற்குக் குறைவாயிருப்பின் பாடச் சொல்வோம்; மேலாயிருப்பின் மெல்ல வந்திடுவோம் என எண்ணிச் சென்றனர். மதுரை நகரலங்காரத்தினும் பதின்மடங்கு வெண்ணெய் இடுநகரலங்காரம் மேன்மையுற்றிருப்பதைக் கண்டுகண்டு உள்ளத்தில் குறைவும், உதட்டில் நிறைவும்

உற்று வந்தனர். இவ்வலங்கரிப்பை

வில்ளு மதுரை அலங்கரித்த வீம்பு நோக்கி வெண்ணெய்நல்லூர்
உள்ளு மிடுகா டொக்குமென உரைத்தான் கம்பன் உரைத்தமுறை
அள்ளு மணியால் பசும்பொன்னுல் அமரர் பதிபோ லலங்கரித்தே
வள்ளல் வழுதி அதிசயப்ப வாழ்ந்தோன் சோழ மண்டலமே.

எனச் 'சோழமண்டல சதகம்' சொல்லுகின்றது.

15. கம்பர் அன்பளிக்கும் எம்மக்களையும் பாடுபவர்

1 — சிரம்பார்த்தான் ஈசன்அயன் தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன் — உரம்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான் சீராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.
— தனிப்பாடல் திரட்டு கம்பர்-8

2 — ஆரார் தலைவணங்கார் ஆரார்தாம் கையெடார்
ஆரார்தாம் சத்திரத்தில் ஆராதார் — சீராரும்
தென்புலியூர் மேவும் சிவன்அருள்சேர் அம்பட்டத்
தம்புகான் வாலிலே தான்.
— தனிப்பாடல் திரட்டு கம்பர்-9

3 — ஆழியான் ஆழி; அயன்எழுத் தாணி;என்பார்
கோழியான் குன்றெறிய வேல்;என்பான் — பூழியான்
அங்கை மழுஎன்பான்; அருள்பெரிய மாவண்டூர்ச்
சிங்கன் உலைக்களத்திற் சென்று.
— தனிப்பாடல் திரட்டு கம்பர்-10

இவற்றுள் 1வது பாடல் சீராமன் என்னும் வண்ணான் தனக்கு உடை வெளுத்துக் கொடுத்ததை மெச்சிப் பாடியது என்றும், 2வது பாடல் சிதம்பரத்திலிருந்த தம்புகான் என்னும் அம்பட்டன் இவருக்கு மழித்தல் செய்ததை வியந்து பாடியது என்றும், 3வது பாடல் கருமாரச் சிங்கன்மேல் பாடியது என்றும் உள்ளன. 1—வண்ணான் வெள்ளைசெய்த உடைகளைக்காட்டினும் வெண்மையுள்ளதா எனப் பரமசிவன் தன் தலையிலுள்ள கங்கையாற்றைப் பார்த்தான்; பிரமதேவன் தனது தேவி சரசுவதியைப் பார்த்தான்; மகாவிஷ்ணு தன் கையிலுள்ள சங்கைப் பார்த்தான். 2—இன்

றன்று அன்று, எவரும் தலையை எப்பக்கம் மழித்துக்கொள்வதாயினும் தலைகுனிவார். கைகளின் கக்கத்தில் மழிப்பதற்காகக் கை எடுப்பர். அத்தம்புகான் சத்திரத்தில் எவரும் உண்பர். 3—திருமால், பிரமன், குமரன், சிவன் என்பவர் முறையே தங்களுக்குச் சக்கரமும், எழுத்தாணியும், வேலும், மழுவும் செய்து கொடுக்கவேண்டும் எனச் சிங்கன் உலைக்களத்தின் முன்பு நின்றிருப்பர். இம்மூன்று பாடல்களில் 1 — 3வது பாடல்கள் இயற்கைநவிற்சியைச் சொல்லும் உயர்வுநவிற்சியாகும்.

தனிப்பாடல் திரட்டிலுள்ள இம்மூன்று பாடலும் "தமிழ் நாவலர் சரிதை"யிலோ, "செந்தமிழ்" 3ஆம் தொகுதியில் கம்பர் தலைப்பிலோ, "கம்பநாடர்" பத்திரிகையில் கம்பநாடர் தலைப்பிலோ, இன்னோரன்ன பிறவற்றிலோ இல்லை. எனினும் இவை கலைச் சுவையும், கற்பனைச் சுவையும் மிக்கிருப்பதால் கம்பர் பாடியிருப்பர். மேலும், மக்களின் வாழ்க்கைக் கடிப்படைத் தொழிலன் கொல்லன் எனவும், மக்களின் சமுதாய நாகரிக வாழ்க்கைக்கடிப்படைத் தொழிலர் வண்ணான், அம்பட்டன் எனவும் எண்ணிப் பாடியிருப்பர். மேலும் குலோத்துங்கசோழன் வரவழைத்துத் தக்க மரியாதைசெய்து தன்னைப் பாடச் சொல்லவும் பாடாமல் அச்சோழன் சினத்தீயைச் சீரிய பரிசாக பெற்றுவந்த கம்பர் வண்ணான், அம்பட்டன், கொல்லன் இவரின் பணிவுக்காகவும், அகமுவந்தளித்த அன்புப் பரிசுக்காகவும் பாடியிருப்பர். இதனால் அரசன், செல்வன் முதலானோர் வன்பு முறைக்குக் கம்பர் பாடமாட்டார்; சமுதாய மக்களின் அன்பு முறைக்குக் கம்பர் பாடுபவர் எனத் தெளிக. மேலும், ஒவ்வோர் கற்பனைத் தேவருக்கும் ஒவ்வோர் கற்பனைப் படையைச் சொன்ன புராணப் புலவர் எவரும் கற்பனைப் பிருமதேவனுக்கு எக்கற்பனைப் படையையும் சொன்னாரல்லர். கம்பர் ஒருவர்தான் பிருமதேவனுக்கு எழுத்தாணிப் படையைச் சொல்லினர். இதுவும் ஓர் கற்பனை; காரணக் கற்பனை. எங்ஙனம்?

பிருமனின் தேவி சரசுவதி. கலைகளின் வடிவம் சரசுவதி. அதற்காகச் சரசுவதி தன் கையில் ஏடு வைத்திருக்கிறாள். அவ்வேடுகளில் கலைகளை எழுதுவதற்கு வேண்டும்பொழுது கொடுப்பதற்காகப் பிருமன் எழுத்தாணியை வைத்திருக்கிறான். இவ்வேடு—எழுத்தாணிக் கற்பனைகளினால், மக்கள் வாழ்க்கையின் மாண்புக்காக மனைவி எத்தொழிலைச் செய்யி

னும் கணவன் அத்தொழில் நிறைவுக்காக எக்கருவியையும் கொடுத்துதவவேண்டும் என்னும் வாழ்க்கைத்தத்துவத்தைக் கம்பர் கருத்துறக் கழறினர்.

16. கம்பர் சிவிகை சுமந்தவரைப் பாடியது

ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனுல்
நாங்கவி சொல்வதும் இல்லைஎன்றே கம்பநாடன் சொல்ல
ஆங்கவன் ஏறும் சிவிகை சுமந்தும் அடப்பை யிட்டும்
தாங்கவி கொண்டதும் கூவம் தியாக சமுத்திரமே.

என்பது தனிப்பாடல் திரட்டில் ஒட்டக்கூத்தன் பாட்டுள் 34ஆம் பாட்டாக உள்ளது.

கூவம் என்பது தொண்டைநாட்டிலுள்ள ஓரூர். இது இன்று "திருவிற்கோலம்" எனும் பெயரால் வழங்குகின்றது. வாணியன்தாதன் என்பவன் குலோத்துங்கச்சோழன் அரசவைப் புலவருள் ஒருவன். காங்கேயன் என்பவன்பேரில் 'நாலாயிரக்கோவை' என்னும் ஒரு கோவை நூல் பாடியுள்ளான். சோழன் இவனுக்குக் கூவம் என்னும் ஊரைப் பரிசிலாக வாங்கிக் கொடுத்தான். அவ்வூரைக் கொடுத்த சோழன் தியாகத்திற்காக அக்கூவத்திற்கு 'தியாகசமுத்திரம்' என்னும் பெயரைத் தாதன் வைத்துக் கொண்டனன். அவ்வூர் வழியாகக் கம்பர் சிவிகையில் ஏறிக்கொண்டு வழக்கமான உயர்வுச் சிறப்புக்களுடன் சென்றனர். கம்பரைக் கண்டு களிக்கவும், கம்பர் கவியைப் பெறவும் அக்கூவத்தூர் மக்கள் எல்லையில் காத்துக்கொண்டிருந்தனர். கம்பர் வந்ததும் வணங்கினர்; புகழ்ந்தனர்; போற்றினர். எங்கள் ஊரைப்பற்றி ஒரு கவி பாடவேண்டும் எனக் கேட்டனர். வாணியன்தாதற்கு இக்கூவம் ஆட்பட்டுள்ளதினல் யான் பாட முடியாது என்றனர். உடனே அவ்வூரார் கம்பநாடர் சிவிகையைத் தாங்கினர். அடப்பை கொண்டனர். அக்கூவத்தாரின் அன்பிற்கு இரங்கி ஒரு பாட்டைக் கூவத்தைப்பற்றிப் பாடினர். அதைப்

பேணிய செந்தமிழ்த் தாதனுக்கே யன்பு பெற்றமையால்
நாணிய கம்பன் சிவிகையும் தாங்கி நயந்ததமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப் பிலாது புகுந்துபின்னும்
வாணியன் தாதற்குத் தாதான தும் தொண்டை மண்டலமே

என்பதால் தலைப்புச் செய்யுளில் கம்பநாடர் கூவத்தைப்

பாடினுர் எனத் தெரிகின்ருேம். ஆனுல் அப்பாட்டு இதுவோ? எதுவோ? என்பது தெரியவில்லை.

17. கம்பர் நண்பனுன தாதனைப்பாடியது

தாதாஎன் ருலும் தருஎன்று சொன்னுலும்
தாதாஎன் ருலும் தருவனே தாராதான்
தாதாஎன் ருலும் தருஎன்று சொன்னுலும்
தாதாஎன் ருலும் தருவன்நம் தாதனே. — தமிழ்-நா-ச-84

இப்பாடல் தனிப்பாடல் திரட்டிலோ, கம்பரைப்பற்றிய ஆராய்ச்சி நூல்களிலோ இல்லை. 'தமிழ் நாவலர் சரிதை' ஒன்றில்தானுண்டு. கம்பநாடர் இப்பாட்டைப் பாடக்காரண மாவது:- கம்பநாடரும் சிவிகையும், அடைப்பைக்காரரும், மற்ற வரிசைகளும் பெற்றிருக்கிருர். அவ்வாறே வாணியன் தாதனும் பெற்றிருக்கிருன். கம்பநாடருக்கு வரிசைகளைத் தந்தவர் வேளாண்மைப் பெருமக்கள். தாதனுக்கு வரிசைகளைத் தந்தவன் சோழ அரசன். கூவத்து மக்கள் வேளாண் மக்கள் தந்த வரிசைகளைப் பெருமையாக மதித்தனர். அதனுல் கம்பநாடரின் சிவிகையைத் தாங்கினர். அரசன் கொடுத்த வரிசைகளைச் சிறுமையாக மதித்தனர். அதனுல், தாதன் சிவிகையைத் தாங்கவில்லை. கம்பநாடர் வேளாண் பெருமகன்; ஏரெழுபதை பாடினவர். திரிகருத்தராயன் எனும் பட்டம்பெற்ற சடையப்ப வள்ளல் வேளாண் பெருமகன்பேரில் மும்மணிக் கோவை பாடினவர். தாதன் வாணியன் செக்கான். காங்கேயனைக் கோவை பாடிப் புகழ்ந்து பலவகைச் செல்வங்களைப் பெற்றவன். அவ்வாறே, அரசனிடமும் பெற்றவன். செல்வன்; ஈபவன். எதை ஈயினும் மக்கள்—கூவத்து மக்கள்—தன்னை மதித்திலர் என்பதைத் தெரிந்துகொண்டவன். கம்பநாடன் சிவிகையையும் அடைப்பையையும் தாங்கிய மக்களும் அவர்களுக்குத் துணையான கூவத்தாரும் தாதனிடம் பொச்சாப்பு இல்லாமல் புகுந்து கம்பநாடன் பெருமையைச் சொல்லித் தாதனைத் தாதா எனப் பாராட்டினர். தாதனும் கூவத்தார்பேரிலிருந்த கோபமும் பொச்சாப்பும் நீங்கினன். கம்பநாடர்பேரிலிருந்த பகைமையும் சிறுமையும் நீங்கிக் கண்ணியமாக உபசரித்தனன்; கம்பநாடர் அவ்வுபசரிப்பினுல் உவந்து சொல்லியதே தலைப்புப் பாடலாகும். இது வரலாற்றுண்மை என்பதைப் "பேணிய செந்தமிழ்" என்னும் தொண்டைமண்டல சதகச் செய்யுளை ஆராயின் தெரியலாம்.

18. கம்பரும் வல்லியம்மையும் காதல் கொள்ளல்

இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியேம்
பல்லென்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்துக்
கொல்லென்று காமனையும் கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனார்என் நெஞ்சைவிட்டுப் போகாரே.

— தமிழ்-நா-ச-90

கம்பநாடருக்கு இதுகாறும் திருமணம் ஆகவில்லை. கம்பநாடர் திருமணம் செய்வதற்கேற்ற தன்மையுள்ள பெண் திருவெண்ணெய்நல்லூர்ப்பக்கம் கிடைக்கவில்லை. தம் இனத்து வடுகர் என்னும் வாணர், வடுகவழி என்னும் வாணர்ப்பாடியில் நிறைய இருந்தனர். அன்னாருள் திருவொற்றியூர் வடுக இனத்தவருள் ஒரு பெண் இருந்தனள். அப்பெண் குறிப்பிட்ட நேரத்தில் அவ்வூர்க் கோவிலுக்கு வருவாள். அந்நேரத்தில் கம்பரும் அக்கோவில் கோபுரப்பக்கத்தில் இருப்பர். இங்ஙனம் இருவரும் பலமுறை பார்த்துப் பார்த்துத் தம் தம் உள்ளங்களில் காதல் கொண்டனர். அக்காதலைத் தம் தம் கருத்தில் கண்களால் எழுதிக்கொண்டனர். அதனை "காமனையும் கண்காட்டிக் கோபுரக்கீழ், நில்லென்று போனார்" என்பதினால் தெளிகின்றோம்.

19. கம்பர் வல்லியம்மையைப் பண்டிதர் மகள் எனல்

நடக்கில் அன்னமாம் நிற்கில்நல் வஞ்சியாம்
கிடக்கில் ஓவியப் பாவை கிடந்ததாம்
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளாளென் மனத்துறை வல்லியே!

—தமிழ் -நா- சரிதை 91

கம்பநாடர் மனத்தில் மன்னியுறையும் காதலியின் பெயர் வல்லியாகும். அவ்வல்லி நடத்தல், நிற்றல், இருத்தல் ஆகிய நிலைகளில் பலப்பல முறை கோவிலிலோ, அவ்வல்லியின் வீட்டிலோ கம்பநாடர் கண்டு கண்டு கண்களால் களித்திருக்கின்றனர். அவ்வாறே வல்லியும் கம்பநாடரைக் கண்டு கண்டு களித்திருக்கின்றனள். 'இருவரும் மாறிப்புக்கு இதையம் எய்தினர்' என மிதிலைக் காட்சியில் சொல்வது இப்பொழுது இவ்விருவரும் கொண்ட காதல் திருமணத்தின் நுகர்ச்சியேயாகும். இத்தலைப்புப் பாடல்

தனிப்பாடல் திரட்டு 105 ஆம் பக்கம் பல வித்துவான்கள் பாடிய பாடல் தலைப்பில் உள்ளது. கம்பர் பாடல் என்ற தலைப்பில் இல்லை. எனினும், பெரும் புலவர் பலர் அப் பாடலைக்கம்பர் கற்பின் பெருமைக்கு மாறாக ஆராய்ந்திருப்பதால், ஆராய்தல் அவசியம் ஆயிற்று.

இங்குப்பண்டிதன் மடத்துளாள் என்பதற்கு ஓர் சாமியாரின் மடத்திலுள்ள வேசி என்றே இன்று வரை எழுதினர். அனைவரும் ஒன்று போன்றே எழுதியுள்ளனர். கம்பர் கலியாணமின்றிக் கணிகையர் பலருடன் வாழ்ந்து வாழ்ந்து வாழ்க்கையைக் கழித்தவர் என்றே எழுதியிருக்கின்றனர். ஐயோ! இன்னோர் அனைவருக்கும் பகுத்தறிவு இருந்தும், பகுத்தறிவைப் பயன்படுத்தாமல் மருதத்திணைப்புலவர் ஆயினரே! இனியேனும் குறிஞ்சி நிலப்புலவராகிச் சருத்துறக் காண்க. இங்ஙனம் மருதத்திணைப் புலவராயிருந்து குறிஞ்சித் திணைப் புலவராகிய ஒரு பெரும் புலவர் உளர்; அவர்தான் எஸ். வையாபுரிப் பிள்ளை. அவர் மருதத்திணைப் புலவராய் "கம்பனுக்கு அபூர்வமான மேதையோடு ஓர் இழுக்கு இருந்ததாம்; அவன் பொது மகளிர்மீது ஆசை கொண்டு அவர்கள் வீட்டிற்குச் சென்று வருவதுண்டாம்" என முன்னர் எழுதி விட்டுப் பின்னர் குறிஞ்சித்திணைப் புலவராகி "அவ்வாறு குறிக்கும் குறைகள் இழுக்குகள் கம்பனிடத்தே இருந்தன என்பதற்குச் சான்றில்லை". "அவன் இராமன் மீதும், இராம சரித்திரத்தின்மீதும் முழு மனதும் வைத்திருந்தான். இவ்வாறு பக்தி நிற்கும் அவனது மனத்தில் வேறு எவ்வகைக் கருத்தும் புகுதற்கு இடமிருக்க முடியாது" எனத் 'தமிழ்ச்சடர் மணிகள்' பக்கம் 176இல் எழுதியுள்ளனர். இங்ஙனம் ஆகிக் கம்பரைக் காணின் குறிஞ்சித்திணை ஒழுக்கம் உள்ளவராகவே கம்பர் காட்சி தருவர். கண்டு களிக்கப் பரத்தையைப் போற்றுபவர் மருதத்திணைப் புலவர்; இல்லறத்தைப் போற்றுபவர் குறிஞ்சித் திணைப்புலவர்.

பண்டிதன் என்றது சிறப்புப் பெயர். அத்தகைய பெயரர் கருடவாகன பண்டிதர், குமுத சந்திர பண்டிதர், இராச பண்டிதர் என முறையே "கோயிலொழுகு" 120ஆம் பக்கமும் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' 255ஆம் பக்கமும், 'பிற்காலச் சோழர்' 265ஆம் பக்கமும் உள்ளனர். இதனால், பண்டிதன் ஒருவனின் சிறப்புப் பெயராய்ப் பின்னர் அவன்

இனத்தவருக் காயிருந்தல் வேண்டும். எனவே, பண்டிதன் ஓர் மடத் தலைவன் அல்லன்; ஓர் குடும்பத் தலைவன் ஆவான்.

மடத்துளாள் என்பதற்கு மடமைக் குணமுடைய பெண் எனப் பொருள். மடம், மடமை, பெண் மக்களின் இயற்கைக் குணம். மலர்க்கொம்பனைய மடச் சீதை—பம்பை-30- என்பதற்கு "பூங்கொம்பைப் போன்ற மடமைக் குணமுடைய சீதை எனறும், மடமாவது:— "எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாது போலிருக்கும் தன்மை; இது நாணம், அச்சம், பயிர்ப்பு, முதலிய பெண் குணங்கள் பிறவற்றிற்கும் உபலட்சணம்" என விளக்க உரையும் எழுதியுள்ளனர்.

என்றனன் மடவாளோ டினிதினின் விளையாடி —வனம்புகு-19.

என்றதில் " மடவாள் என்பதற்கு " மடப்பமுள்ள சீதேவி எனப்பொருள் கூறியுள்ளனர். எனவே, " மடத்துளாள் " என்பதற்கும் " மடமைக்குணமுடைய வல்லி " என்றே பொருள் கொள்ளல் வேண்டும். எவனேனும் காமரசம் பருகிய மயக்கத்தால் " மடத்துளாள் என்பதற்கு - மடத்திலுள்ள வேசிப்பெண் " எனப் பொருள் கூறுவான் ஆயின், அவனைக் கண்ணகியின் திருவாக்கால் ஒன்று கேட்கிறேன். என்னை? கண்ணகியை அடிகளார்

மடம்படு சாயலாள் —வாழ்த்துக்காதை -3.

என்கின்றாரே, அதற்குக் கண்ணகியை மடத்திலுள்ள வேசிப் பெண் எனச் சொல்லத் துணிவாயா என்பேன். துணிய மாட்டேன் என்பான். பின்னை என்னென்று சொல்வாய் என்பேன். அவனே கைகளைக் கூப்பிக் கண்ணகிதேவியைத் தொழுது

இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட பெரித்தெய்வம் —அடைக்கலக்காதை-142.

எனச் சொல்லத் துணிவேன் என்பான். பின்னையோ காம ரச மயக்கம் தெளிந்தேன் என்பான். தெளிந்து "மடத்துளாள்" என்பவள் மடமைக்குணமுடைய வல்லியம்மை என்பான். சதுரானனப் பண்டிதன் மகள் என்பான். பின்னும் நான் இளமையில் பாடம் செய்த பதினோராவது நிகண்டில்

மடம் அறியாமை, சத்திரம், மனை, முனிவாசம் நாற்பேர்.

என்பதால் மடம் என்பதற்கு மனை, வீடு, என்ற பொருள் உள்ளதால் "சதுரானன பண்டிதன் மடத்துளாள் என்ப

தற்குப் பண்டிதன் மனையிலுள்ள பண்டிதனின் மகள் மண மாகும் மகள் ஆவாள் என்பேன்" என்பான்.

இன்னொன்று சிந்தித்தல் வேண்டும். என்னை? மடத்து ளாள் வேசியாயிருப்பின் மடத்திலேயே இருந்து கொண்டு பண்டிதனுக்கடங்கிய கணிகையாயிருக்க வேண்டும். இன் றேல் தனக்கெனத் தனித்த வீட்டில் குடியிருக்கும் விலைமா தாக இருக்க வேண்டும். மடத்துளாள் என்பதால், தனிக்குடி யிருக்கும் விலைமாது அல்லள். இன்றேல், மடத்திலுள்ள விலைமாது ஆகியிருப்பின் கம்பர் மடத்திற்குப் போக முடி யாது. ஏன்? இரு காமுகர் ஒரு விலைமாதை ஒரு சமயத்திலே மாறி மாறி நுகரும் வழக்கமில்லை. இருப்பினும் மடத்திலிருக் கமுடியாது; விலைமாதின் வீட்டிலிருக்கலாம். இன்றைய பண்டார மடத்தலைவர் விலைமாதரை வைத்திருப்பதைப் போல, அன்றைய பண்டிதனும் வரைவில் மகளிரை வைத்தி ருப்பின், அவள் இன்று மடத்தினில் இல்லாமை போல அன்றும் மடத்திலிருக்க மாட்டாள். அவள் மடத்துத்தாசி, தேவ தாசி எனப் பெருமைப்பெயர் வைத்துக்கொண்டு தனி மாளிகையில் இருப்பள். மடத்தினில் நுகரும் காமக்களியா டல்களை விட்டு விட்டுக் கம்பர் போன்ற தனி மனிதருக்கு வைப்பாட்டியாக வரமாட்டாள். நாட்டுப் பொதுமக்கள் சிவிகையைச் சுமந்து அடைப்பை தாங்கும் அளவிற்கு உயர் நிலை பெற்ற கம்பநாடர் ஒரு மடத்து விபசாரி தாசியை விரும்பினர் என்றால் கம்பர் பெருமைக்குச் சிறுமை கற்பிக் கும் சூழ்ச்சியாகும். அங்ஙனம் செய்யற்க; செய்யற்க.

கோயிலுக்குப் போகுபவர் வேசிகளல்லர். நல்ல குலப் பெண்மணிகள், கன்னிகைகள் இன்றுபோல் அன்றும் கோயி லுக்குப் போயினர். அத்தகைய குலப்பெண் கன்னிப் பெண் ஒருவளைக் கம்பர் காதலித்தனர். அக் கன்னிப்பெண் வல்லி யும் கம்பரைக் காதலித்தனள்.

கம்பநாடர் ஓர் படித்த பெண் மகளைப் பார்த்துத் திரும ணம் செய்யவேண்டும் என எண்ணங்கொண்டே எண்ணிய வண்ணம் மணப்பெண் காணாமையால் 30 வயது வரையும் திருமணம் இல்லாமலிருந்தனர். தமக்கியைந்த பெண் திரு வொற்றியூர்ப் பண்டிதர் மகள் இருப்பதாக அங்குச் சென்ற னர். 'தந்தையர் ஒப்பர் மக்கள்' என இரு பாலார்க்கும் பொதுவாக 'மக்கள்' என்பது ஐந்திறம். பின்னவன் 'மகன

றிவு தந்தை அறிவு' என்றனன். பின்னவள் 'மகளறிவு தந்தை அறிவு' என்றனள். சதுரானன் படித்துப் பண்டிதர் என்னும் பட்டம் பெற்றுள்ளமையால், அவர் திருமகள் வல்லியும் படித்துப் பண்டிதள் ஆக இருப்பாள் என எண்ணினர். நேமிநாதம் எனும் இலக்கண நூல் ஆசிரியர் குணவீர பண்டிதர் மடச்சாமியார் அல்லர்; இல்வாழ்க்கையர். அவ்வாறே சதுரானன பண்டிதரும் இல்லறத்தர். அவர் மகள் வல்லியும் படித்துப் பண்டிதள் ஆகக் கம்பநாடர் கருதிய படியே இருந்தினள்.

20. கம்பர் வல்லி கற்பு மணம் முடித்து ஓரில்லில் உரையாடல்

வில்லி! களந்தை மின்னே! விண்ணவர்தம் கோமானை
வல்லநெடும் சேடனையும் வாணனையும்—புல்லியுறப்
பார்க்கும்தோ றும்அதரம் பற்றும்தோறும் தனத்தைச்
சேர்க்கும்தோ றுர்நினைப்பம் சென்று. —தமிழ்-நா- சரிதை-97

கொற்கையான் மாறன் குலசே கரப்பெருமான்
பொற்கையான் ஆனகதை போதாதோ—நற்கமல
மன்றலே வாரி மணிவா சலையலைக்கத்
தென்றலே ஏன்வந்தாய் செப்பு. –தனிப்பாடல் திரட்டு கம்பர் 10

கம்பநாடரின் கற்பு மணம் – கரண மணம் – அன்று செய்யும் கரணங்களின் வழக்கப்படி நடந்தது. அக் கரணங்கள் இன்னின்னன, அன்னன்னன, எவ்வெவ்வாறு நடந்தன என்பன பற்றிக்கம்பநாடர் இராமபிரானுக்கும் பிராட்டிக்கும் கடிமணப் படலத்தில் 86ஆம் பாடல் முதல் 93 ஆம் பாடல் முடிய நடத்தின கரணங்கள் முற்றும் தமது திருமணத்தில் நடந்த சடங்குகளேயாகும்.

கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவோன், கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே.

என ஐந்திறம் கற்பியல் முதல் சூத்திரத்தில் சொல்லியபடி கம்பநாடர் காலத்தில் இருந்தவாறு அச்சடங்குகள் நடந்தன. பின்னர் கரணத்தின் அமைந்து முடிந்த காலை

நெஞ்சு தளைஅவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்

என அடுத்த சூத்திரப்படி 'நெஞ்சு தளைஅவிழ்ந்த புணர்ச்சிக்காக' ஓர் இல்லில் கம்பரையும், வல்லியையும் இருக்கச் செய்தனர். தாம் இருந்ததை நினைவு கூர்ந்தே கம்பர்

நூற்கடல் அன்னவர் சொற்கடல் நோக்கி
மாற்கடல் அன்ன மனத்தவ ளோடும்
காற்கடல் போல்கரு ணைக்கடல் பண்டைப்
பாற்கடல் அன்னதோர் பாயல் அணைந்தான். —கடிமண-99

என்றனர். இங்ஙனம் பிரானும், பிராட்டியும் ஓரில்லில் என்னென்ன உரையாடினர் என்பனவற்றைக் கம்பர் சொல்லவில்லை. உரையாடியிருப்பர். உரையாடல் இயற்கை. ஆனால், கம்பர் இங்குச் சொல்லாமல் போகினும் பிரானும், பிராட்டியும் ஆற்றிய உரையாடலை

வந்தெனைக் கரம்பற் றியவை கல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய். —சூளாமணி-34

என்றனர். இதற்கு 'தான்பிறன் கைப்பட்டமை பற்றி இராமபிரான் ஒருக்கால் தன்னை உபேட்சித்து வேறு மணம் செய்து கொள்வானோ என்னும் ஐயத்தினால் சீதை அப்பிரான் முன் கூறியுள்ள வார்த்தையை அறிவுறுத்துமாறு அனுமானுக்குக் கூறுகின்றாள்' என விரிவுரையும் உள்ளது. இங்குப் பிறன் கை பட்டமை பற்றிஎன்பதற்கு வான்மீகி சொல்வதைப்போல இராவணன் கைகளாலே சீதையைப் பற்றித் தேரில் வைத்துக்கொண்டு வந்தான் என்றே பொருள் கொண்டனர். அன்றிக் கம்பர் சொல்வதைப்போல இலக்குடிலுடன் பேர்த்து எடுத்துக் கொண்டு வந்ததாகப் பொருள் கொள்ளினும், சீதை இராவணன் ஆளுகையில் இருக்கின்றாள் என்றே பொருள் கொண்டனர். இங்ஙனம் பிறன் கைப்பட்டாலோ, பிறன் ஆளுகையில் அகப்பட்டாலோ வேறு மணம் செய்துகொள்வதில்லை என்று அன்று திருமணத்தின்போது இராமன் சீதைக்குச் சொன்னார் என்பது ஏற்றதன்று. திருமணத்தின் பொழுதே எதிர்காலத்தில் பிறன்கைப்படுவேன் என்பது நிகழ்காலச் சீதைக்கு எப்படித் தெரியும்? தெரியும் என்பது தெரியாத்தன்மை. இந்தன்மையால் எல்லா உரையாசிரியரும் அவ்வாறே ஓயாது உரைத்

துக்கொண்டிருக்கின்றனர். இனி அவ்வாறுரையற்க; இவ்வாறுரைக்க. எங்ஙனம்?

இராமனும், சீதையும் திருமணக் கரணங்கள் முடிந்தபின் கரண முறைப்படி ஓரில்லில் இருக்கச் செய்தனர். புதுமணக் காதலர் ஓரில்லில் என்னென்னவோ உரையாடுவர். காதலர் பேச்சுக்குக் கரையில்லை. ஓரிரவு 30 நாழிகை ஒரு நாழிகையாகத்தோன்றும்.

குக்கூ என்றது கோழி அதன்எதிர்
துட்கென் றற்றென் தூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் என்றே.—குறுந்தொகை157

என்பதும் கோழி கூவினதைக்கேட்டு ஓரிரவு இத்துணை விரைவில் கழிந்துவிட்டதே எனக் காதலர் இருவரும் ஓரில்லில் பேசின பேச்சுக்களில் ஒன்றாகும். அவற்றில் காரியப் பேச்சுக்களைக் காரணத்துடன் பேசுவர். அவற்றுள் சீதை இராமனைக் கேட்டது ஒன்று; அது காரியப்பேச்சு. என்னை? 'உமது தந்தை தசரதன் ஒன்றுக்கு மேல் பல மணங்களைச் செய்துகொண்டானே அதைப்போல நீவிரும் ஒன்றுக்கு மேல் செய்து கொள்வீரா?' என்பதாம். அதற்கு இராமன், 'உன்னைச்செய்து கொண்ட ஒரே மணந்தான்; இனி, எக்காரணத்தைக்கொண்டும் வேறு மணம் செய்து கொள்வதில்லை' எனச் சீதைக்கு வாக்குறுதி கொடுத்தனன். இதுவே 'வந்தெனைக்கரம்' என்ற பாடலுக்குப் பொருத்தமான பொருள்; காரியப்பேச்சான நேர்மைப்பொருள்.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயா கியர் என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே. —குறுந்தொகை-49

எனும் தமிழரின் ஒரு மணக் கொள்கையைத் தமது கொள்கையாகக்கொண்டு இராமபிரான் திருவாய்மொழியால் கம்பர் சொன்னதே 'வந்தெனைக்கரம்' என்ற பாடலாகும். இங்கு மறுமை என்பது துறவறம். இதன் விளக்கம் 'தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்' பெருநூலில் காண்க.

வில்லி என்பது கம்பர் வல்லிக்கு வைத்த செல்லப் பெயர். இப்பெயரை முன்னமே காதல் மணத்தின் பொழுது 'சொற்கரும்பு வில்லி' எனச் சொல்லியுள்ளனர். களந்தை

என்பது வல்லியின் தாயார் ஊராக இருக்கலாம். அன்றி, தாயாரின் தாயார் வல்லியை வயது வரும் வரை களந்தையில் வளர்த்திருக்கலாம். இதனால் ஊரார் வல்லியைக் 'களந்தைப்பெண்' எனச்சொல்லியிருப்பர். அதனை அறிந்த கம்பர் 'களந்தைமின்னே' என்கின்றார். 'சொல்லியைச் சொல்லின்' என்ற பாடலில், வல்லியை வில்லி என்கின்றார். எம்மொழி முதலெழுத்தையும் மாற்றி இகரம் வைத்து மொழிதல் இன்றும் உண்டு. அவ்வுலக வழக்குப்படி வல்லியை வில்லி எனக் கம்பர் அழைத்திருப்பர். இவற்றால், பெற்றோர் வைத்த அன்புப்பெயர் வல்லி; கம்பர் வைத்த செல்வப்பெயர் வில்லி; ஊரார் வைத்த காரணப்பெயர் களந்தை மின் என்பனவாம். இம்முப்பெயர்களும் கம்பர் மனைவியின் பெயர்கள்.

கம்பநாடர் தமது மனைவி வல்லியம்மை கலை வில்லி என்பதற்காகவே தலைப்புப் பாடல்களை ஓரில்லில் உரையாடும்பொழுது பாடினர். முதல் பாடலில் வரும் விண்ணவர் கோமான் 1000 கண்களுள்ளவன். சேடன் 1000 வாய்களுள்ளவன். வாணன் 1000 கைகளுள்ளவன் என்பதை எண்ணிக்கொண்டு, கலை வில்லியே! களந்தை மின்னே! உன் அழகைக் காண்பதற்கு எனக்கு 1000 கண்கள் வேண்டும்; உன் அதரத்தைப் பருகுவதற்கு 1000 வாய்கள் வேண்டும்; உன் தனங்களை வருடுவதற்கு 1000 கைகள் வேண்டும் என்றனர். மேலும் ஒவ்வொரு நாளும் உன்னைச் சேரும்போதும் உன்னின்பம் நுகருவதற்கு 1000, 1000, 1000 கண், வாய், கை வேண்டும் வேண்டும் என்பதற்காக 'தோறும்' என்ற சொல் பாட்டில் வைத்தனர். இதை உன்னியே

நம்பியைக்காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணும் தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்.

என்பதில் 'தோறும்' என்னும் சொல்லை வைத்தனர்.

இரண்டாவது பாடலில் 'கணவனும், மனைவியும் வீட்டிலிருந்தமை அறியாமல் கதவைத் தட்டின தவறுக்காகப் பாண்டியன் கையை வெட்டிக்கொண்டான்; பொன்கையனானன். ஓ! தென்றலே! நாங்களிருவரும் வீட்டிலிருப்பதையறியாமல் கதவை அசைக்கிறாய். அதனால் தென்றலே! நீ எவ்வுறுப்பு வெட்டப்பட்டு என்ன ஆவாய் எனத் தெரியாதா? எனக்கேட்கிறார். இதனால், வில்லி களந்தைமின் என்னும் கம்பநாடர் மனைவி படித்த பண்டிதள் என்பதை ஐயமற அறிகின்றோம்.

22-கம்பர் அறம் செய்யும் உளப்பண்பர் உழவர் எனல்

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோம்; செருக்கரசுப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோம்யாம்;—இட்டமிலாப்
பார்ப்பார் அகத்தையெட்டிப் பாரோம்; பரிசறிந்து
காப்பார் உழவாளர் காண். —தமிழ் -நா- சரிதை-82

இச்செய்யுளைக் கம்பநாடர் பலமுறை சிந்தித்துப் பாடியிருக்க வேண்டும். ஏன்? என் இளமைப்பருவத்தில் தந்தை ஆதித்தன் பொறுப்பிலிருந்து வளர்ந்துவந்தேன்; வாலிபப் பருவத்தில் சரராமன் சடையப்பன் பொறுப்பில் இருந்து கொண்டு அன்னூர்க்குச் செவியமுதம் தந்து வாயமுதம் உண்டு வந்தேன். பின்னர், ஏரெழுபது பாடி அரங்கேற்றியதற்காகச் சடையப்பன், புதுவைக் கோமான், சேதுராயன் முதலிய வேளாண் பெருமக்கள் அளித்த வரிசைகளும், ஆட்களும், அவர்களைப் பேணுவதற்கான விளை நிலங்களும் மனைகளும் பெற்றேன். இவையனைத்தும் யானிருந்த கம்ப நாட்டிலேயே இருக்கின்றன. அங்கேயே இருக்கட்டும். அவற்றின் வருவாய்களை அவற்றைப் பாதுகாப்பவரே நுகரட்டும். திருமணம் நடந்த திருவொற்றியூரில் சில காலம் வாழல் வேண்டும். வல்லியுடன் மணவாழ்க்கையில் மகிழல் வேண்டும். அதற்காகத் தன் கலையின் பெருமையையறிந்து கைம்மாறு கருதாது கொடுப்பவன் யார் யார் எனச்சிந்திக்குங்கால்

1. வணிகனறம் செய்யான் வணிகனறம் செய்யான்
வணிகனறம் செய்யின் வணிகம்—பணிவுளத்தில்
ஈவதுபோல் ஏற்றுப்பின் ஈந்ததற்குக் கைக்கூலி
ஆவதென்றன் ருய்வான் அகம்.

என்பன முன்னிற்கின்றன. எனவே, 'செட்டி மக்கள் வாசல் வழிச்செல்லோம்' என்கின்றேன். பின், மன்னரைப் பற்றிச் சிந்திக்குங்கால்

2. மன்னன் அறம்செய்யான் மன்னன் அறம்செய்யான்
மன்னன் அறம்செய்யின் மன்மரபு—மன்னுலகில்
மன்னனெனச் செய்வான் மற்றும் அடிமையினில்
துன்னிமக்கள் வீழச்செய் சூழ்வு.

என்பன முன்னிற்கின்றன. எனவே, 'செருக்கரசுப் பொட்டி மக்கள் வாசல்வழிப் போகோம் யாம்' என்கின்றேன். பின், பார்ப்பாரைப் பறறிச் சிந்திக்கின்,

3. பார்ப்பான் அறம்செய்யான் பார்ப்பான் அறம்செய்யான்
பார்ப்பான் அறம்செய்யின் பன்னுபொருள்—பார்ப்பாருக்கு
ஈதலறம் என்றே சமுதாயத் தேற்றனவாம்
ஏதிலவற் கீயுமுளம் ஏது.

என்பன முன்னிற்கின்றன. எனவே, 'இட்டமிலாப்பார்ப்பார் அகம் எட்டிப் பாரோம் யாம்' என்கின்றேன். உழவாளரைப் பற்றிச் சிந்திக்குங்கால்,

4. உழவனறம் செய்வன் உழவனறம் செய்வன்
உழவனறம் செய்யின் உலகில்—செழுமுளத்தில்
கைம்மாறு வேண்டார் கடப்பாடாய்ச் செய்குவர்
அஇம்மா நிலத்தேவர் எற்குஆம்.

என்பன முன்னிற்கின்றன. எனவே, 'காப்பார் உழவாளர் காண்' என்கின்றேன் எனச் சிந்தித்துத் தெளிந்து கம்பர் இயற்றியதே தலைப்புப்பாடல் ஆகும். இம்முன்னின்றன நான்கும் 'திருவள்ளுவர் காவியம்' பாணர்க்குறுதியளித்த படலத்திலுள்ளன. இப்பாடலைப்பற்றி 'ஒரு வேளாளன் களத்தில் குறுணி நெல் வாங்கி வேலிக்காலில் இறைத்துப் பாடியது' எனத் 'தமிழ் நாவலர் சரிதை'யிலும், 'பிராமணன், வியாபாரி, வாணியன் வீடுகளுக்குப்போனபோது அவர்கள் உபசரியாமையால் அவர்களை நிந்தித்தும், வேளாளரைப் புகழ்ந்தும் பாடியது' எனத் 'தனிப்பாடல் திரட்டிலும்' எழுதப்பட்டுள்ளது. 'காப்பார் உழவாளர் காண்' எனும் கம்பர் வேளாளர் கொடுத்ததை வேலிக்காலில் இறைக்க மாட்டார்; இறைக்கும் அளவில் வேளாளர் கொடுத்திருக்கவும் மாட்டார்; 'காப்பார் உழவாளர் காண்' என்பவர் வேளாளரைத் தவிர வேறு வீடுகளுக்குப் போகவும் மாட்டார். போயிருப்பின் கம்பரை உபசரிக்காமல் இருக்கவும் மாட்டார். எனவே, இவை ஒருவருக்கொருவர் மாறுபட்டுப் புனைந்தனவாகும். உலகில் எச்சமுதாயத்திலும் வேளாளன், வணிகன், அரசன், பார்ப்பான் என நால்வகைத்தொழில் செய்யும் மக்களில் கைம்மாறு கருதாது கொடுப்பவன் வேளாளனே யாவான். எவருக்காயினும் கொடுக்கும் மனம் வேளாள மனம் ஆகும். இதனால் 'காப்பார் உழவாளர் காண்' என்றனர். மேலும்

மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி பிடித்தே அருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை என்றும் நிலைக்குங்கை நீடுழி
காக்குங்கை காராளர் கை. —தனிப்பாடல் திரட்டு கம்பர்-47

எனக்காராளர் கைகளைச் சிறப்பித்துப் பாடினர். இதனால், அரசரை அண்டிப் பிழைக்கும் ஆடம்பர அடிமைப் பிழைப்பைக் கம்பர் கருதவேயில்லை என்பது தேற்றம்.

23. கம்பர் நண்பர்களைப் பாடியது

1. நெற்பயிர் விளைகழனி நென்மலி வாழ்தச்சன்
கற்படு திண்டோளன் கங்கண கணகணவன்
விற்படு திருநுதலாள் மின்மினு மினுமினுவை
சொற்படி வேலைசெய்வாள் துந்துரு துருதுருவை.
—தமிழ் -நா- சரிதை-98

2. புக்கு விடைதழுவிக் கொண்டுழுத புண்ணெல்லாம்
திக்கிலுயர் காளிம்பன் தென்புழன்மான்—அக்கணமே
தோள்வேது கொண்டிலனேல், சுந்தரப்பொன் தோன்ற
[லுக்கு
வாழ்வேதும் கண்டிலமே மற்று. —தமிழ் -நா- சரிதை-92

3. அண்ணல் திருஆவி அணிபயிலை அத்தனையும்
வெண்ணிலவின் சோதி விரித்ததே—நண்ணும்
தடம்துப்பு விற்பாணம் தன்முகத்தே கொண்டு
நடந்துப்பு விற்பாள் நகை. —தமிழ் -நா- சரிதை-93

இவற்றில் முதல் பாடலுக்கு 1000 கலம் நெல் என்றும், அதற்கு மேற்கோள் 'சோழ மண்டல சதகம்'

நிச்சர் உறவே நெற்பயிராய் நீளூர்தமிழ்க்கு நென்மலிவாழ்
தச்சன்பொலி ஆயிரக்கலநெல் தந்தான்; உலகில் தாதாவாய்
மெச்சும் அவன தாண்மையினால் வென்றே கொடியின் விருது
[கட்டி
வைச்ச கொடையின் தரமெளிதோ வளைச்சேர் சோழமண்டலமே.

எனும் 97 ஆவது பாட்டைக் காட்டுவர். நென்மலி என்னும் ஊர் தொண்டைநாட்டில் ஸ்ரீபெரும்புதூருக்கு அண்மையில் உள்ளது என்றும்,

இரண்டாம் பாட்டு:- அப்போது வல்லி வீட்டுக்கு எருமை வாங்கிவரப் போய்க் காளிம்பன் நிரைகள் மேய்ப்பானைக் கண்டு அவன் பேரில் பாடிப் பாட்டுச்சொல்ல அவன் ஈன்ற எருமை 1000 கொடுத்தான். தொண்டை நாட்டில் புழல் என்பது ஒரு கிராமம். திருவொற்றியூருக்கு மேற்கில் 5 மைல் தூரத்திலுள்ளது என்றும்,

மூன்றும் பாட்டு:- 'மைலாப்பூரில் போய்த் தட்டான் திருஆலி மேல் பாடியது'. இம்மூன்று பாட்டுக்களைப் பற்றி எழுதியுள்ள குறிப்புக்கள் 'தமிழ் நாவலர் சரிதை' யில் உள்ளன.

தலைப்புப் பாடல்கள் 3-ம் முறையே கம்பர் தமக்கு நெல் வேண்டும் என்றும், எருமைகள் வேண்டும் என்றும், அணிகள் வேண்டும் என்றும் பாடியதாக அப் பாட்டுக்களில் ஒரு மொழியேனும் இல்லை; குறிப்பேனும் இல்லை. இதனால் கம்பர் யாவரிடமும் தமது குறையைச் சொல்லி இன்னது வேண்டும் எனக் கேட்கமாட்டார் எனும் உறுதியும், உண்மையும் உடையவர் என்பதைத் தெளிவாகத் தெரிகின்றோம்.

ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

எனத் திருவள்ளுவனூர் சொல்லிய இலக்கணத்திற்குக் கம்பநாடர் இலக்கியமாகக் காட்சியளித்தனர்.

கம்பநாடர் பேரில் மிக்க அன்புள்ளவராய், போற்றிப் புகழும் தன்மையுள்ளவராய், கைம்மாறு கருதாது கொடுக்கும் வளமும், வருவாயும், வண்மையும் உள்ளவராய் நென்மலிதச்சன், காளிம்பன், திருஆலி என்பவர் இருந்தனர். இன்னோர் ஊர்களுக்கும், வீடுகளுக்கும் கம்பர் பலமுறை போயிருப்பர். அவர் வீட்டிலுள்ளார் தன்மையும் அறிந்திருப்பர். அதனால், நென்மலி வாழ் தச்சன் கண கணவன் என்றும், அவன் மனைவி மினு மினுவை என்றும், அவன் வேலைக்காரி துருதுருவை என்றும் 1 ஆம் பாட்டில் சொல்லுகிறார். காளிம்பன் விடைகளை -காளை, எருதுகளைத் தழுவினதால் உண்டான புண்களை-அவன் மனைவி புழல்மான் வேது வைத்து ஆற்றுவாள் என 2 ஆம் பாட்டில் சொல்லுகிறார். தன் மனைவி வல்லிக்குக் களந்தை மின்னே என ஊர்ப்பெயர் அமைந்ததைப்போலக் காளிம்பன் மனைவிக்குப் புழல்மான் என ஊர்ப்பெயர் அமைந்துள்ளதைக்கம்பர் கருதினராவர். 3ஆம் பாட்டில் உப்பு விற்பாள் அணிந்துள்ள நகைகளின் ஒளி மயிலை முழுவதும் நிலவின் ஒளி போல் விரிந்தது என்பதால், ஆலி என்பவன் நகை வணிகருள் பெருவணிகன் என்பதை அண்ணல் என்னும் சொல்லால் பாராட்டுகின்றார். மயிலை என்பது தொண்டை மண்டலத்தில் ஆலி நாட்டைச் சார்ந்தது. அந்நகை வணிகன் ஆலி

நாட்டில் பெருவணிகன் ஆயினமையால், அவ்வணிகனை நாட்டின் பெயர் வைத்து ஆலி எனப் பொதுமக்கள் தன்னைக் கம்பன் என அழைப்பது போல் அழைப்பதாகக் கருதினராவர். இவற்றை எண்ணி

ஏத்தளித் தாயிரம் பாடல்கொண் டேநிரை ஈந்தெருமைப்
போத்தளித் தாடையும் பூணார முந்தந்து போதுறவாய்க்
காத்தளித் தாதரித் திட்டதல் லாமலும் கம்பருக்கு
மாத்தளித் தாட்பட்டு நின்றதன் றோதொண்டை மண்டலமே.

என்கிறார். இதில் கம்பரால் 1000 பாடல் கொண்டது தொண்டை மண்டலம் என்பது பற்றி இதிலன்றி வேறெதிலும் காணோம். எனினும், கம்பநாடருக்கு ஆன் நிரைகள், போத்துகள், ஆடைகள், அணிகள் எல்லாம் தந்து மிக்க உறவினராய், அன்பினராய், ஆட்பட்டவராய்த் தொண்டை மண்டலத்தார் இருந்தனர்.

24. புது மணப்பெண் வல்லியம்மை வீட்டைச் சடையப்பர் கதிர் நெற் பயிரால் வேய்ந்தனர்

புதுமாதர் வீட்டைப் புகழ்பெறவே செந்நெல்
கதிரானே வேய்ந்தருளும் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணெய் நாடன் வருநா வலர்க்குத்
தருவான் அவன் சடையன்தான். -செந்தமிழ் தொகுதி-3 பக் -11

ஒரு தமிழ்த்திருநாள் தைப்பொங்கல் திருவிழா முடிந்ததும் மனம் பொங்கல் மகிழ்வுடன் மாமனார் சதுரானன பண்டிதர் மகள் வல்லியம்மையாரையும், மருமகன் கம்பநாடரையும் சீரும் சிறப்பும் செய்து வரிசைகளுடன் திருவொற்றியூரிலிருந்து கம்பநாட்டுக்கு அனுப்பி வைத்தனர். புது மணமக்கள் இருவரையும் கம்பநாட்டார் களிப்புடன் வரவேற்றனர். வெண்ணெய் நாட்டார் விருப்புடன் வாழ்த்துக் கூறினர். கம்பநாடர் 30ஆண்டளவும் திருமணம்செய்யாதிருந்து வேற்றூர் திருவொற்றியூருக்குப் போய்த் திருமணம் செய்து வந்தமையால், கம்பநாடரைப் புது மணமகன் என்றும், வல்லியம்மையைப் புது மணப்பெண் என்றும் போற்றிப் புகழ்ந்து பேசினர். ஊரும், புறமும் முழுவதும் புது மணம் கமழ்ந்

தது. புது மண மகிழ்வில் மணமகன் கம்பநாடரும், மணமகள் வல்லியம்மையும் புது மணத்துடன் கம்பநாட்டில் தங்கள் மனையில் குடி புகுந்தனர். புது மனை வாழ்க்கையில் அமர்ந்தனர். கம்பநாடர் கடிமணம் பூண்டு வந்து மனையறம் நடத்தும்பொழுது பலபல பெரியோர் வந்து மகிழ்ந்து வாழ்த்தினர். அவ்வாறே சடையப்ப வள்ளலாரும் வந்தனர். மணமக்கள் மனையறங்கண்டு களித்தனர். புதுமணப் பெண் குடியிருக்கும் மனையைப் புதுமனையாகச் செய்ய வேண்டும் என விருப்பம் கொண்டனர். புதுமண வாழ்க்கையரைத் தம் வீட்டிற்கழைத்துக்கொண்டு போகும் முறைப்படி வெண்ணெய்நல்லூர் தம் மாளிகைக் கழைத்துப் போயினர். மணமக்களை மறுபடியும் தம் மனைக்கு அனுப்பிவைப்பதற்கு முன்னர், புதுமணப் பெண் மனையைப் புதுமனையாகச் செய்து வைத்தல் வேண்டும் என அம்மனையைப் புதுக்கி மனையின் மேலே வேய்வதை வைக்கோல் புல்லால் வேயாமல் புதிய நெற்கதிர்களுள்ள புல்லைக் கொண்டுவரச் செய்து அப்புதிய நெற்கதிர்களாலேயே தம்மூர்க்குப் புது மணப்பெண் வல்லியம்மை மனையை வேயச்செய்தனர். புது மணமகள் வல்லியம்மையையும், மணமகன் கம்பநாடரையும் சீரும் சிறப்புடன் புதுமனைக்குப் புகழ்பெறச் சடையப்பர் அனுப்பி வைத்தனர். மேலும், புது மணமக்கள் மனையறம் புகழுடன் நடைபெறுவதற்காகப் 12 கடக யானைக் காடுகளும் வரிசையாகச் சடையப்பர் வழங்கினர். இவற்றை எல்லாம் கண்டு கண்டு கம்பநாடர் களிப்புக்கடலில் திளைத்துத் திளைத்து மகிழ்ந்திருத்தலைச் சோழமண்டலத்தார் பார்த்துப் பார்த்துப்பாராட்டி

தனதா னியத்தில் உயர்ந்தோர்கள் தாமேஎன்னும் தருக்கேயோ
வினவா திரவில் நெற்கதிரால் வேய்ந்தோர் வல்லிவீட தல்லால்
கனிசேர் தமிழ்க்குப் பன்னிரண்டு கடக யானைக் காடளித்த
மனைவாழ் வுடையான் வெண்ணெய் நல்லூர் வாழ்வான் சோழ
[மண்டலமே

என்றனர்.

புது மணப்பெண் வல்லியம்மை வீட்டை வேய்வதற்காகச் செந்நெல் விளைகதிரைக் கொண்டுவந்த வயல் இருந்த ஊருக்குக் கதிர்வேய் மங்கலம் என வழங்குகின்றனர். அது குற்றாலம் இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கில் 2 மைலில் உள்ளது. கம்பநாடு குற்றாலம் இரயில்வே நிலையத்திற்குத் தென்கிழக்கில் 2 மைலில் உள்ளது. புது

மணப்பெண் வல்லியம்மை வீடு வேய்வதற்கு நெல் வயல்களைக் கண்டு கண்டு 4 மைல் தூரம்போய் நல்ல கதிர்களுள்ள நெற்பயிர்களைக் கொண்டுவந்து வேய்ந்தனர். அனைவரும் தம் தம் வீடுகளை வழக்கமாக வைக்கோலால் வேய்வர். எனினும் கம்பநாடர் பேரிலுள்ள கண்ணியத்தினாலும், திருமணம் செய்துகொண்டார் என்னும் சிறப்பினாலும், வல்லியம்மையுடன் வாழ்கின்றார் என்னும் மகிழ்ச்சியாலும் வெண்ணெய்ச்சடையப்பர் கம்பநாடர் பழையவீட்டை கதிர்களுள்ள நெற்பயிர்களால் வேய்ந்து புதிய வீடாகச் செய்தனர்.

சடையப்பர் கம்பநாடரிடம் பலப்பல நூல்களின் பாட்டுக்களையும், பொருளையும், சுவையையும், வரலாற்றையும் கேட்டுக்கேட்டு மகிழ்ந்து வந்தவர். அவற்றுள் புறநானூறு 22-வது பாடல் ஒன்று. அதில்

அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த
ஆய்கரும்பின் கொடிக் கூரை

என்பதை அங்ஙனமே அகத்தில் வைத்திருந்து கம்பநாடரின் புது மணப்பெண் வல்லியம்மை வீட்டைப் புது செந்நெற்கதிர்களால் வேய்ந்து வைத்தனர்.

25. இரண்டாம்முறை குலோத்துங்கன் முனிந்தும் கம்பர் பாடவில்லை

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம். —தமிழ் -நா- சரிதை-85

கம்பநாடரைச் சோழன் முனிவதற்குக்காரணம் உண்டு. என்னை? நான் சோழநாட்டில் உள்ள பல குறுநில மன்னர்களுக்கு மன்னனாய், மன்னர் மன்னனாக இருக்கின்றேன். அதனால் என் நாட்டிலுள்ள எல்லாப் புலவர்களும் என்னவைக்கு வருகின்றனர். என்னைப்பாடுகின்றனர். பரிசு பெறுகின்றனர். என்னவையுள்ள புலவரினும் பெரும் புலவராகிய கௌடப்புலவன் கவிராட்சதன் என்னும் ஒட்டக்கூத்தன் என்னைப் புகழ்ந்து பாடியிருக்கிறான். எங்ஙனம்? தமிழ்நாட்டின் வரலாற்றுத் தொடக்கம் முதல் இன்று

வரையும் மன்னர் பவனி வரும்பொழுது அம்மன்னனின் பேரழகில் ஈடுபட்டு அம்மன்னனைப் பெண்கள் சேரல் வேண்டும் என எப்புலவனும் பாடவில்லை. ஒட்டக்கூத்தன் மட்டுமே பவனிவரும்பொழுது எல்லாப் பருவப் பெண்களும் காமுற்றுச் சேர விரும்புவதாகப் பாடியிருக்கிறன்.' அப்பெண்களில் பூப்பு நிகழாத பேதை, பெதும்பைப் பருவப் பெண்களும், பூப்பு நின்றுபோன பேரிளம்பெண்களும் காமுற்றுச் சேர விரும்புவதாக உலாப் பாடியிருக்கின்ருன். எனக்கு மட்டுமன்று என் தகப்பன் பேரிலும் பாடியிருக்கிருன்; என் மகன் பேரிலும் பாடுவான்.

காதித் திருநாடர் கட்டரணம் கட்டழித்த
சேதித் திருநாடர் சேவகனும் —விக்கிரம சோழனுலா 84
கொங்கைக் குலைத்துக் குடகக் குவடிடித்த
செங்கைக் களிற்றுத் திரிகர்த்தனும்—விக்கிரம சோழனுலா 88

என் தகப்பன் விக்கிரம சோழன் உலா வரும்பொழுது கம்பரைக்காப்பாற்றும் திரிகர்த்தன் சடையப்பனும், கம்பருக்கு வரிசையளித்த சேதிராயனும் போற்றிப் புகழ்ந்து கொண்டு வந்தனர் என்பதைக் கண்ணுரக் கண்டு பாடிய கவிச்சக்கரவர்த்தி கூத்தரே இங்குச் சம ஆசனத்தில் வீற்றிருப்பதைக் காண்கின்ருேம். இவற்றைக் கம்பன் அறியாதவனு? அறிந்தே என்னை வந்து பாடாமல் போனுலும் பார்க்காமலும் இருக்கிருன். இங்ஙனம் எண்ணிஎண்ணி இறுமாக்கும் குலோத்துங்க சோழனுக்கு ஒட்டக்கூத்தன், கம்பன் இவர்களின் வெவ்வேருன மன நிலைகளை எண்ணிப் பகுத்தறியும் நுண்ணறிவில்லாமல் போயிற்று.

1- ஒட்டக்கூத்தன் ஒட்டிய வரலாறு:— ஒட்டக்கூத்தன் அம்மை, அப்பன் பெயர்களை இன்று வரை யாரும் சொல்லவில்லை. ஊர் திருமணவூர். சீகாழி என்பர். அதனை மறுத்து சோழ நாட்டில் மலரி என்பர். மரபு செங்குந்தர் என்பர். கூத்தன் இளமைப் பருவத்தில் சடையப்பன் தகப்பன் சங்கரனுக்கு அடிமைத் தொழில் செய்துகொண்டிருக்குங்கால் காங்கேயன் என்பவன் அழைத்துக்கொண்டுபோய் கல்வி கற்பித்தான். கவி பாடும் வல்லவனுனன். இயற்கையிலேயே கவி பாடும் திறமையன். அதனுல் காங்கேயன் பேரில் நாலாயிரக் கோவை பாடினுன். அதனுல் கௌடப் புலவன், கவிராட்சதன் என்னும் பட்டங்களைப் பெற்ருன். இதனை

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
உதவித் தொழில்புரி ஒட்டக்கூத்தனை
கவிக்களி றுகைக்கும் கவிராட் சதன்எனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் கலநாள் வியந்துகாங் கையன்மேல்
கூறுநா லாயிரக் கோவைகொண்டு யார்ந்தோன்
—செந்தமிழ்-3 பக்கம்-6

என்பதால் தெரிகின்றோம். காங்கேயன்பால் பல வரிசைகளும் வருவாய்களும் பெற்றுப் பெருமையுடன் வாழும் ஒட்டக்கூத்தன் அக்காங்கேயன் இறந்த பின் வரியனானான். அதனால் வறுமைத் துன்பத்தில் மிகவும் வருத்தப்பட்டுத் தாங்க முடியாதவனாய் விக்கிரம சோழன் பேரில்

இடுக்கண் புண்படு நிரப்புக் கொண்டுமுன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செப்பியன்
திருக்கைப் பங்கயம் சிறக்கத் தந்தன
படுக்கைக் கம்பளம் பதக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலம் கலிக்கச் சங்கினம்
கவிக்குப் பஞ்சரம் கவிக்கத் தொங்கலே —த.நா.ச. 113

எனப்பாடி வேண்டிய வருவாய்களும், வரிசைகளும், அணிகளும் பெற்று அரசவைப் புலவர் ஆயினன்; அரசன் விரும்பியாங்கு பாடும் அரசடிமைப் புலவனாயினன். ஒட்டக்கூத்தன் மனைவி மக்களுடன் ஒட்டிக் கூலாவியிருந்ததாகத் தெரியவில்லை. பாடுவதற்கும் பாடாததற்கும் ஆன உரிமையில்லாதவன். சமுதாய மக்களுடன் பழகாதவன்.

2. கம்பர் காணும் வரலாறு:— ஊரும் பேரும் உள்ள பெற்றோர்பால் இளமையில் வளர்ந்தவர். சங்கரன் மாளிகையில் மக்களைப் போலச் சம உரிமையுடன் வாழ்ந்தவர். தமது நூலுக்கு மக்களால் பரிசும்,வரிசையும், அணியும் பெற்றவர். மனைவி மக்களுடன் வாழ்ந்தவர். தமது தேவைக்கெனத் தனி மனிதனை இரந்து பாடாதவர். தனி மனிதனைப் பாடிய பாடல் அன்புப் பாடல். அரசரைப் பற்றிய அன்புப் பாடல் ஒன்றுமே பாடவில்லை. சமுதாய மக்களுடன் பழகுபவர். பாடுவதற்கும் பாடாததற்கும் ஆன உரிமையுள்ளவர். சுருங்கக் கூறின் ஒட்டக்கூத்தன் அனைத்திலும் அடிமையன்;

கம்பநாடர் அனைத்தினும் உரிமையர். அவற்றைக் குலோத்துங்கன் கூர்ந்து தெரியவில்லை. தான் சொல்லியபடி மட்டும் அன்று; நினைத்தபடியெல்லாம் கூத்தாடும் கூத்தரைப் போலவே கம்பநாடரையும் குலோத்துங்கன் கணித்து விட்டான்.

இத்தகைய இறுமாப்புடன் கம்பநாடரைப் பாடுவிக்க வேண்டும் என எண்ணினன். முதன் முறை அழைப்பிற்கு வந்த கம்பர் காவிரிப் பெருக்கைப் பாடினரேயன்றி நம்மைப் பாடவில்லை. அதனல் சிந்தையில் சினமிருந்தும் முதல்முறை அச்சுறுத்தக்கூடாது என அன்பு முறையில் அனுப்பிவிட்டோம். இம்முறை வரவழைத்துப் பாடச்சொல்வோம்; பாடாவிட்டால் அச்சுறுத்துவோம் எனக் கம்பரை அரண்மனைக்கு வரவழைத்தான். கம்பநாடர் முன்பு போன்றே வரிசைகளுடன் ஆடை அணி அலங்காரத்துடன் வந்தார். குலோத்துங்கனும் கூத்தரும் சிறந்த முறையில் உவப்புடன் வரவேற்றுபசரித்தபின் ஆடிய உரையாடலாவது:—

சோழன்:— கம்பரே! நீவிர் யார் யாரையோ பாடுகிறீர், என்னை மட்டும் ஏன் பாடக்கூடாது?

கம்பர்:— யான் யார் யாரைப் பாடுகிறேன்?

சோழன்:— வண்ணான், அம்பட்டன், கொல்லன் முதலானவர்.

கம்பர்:— அம்மூவரும் மக்களின் வாழ்க்கைக்கும், நாகரீகத்திற்கும் அடிப்படைத்தொழிலர்; அதனல் யான் பாடினேன்.

சோழன்:— (ஏளனச் சிரிப்புடன்) கம்பரே! எங்ஙனம்? விளக்குக.

கம்பர்:— அரசே! உங்கள் உடைகள் சந்திரனைப் போல் வெண்மையாயுள்ளன. எவரால்? உமது திருமுகம் கண்ணாடி போல் வழுவழுப்பாய்ப் பொலிவது எவரால்? உமது கையிலுள்ள வேல் மின்னுவது எவரால்? அம்மூவராலும் அல்லவா? உமக்கு வெற்றியைத் தரும் வேலை வடித்துக்கொடுப்பவன் கொல்லன் கடமை என்று செய்கிறான். நீவிரும் அரசைக் கடமை என நன்முறையில் ஆளல் வேண்டும்.

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே —புறநா. 312

எனப் பொன்முடியார் என்னும் பெண்புலவர் பாடினதையறி

யீரா? இன்னும் கேண்மின். தோயன்மாறன் எனும் உம் போன்ற அரசன் கொல்லனிடம் போய்

கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே —புறநா. 180

என்பதால் நீவிர் இரக்கும் கொல்லன் என்னிடம் அன்பும் பணிவுமாக இருந்ததற்காக யான் பாடினதை யார் யாரையோ பாடினேன் எனச் சிறுமையாகக் கொள்ளற்க; பெருமையாகக் கொள்க.

சோழன்:— (கூத்தரைக் கூர்ந்து நோக்கி) நீவிரே கூறுக

கூத்தன்:— கம்பரே! நீவிர் சொல்லிய மாறன் ஈர்ந்தூர்க் குறுநில மன்னன். முடியுடை மன்னன் அல்லன். குறுநில மன்னர் இரந்தாலும் இரப்பர். முடியுடை மன்னர் அன்னுரை இரவார். ஒருக்காலும் இரவார். ஆணையிடுவீர். அரசன் குறிப்பறிந்து பாடவேண்டும். நாங்கள் அவ்வாறுதான் பாடுகிறோம். நீவிர் குறிப்பறிந்து பாடாமல் போனாலும் ஆணையிட்ட பின்னராவது பாடவேண்டாமா? இது உமது கடமை.

கம்பர்:— இது எனது கடமையன்று. நும்போல் குறிப்பறிந்து பாடிக் கும்பிட்டு வாழமாட்டேன்; ஆணைக்கும் பாட மாட்டேன்.

சோழன்:— ஆ! ஆ! அப்படியா! (என இடது கையால் மீசையை முறுக்கிக்கொண்டு) கம்பரே! எனது நாட்டிலிருந்தும் என்னைப் பாடச் சொல்லியும் பாடவில்லை என்றால் என் நாட்டை விட்டுப் போய்விடு.

கம்பர்:— அரசே! (என உள்ளங்கையை காட்டி) இவ்வளவு தான் உம் நாடு; ஆனாலும் உம் நாட்டைப் பாடுவேன். ஏன்? நான் பிறந்து வளர்ந்து பயின்றது சோழ நாடாதலால் நாட்டைப் பாடுவேன். உன்னைப் பாடேன்.

அரசன்:— (அச்சுறுத்தலினால் கம்பன் பாட இசைந்தனன் என எண்ணி) ஆனால் பாடு பார்ப்போம்.

கம்பர்:— தலைப்புப் பாடலைப் பாடித் தலையசைத்தனர்.

சோழன்:— சினந்தனன்; தணிந்தனன்.

கூத்தன்:— குனிந்தனன் முகம்.

மற்றவர்:— மலர்ந்தனர் முகம்.

சோழன்:— கம்பரே! நாட்டின் எல்லைகளைக் கண்டிருக்கிறீர்.

அளவு சொல்லுகிறீர். தேன் சொரியும் கொல்லி மலை என்றீர். அதுவே என் செவிகளுக்குத் தேன். மறுமுறை என்னைப்பாடல் வேண்டும்.

கம்பர்:— அரசே! ஆணைக்குப் பாடேன். பணிவுக்குப் பாடுவேன்.

அனைவர்:—கம்பரை வந்தவாறே வழியனுப்பினர்.

26. கம்பர் தமிழ் நாடும் எல்லைகளும் காணல்

1. கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளாறு இருபத்து நால்காதம்
சோணாட்டுக் கெல்லைஎனச் சொல்.

—தனிப்பாடல் திரட்டு--கம்பர்-1

2. வெள்ளாறது வடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனல்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத்து நால்காதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி. ஷை –2

3. வடக்குத் திசைபழனி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் முன்னெண் பதின்காதம்
சேரநாட் டெல்லைஎனச் செப்பு. ஷை –3

4. மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பிநாகி திகழிருபதின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு. ஷை –4

'கொற்றவா! நீ முனிந்தால் இல்லையோ எங்கட் கிடம்' எனச் சொல்லும்பொழுது சோழ நாட்டின் பரப்பு 24 காதம் என்று சொன்ன கம்பநாடருக்குச் சோழ நாட்டின் எல்லைகளைக் காணல் வேண்டும் என விருப்பம் வந்தது. அதனைக் கண்டபின் மற்றை மூன்று நாடுகளுக்கும் சென்று அந்நாடுகளின் எல்லைகளைக் கண்டனர். தமிழ்நாட்டில் எங்கெங்குப் போகவேண்டும் என எண்ணினரோ அங்கங்கெல்லாம் சென்றனர். தமிழ்நாட்டுச் சாதி சமயம் அரசியர்) அமைப்புக்களை

ஆய்ந்து அறிந்து கொண்டனர். கம்பநாடர் வடநாடு காண வில்லை; நிறையக்கேட்டனர்; மிகவும் படித்தனர். தமிழ்நாடு கண்டனர். கண்டதைப்பற்றிக் கேட்டனர். கண்டு கேட்டவற்றைப் படித்தனர். இங்ஙனம் இவ்விரு நாடுகளைப் பற்றியும் கண்டும், கேட்டும் தேர்ந்து தெளிந்த அறிவின் அநுபவ ஆற்றலே இராமகாதை இயற்றக் காரணமாயிற்று.

27. கம்பர் கண்ட இராமாயணங்கள்

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும் முந்திய
நாவி னுரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னுலி துணர்த்திய பண்பரோ.

எனக் கம்பநாடரே பாடியிருப்பதனுல் தேவமொழி என்னும் வடமொழியில் வான்மீகர், வசிட்டர், போதாயனர் என்னும் மூவர் இராமாயணங்கள் செய்திருந்தனர். சிலர் வசிட்டருக்குப் பதில் வியாசரைச் சொல்வர். எனவே, வான்மீகி இராமாயணம், வசிட்டர் இராமாயணம், போதாயன இராமாயணம் என்னும் மூன்றும், அவற்றுடன் வியாசர் அத்யாத்ம இராமாயணமுங் கூறி நான்கென்பர், கம்பர் சொல்லும் மூன்று இராமாயணங்களில் முந்திய நாவினுரை வான்மீகியாகக்கொண்டு வான்மீகி இராமாயணத்தை முதல் நூலாகக்கொண்டு கம்பர் இராமாவதாரத்தைப் பாடினுர் என்பர். கம்பர் வான்மீகி இராமாயணம் ஒன்று மட்டுமன்று. தம் காலத்திலிருந்த சியவனர் இயற்றிய உரைநடை இராமாயணம், ஆனந்த இராமாயணம், அத்யாத்ம இராமாயணம், அத்புத இராமாயணம், சம்பூர்ண இராமாயணம், அக்கினிவேச்சிய இராமாயணம், தத்துவ சங்கிர இராமாயணம், யோக இராமாயணம், இரகு வமிசபட்டி காவியம், அனர்க்க ராகவம், பிரசன்ன ராகவம், மகா நாடகம் எனப் பல இராம கதைகள் வட மொழியிலிருந்தன. இவ்விராமாயணங்கள் அனைத்தும் ஆரிய மதச்சார்புள்ள வான்மீகி இராமாயணத்தைப் பின்பற்றியனவேயாம். புத்த, சைன சமய இராமாயணங்கள் வான்மீகியைப் பின்பற்றியனவல்ல அவை வருமாறு:-

1. புத்த சாதகக் கதைகளில் முதலில் சொல்லும் இராமாயணம்:

தசரதன் காசியரசன். மனைவிகள் 10000 உள்ளவன். மூத்த மனைவிக்கு இராம பண்டிதன், இலக்கண குமரன், சீதை என்னும் மக்கள் மூவர். மூத்த மனைவி இறந்தபின் இளைய மனைவிக்குப் பிறந்தவன் பரதன். இளையவள் பேரிலுள்ள அன்பினால் தசரதன் ஒரு வரம் இளைய மனைவிக்குக் கொடுத்தான். அவ்வரத்தின்படி இளைய மனைவி தன் மகன் பரதனுக்கு அரசாட்சி தரும்படி கேட்டாள். அரசன் மறுத்து வந்தான். இளையவள் மூத்த மனைவியின் மக்களை வஞ்சனையால் கொன்றுவிடுவாள் என அச்சம் கொண்டு இராம பண்டிதர் இலக்கண குமரன் சீதை என்னும் மூவரையும் அழைத்து 12 ஆண்டுகள் காட்டில் போயிருந்து பின்னர் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறவும் அம் மூவரும் அழுதுகொண்டே காட்டுக்குப் போயினர். குடிசையைக் கட்டி அதில் அம்மூவரும் இருந்தனர். இளையராகிய இலக்கண பண்டிதரும் சீதையும் காய் கனிகளைக் கொண்டு வர இராம பண்டிதர் அவருடன் உண்டு வந்தனர். பின் தசரதன் இறந்ததைப் பரதன் சொன்னதைக் கேட்டு இலக்கணனும் சீதையும் துயரப்பட்டார்கள். இராமன் துயரப்படவில்லை. ஏன் எனப் பரதன் கேட்க "சென்றது திரும்பி வராது என்பதை அறிந்தும் அறிவுள்ளவன் எதற்காக அழுது புலம்ப வேண்டும்" என இராமன் சொல்லினன். காசிக்கு வந்து அரசாட்சி ஏற்க மாட்டேன். ஆண்டுகள் மூன்று கழித்து வருகிறேன் எனத் தனது தர்ப்பைப் புல்லின் பாதுகையைக் கொடுக்கவும் பெற்றுக்கொண்டு பரதன், இலக்கணன் சீதை இவர்களுடன் காசிக்குப் போய் விட்டான். பின் இராமன் காசிக்கு வந்தவுடன் சீதையைப் பட்டத்து அரசியாக்கி இராமனுக்கும் சீதைக்கும் முடிசூட்டினார்கள். 16000 ஆண்டு அரசாண்டார்கள்.

இதன் உட்பொருள்:— புத்தனை இராமனாகவும், புத்தன் தகப்பன் சுத்தோதனனைத் தசரதனாகவும், புத்தன் தாய் மாயாதேவியைச் தசரதன் பட்டத்தரசியாகவும், புத்தன் மகன் இராகுலன் தாய் யசோதையைச் சீதையாகவும், ஆனந்ததேரரவைப் பரதனாகவும் கொள்ளவேண்டும்.

'மறைந்துபோன தமிழ் நூல்கள்' பக்கம் 198—206 உள்ள சைன இராமாயணம் கதைச் சுருக்கம்:—

தசரதன் ஜனகனுடைய யாகத்தின் பொருட்டு இராமன் இலக்குமணர்களை மிதிலைக்கு அனுப்பினான். ஜனகன் இராம

னின் அழகையும், ஆற்றலையும் கண்டு சீதையை இராமனுக்குத் திருமணம் செய்வித்தான். தசரதன் தனது வரணசி நகரத்துக்கு இராமனை அரசனாகச்செய்து சீதையுடனும், இலக்குமணனுடனும் இருக்கும்படி செய்தான். ஒரு நாள் நாரதர் இராமன் சபைக்கு வந்தபொழுது இராமன் தக்க வரவேற்பு செய்யாததற்காக இராவணனிடம் சென்று சீதையின் அழகைச் சொன்னான். இராவணன் தனது பணிப்பெண்களில் வல்லவளான சூர்ப்பனகையை அனுப்பிச் சீதையைக் கொண்டுவரும் முயற்சி வீணாகவே, இராவணன் தனது மந்திரிகளில் ஒருவனான மாரீசன் சூழ்ச்சியினால் சீதையைக் கவர்ந்து கொண்டுபோனதை இராமன் தெரிந்து, இராவணனைக்கொன்று சீதையை மீட்டுக்கொண்டு போனான். சூர்ப்பனகை இராவணனின் தங்கையல்லவென்றும், சூர்ப்பனகையை இராமன் மூக்கறுக்கவில்லை என்றும், வாலியை இலக்குமணன் கொன்றான் என்றும் சைன இராமாயணம் கூறுகிறது.

சுழல்விழித் தறுகண் வேழத்
 தடக்கைபோல் திரண்ட தோளாய்
உழைவிழி யார்சொல் கொண்டால்
 உறுவர்வெந் துயரம் என்னும்
பழமொழி அதனை ஓர்ந்தும்
 பாவியேன் சொல்லைக் கேளா
உழையின்பின் போன வேந்தே!
 உனக்குற்ற தறிகி லேனே.

எனச் சீதை அசோகவனத்தில் சொல்லினள். இது சைன இராமாயணம்.

மங்கையர் பொருட்டால் எய்தும்
 மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின் றுணர்தி வாலி
 செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தி னானே
 அல்லலும் பழியும் ஆதல்
எங்களில் காண்டி யன்றே
 இதனின்வே றுறுதி யுண்டோ. -கிட்கிந்தா அர-12

என இராமன் சுக்கிரீவனனுக்குக் கூறினன். இது ஆரிய இராமாயணம். இவ்விரு இராமாயணக் கருத்துக்கள் ஒரே

தன்மையன எனினும், சைனர் சீதை சொல்லியதாகச் சொல்வர்; கம்பர் இராமன் சொல்லியதாகச் சொல்வர்.

தொடர்த்தொடர்ப் படுவதொக்கும்
 தொட்டில் சுருக்கு, மெய்யைக்
கடக்கப்பாய்ந்திட இணைத்துக்
 கறுகினைக் கறித்துக் காதல்
வடிக்கண்ணார் போல நோக்கும்
 ....
அடுத்தடுத் தணுகும் நீங்கும்
 அணியது போன்று சேய்த்தாம்

இது சைன இராமாயணம்.

குன்றிடை இவரும் மேகக்
 குழுவிடைக் குதிக்கும் கூடச்
சென்றிடின் அகலும் தாழில்
 தீண்டலாம் தகைமைத்தாகும்
நின்றதே போல நீங்கும்
 நிதிவழி நேயர் நீட்டும்
மன்றலம் கோதை மாதர்
 மனர்எனப் போயிற் றம்மா

இது கம்பர் இராம காதை. இவ்விரு பாடல்களும் ஒன்றைப் பார்த்து ஒன்றைச் செய்தன போலுள்ளன. இன்னும் சைன இராமாயணம் 10 செய்யுட்கள் 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' பக்கம் 206 முதல் உள்ளன. மேலும், பழைய இராமாயணப்பாடல் 5 அந்நூல் 196 பக்கம் முதல் உள்ளன. 'காவிய காலம்' 206 பக்கம் முதல் பழைய சைன இராமாயணச்செய்யுட்கள் 13 உள்ளன. 'காவிய காலம்' 211 பக்கம் இராம சரிதம் 2 வெண்பாக்களும், இராமாயணம் 4 வெண்பாக்களும் உள்ளன. மேலும், 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' 196 பக்கம் முதல் 5 ஆசிரியப்பாக்கள் உள்ளன. வரலாற்று முறையில் பௌத்த சைன இராமாயணங்கள் கம்பரின் இராம காதைக்கு முன்னிருந்தனவாகும்.

முன்னர் அயோத்தி, மிதிலை நகரங்களில் பரவியிருந்த இராமபிரான் கதை காசி நகர் வரையும் பரவிற்று. பின்னர், வடக்கே மலையும், கிழக்கும் மேற்கும் கடல்களும் ஆனமையால் வடநாடு முழுவதும் பரவி வரவரத் தென்னாடு முழுவதும் பரவி இலங்கைக்குப் போய் வீற்றிருந்தது.

இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரல்செறி மரபின செவித்தொடக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றுயாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தாங்கு. -புறநா-378

முழங்கிரும் பௌவம் இரங்குமுன் துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே. —அக்நா-70

எனும் செய்யுட்கள் இராமகாதை தென்னாடு முழுவதும் பரவி யிருந்தமைக்குச் சான்றுகளாம்.

முன்னாளில் வடநாடோ டிருந்தகதை விரிந்துசெல மூன்று பக்கம்
பொன்னான மலைகடல்கள் குறுக்கிடவே வான்மீகி பொருந்த
[ஆய்ந்து
தென்னாடோ டிலங்கைவரை காதைகளை விரித்துரைத்தான்;
[தெளிந்த கம்பர்
தன்னான காதைகளைப் பாத்திரத்தில் பெய்தமைத்தான்
[சரிதம் அன்று.

என எளியேனியற்றிய 'கம்பர் காவியம்' கவி இராம காதை விரிந்தமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

28. கம்பர் ஏன் தமிழில் பாடினர்?

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும் முந்திய
நாவி னுருரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னுலி துணர்த்திய பண்பரோ

வைய மென்னை அகழவும் மாசெனக்
கெய்த வும்இது இயம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே

எனக் கம்பரே தேவபாடை, தமிழ்மொழி என இரண்டு

மொழிகளைச் சொல்லி நான் தமிழ் மொழியில் பாடுகிறேன் என்கிருர். தேவபாடை என்பதோ எம்மொழியினும் சிறந்த மொழி; தமிழ் மொழியினும் சிறந்த மொழி என யாவரும் எண்ணுகின்றனர். இதைக் கம்பர் செவ்வனே சிந்தித்துத் தேவபாடை என்பது விண்ணுலகத்தேவரும் பேசாத மொழி; மண்ணுலக மக்களும் பேசாத மொழி. அது விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில் அந்தரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள ஏடுகளில் உள்ள மொழி. எனவே, தொங்கும் ஏடுகளில் மட்டும் இல்லாமல் மக்கள் பேசும் மொழியாகவும் ஏடுகளில் எழுதிப் பயன்படுத்தும் மொழியாகவும் உள்ள மொழியில் பாடவேண்டும் என எண்ணினர். அதற்குத் தமிழ் மொழியைத்தேர்ந்தெடுத்தார். தமது தாய்மொழி வடுகமொழியைத் தேர்ந்தெடுக்காமல் தமிழ்மொழியை ஏன் தேர்ந்தெடுத்தார்? என வினவலாம். இது நல்வினவே.

வரலாற்றுத் தொடக்கத்திலேயே வடுக மொழி தனி மொழியாக வழங்கப்பட்டு வந்திருப்பினும், வடுக மொழியில் இலக்கண இலக்கியங்கள் இருந்திருக்கலாம். அவை ஒன்றுமே இன்று இல்லை. நூற்றுண்டு 10க்குப் பின்னர் தோன்றிய இலக்கியங்கள்தான் இன்று வடுக மொழியில் உள்ளன. கம்பர் காலத்து 12-ஆம் நூற்றுண்டில் சாளுக்கிய இராசராசேந்திரர் காலத்து நன்னய்ய பட்டர் முதலில் மகாபாரதத்தைத் தெலுங்கில் எழுதினர். அதன் பின்னரே, தெலுங்கில் இலக்கியங்கள் தோன்றின. இதனல் கம்பர் காலத்தில் தாம் தேர்ந்து தெளிந்து காவியம் இயற்றுவதற்கான இலக்கண இலக்கியங்கள் இல்லாமையால் தம் தாய் மொழியாம் வடுக மொழியில் பாடவில்லை.

வரலாற்றுத்தொடக்கத்திலேயே தமிழில் இலக்கியங்கள் மிகவும் பண்பட்டிருந்தன. இவற்றிற்கெல்லாம் முன் நூலும் முதல் நூலும் ஆகத் தொல்காப்பியனர் இயற்றிய ஐந்திரம் இருந்தது. ஐந்திரமே தமிழர் சமுதாயத்தின் முதல் நூலாகும். ஆரியர் சமுதாய வேதங்கள் ஒருவரால் இயற்றப்படாமல் பலரால் பலப்பல காலங்களில் இயற்றப்பட்டிருந்தமையால் ஆரியர் சமுதாயத்திற்கு முதல் நூல் என ஒன்றில்லாமல் போயிற்று. எனவே தமிழர் சமுதாய முதல் நூலாகிய ஐந்திரமே ஆரியர் சமுதாய நூல்களுக்கும் முதல் நூலாக இருந்தமையால், ஐந்திரத்திலிருந்து தமது சமுதாய அமைப்பிற்கு வேண்டியன எடுத்துத் தமது நூல்களில் வைத்துக்

கொண்டு, அவற்றைத்தமதெனச் சொல்லிக் கொண்டனர். இவற்றின் விளக்கம் "தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்" என்னும் பெருநூலில் காண்க. இத்தகைய ஐந் திறத்தைக் கம்பர் தமது கருத்தில் கருவூலமாகக் கொண்டனர்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களேயும் முறையே அமைத்துக காவியம் போல் ஒழுங்குபட ஒருவரால் இயற்றப்பெற்ற நூல் ஆரியத்தில் இல்லே. அம்முப் பால்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டனவும் ஆகப் பலரால் இயற்றப்பட்டனவே இருந்தன. அம்மாறுபாடும் வேறு பாடும்இல்லாமல் முதற்புலவர் திருவள்ளுவர் ஒருவரால் இயற்றப் பெற்ற திருக்குறள் என்னும் முப்பால் நூல் இருந்தது. இதன் அமைப்பைத் 'திருவள்ளுவர் காவியம்' என்னும் புது நூலில் காண்க. இத்தகைய முப்பாலேக் கம்பர் தமது உள்ளத்தில் முழு நூலாகக் கொண்டனர்.

தமிழர் சமுதாய அமைப்பின் கொள்கைகளே ஒவ்வொன்ருகச்சொல்லும் தொகை நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் தமிழர் நூல்களேத்தவிர மற்ற நூல்கள் அனேத்தும் தமிழர் சமணபுத்த சமயத்தினராய்ச் சொல்லும் நூல்களேயாம். மற்று, சிந்தாமணியோ காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்ற இன்ப வாழ்க்கையில் ஒருவனும் ஒருவளும் ஆக வாழும் தமிழர் சமுதாய இல்வாழ்க்கையையும், அதன் மாண்பையும், பயனேயும், சொல்லாமல் ஒருவன் பல மணங்களேச் செய்யலாம் என்பதற்காக எட்டு மணங்களேச் சொல்லி முடிவில் இவ்வுலக வாழ்க்கை துக்கம் என்னும் துறவு வாழ்க்கையைச் சொல்வதாகும்.

சிலப்பதிகாரமோ தமிழரின் காதல் மணமின்றிப் பெற்ருேரால் மணம் செய்யப்பெற்றவன் மனேவியை விட்டு விட்டுப் பரத்தை குலம் ஒருவளோடு வாழ்ந்த வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களினுல் அயல் நாடு சென்று கொலே யுண்ணும் கதைகளின் இடையிலும் ஈற்றிலும் சைனசமயத்தைச்சொல்லுவதுடன் கண்ணகியின் கற்பின் மாண்பைச் சொல்லும் துன்பநாடகமாகும். மணிமேகலேயோ வரலாற்றைக்கடந்து புத்தசமயக் கதைகளேப் புனேந்து சொல்லும் புத்தசமயக் கதைத்தொகுப்பாகும். சூளாமணியோ தமிழர் சமுதாயத்தில் மட்டுமன்றி ஆரியர் சமுதாயத்திலும் வழங்காத விசயன் துவிட்டன் என்பவரின் கதைகளேயும் முடிவில்

சைனசமய முத்தியையும் சொல்லும் ஒரு கதைச் செய்யுள் நூலாகும்.

நீலகேசி, குண்டலகேசிகளோ சைன புத்தசமயங்களை வாதில்வென்று முடிவுசொல்லும் பட்டிமண்டபத் தீர்ப்புக்களாகும் மற்றையன நீதிநூல்கள் என்னும் முறையில்சைன, புத்த சமயத்தினரால் சொன்னவையாகும்.

கலிங்கத்துப்பரணியோ தமிழரசர் வெற்றியைப் பற்றிச் சமயச்சார்பில்லாமல் தமிழர் சமுதாய அரசியல் சார்பில் பாடிய தமிழர் நூலாகும். பெருங்காவியம் அன்று; சிறு காவியம் ஆகும். ஒட்டக்கூத்தனே சமுதாயப் பெண் மக்களின் இயற்கைத்தன்மைக்கு முற்றும் மாறாகவும், தமிழர் சமுதாயத்தனித்தலைவன் தொல்காப்பியனார்

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்

என இயற்றியருளிய மகளிர் மாண்பிற்கு முற்றும் மாறாகவும் பாட்டன், மகன், பேரன் எனும் 3 அரசர் பேரிலும் மூன்று உலாக்களைப்பாடினன்.

இங்ஙனம் தம்காலத்திலும், தமக்கு முன் காலத்திலும் இருந்த எல்லா நூல்களிலும் உள்ள கலைநயங்களையும் கவியமைப்பையும் கம்பர் எடுத்தெடுத்துத் தமது இராமகதையில் அவ்வவ்விடங்களில் வைத்துப்போற்றியிருக்கின்றனர்.

இவையனைத்துக்கும் மேலாக ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரப்பிரபந்தம் பாசுரங்கள் அனைத்தையும் தம் நெஞ்சம் என்னும் ஏட்டிலேயே கம்பர் எழுதிக்கொண்டனர். ஆழ்வார் 12 பேரில் எவ்வாழ்வாரை நினைத்தாலும் "போதக் கடல் எங்கள் தென்குருகூர்ப்புனிதன்" எனப்போற்றும் நம்மாழ்வாரே தம்மாழ்வாராகச் சேவைசாதிப்பர். அவ்வாழ்வார் பாசுரங்களில் எப்பாசுரங்களைச் சாதிக்கச்சொல்லினும் அவற்றிற்கெல்லாம்

கற்பார் ராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ
புற்பாமுதலாப் புல்லெறும் பாதிஇவை ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தினன் நான்முகனார் பெற்ற நாட்டுளே-7-5-1

என்னும் பாசுரத்தை மெய்ம்மறந்து பாடுவர்.

உலகவழக்கில் பேசப்படாமல் ஏடுகளில் உள்ளதைப் புலவரால் படிக்கப்படும் ஆரிய மொழியைத் தேவபாடை என்றனர். தேவர், புலவர், தேவபாடை புலவர் பாஷை. "வேதம் தமிழ் செய்தமாறன்" என்பதால் தமது பரமாசிரியரான நம்மாழ்வார் தேவபாடை வேதத்தைத் தமிழில் தோத்திர அமைப்பில் பாடியதைப்போலத்தாமும் தேவபாடை ராமாயணக்கதைக்கு காவிய அமைப்பில் தமிழில் பாட வேண்டும் என எண்ணினர். அங்ஙனம் பாடும்பொழுது தமிழின் இனிமையும் கவியின் அமைப்பும் உள்ளத்தில் ஊறிப்பெருகியதை ஆங்காங்கு வடித்துச் சொல்லியிருக்கின்றனர். அவை வருமாறு:—

1—தமிழ்

தமிழ்எனும் அளப்பரும் சலதி — பால-தாடகை—38
தமிழ்த்தலைவனை நிகர்த்தது — அயோத்தி-ஆற்று—44
நீண்டதமிழ் — ஆரணிய-அகத்தி—35
தழல்புரைசுடர்க்கடவுள் தந்த தமிழ் — ஆரணிய-அகத்தி—41
என்றும் உளதென்தமிழ் — ஆரணிய-அகத்தி—47
வண்டுதமிழ்ப் பாட்டிசைக்கும் — கிட்கிந்தா-பம்பா—29
வண்தமிழ் உடைத்தென்திசை — கிட்கிந்தா-பிலநீங்கு—2
தமிழ்நிகர் நறவம் — கிட்கிந்தா-பிலநீங்கு—37
தண்தமிழ்ப் பசுந்தென்றல் — சுந்தர-ஊர்தேடு—210

2—கவி

முத்தமிழ்த்துறையின் முறைபோகிய
உத்தமக் கவிஞர் — சிறப்புப்பாயிரம்—9
சீரியகூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர் — பால-நாட்டு—1
சான்றோர்கவி எனக்கிடந்த கோதாவிரி — ஆரணிய-சூர்ப்ப—1
நல் இயல் நவையறு கவிஞர் — உயுத்த-முதற்போர்—114
கவிஞரின் அறிவின் மிக்காய் — உயுத்த-கும்பகருண—130

எனக்கம்பர் கனிந்து கருத்துருகிச் சொன்ன வண்ணம் கடவுள் தமிழிலும், தமிழ் சான்றோர் கவிகளிலும் உள்ள ஆர்வத்தினாலும், ஐந்திறம், முப்பால் என்னும் முதன்மை முந்நூல்களை எடுத்துக்காட்டாகக் கொண்டுள்ள அன்பிற்காகவும் இன்தமிழில் இராமகாதையை இயற்றிவருளினர். தலைப்பின் முதல் பாட்டில் வரும் தேவபாடை ஆரியமொழியாகும்.

இரண்டாவது பாட்டில் வரும் தெய்வமாக கவி ஆழ்வார்களின் அருளிச்செயல்களாகும். தலைப்பு 1-ல் வரும் "மூவரான வர் தம் முனும்முந்திய நாவினுர் உரை" என்பதற்கு மூவரைக் காட்டினும் முதன்மையான நாவையுடைய ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் என்றும், தலைப்பு 2-ல் வரும் "தெய்வ மாக்கவி" என்பதற்குப் பரம்பொருளான தெய்வத்தைப் பற்றிச் சொல்லும் ஆழ்வார்களின் பாசுரங்கள் என்றும் பட்டிமண்டபம் பற்ருத கம்பர் இராமகதைச்சொற்பொழிவுப் பாகவதப்புலவர் சொல்லிவருகின்றனர்.

பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணன் விபவ அவதாரங்களின் சரணுகதி ரட்சக அவதாரமான இராமாவதாரத்தின் வைபவத்தைச் சாதிக்கும் ஆழ்வார்களின் பாசுரங்களிலுள்ள இராமாவதாரச் சிறப்பியல்புகளைத் தொடர்பாகக் காவிய அமைப்பில் வைத்துப்பாடல் வேண்டுமெனும் அன்பின் பெருக்கினுல் இராமகதையைக் கம்பர் இயற்றினர். இதனைச் சிந்தித்தே ஆழ்வார்களைத்தலைப்பு 2-ல் "பொய்யில் கேள்விப் புலமையினேர்" என்றும், இவ்விராமகதை பாடுவதற்குக் காரணம் என்னவெனில் என்பதற்கு "இது இயம்புவது யாதுஎனில் பொய்யில் கேள்விப்புலமையினேர் புகல்தெய்வ மாக்கவி மாட்சி தெரிகவே" என்றும் கம்பரேபாடியருளினர். இதனுல்தமிழ்நாடு செய்த தவப்பயனுல் தோன்றிய வடுகக் கம்பர்இராமகதையைத் தெய்வத்தமிழால் தெய்வக்காவியங் களில்இயற்றி அருளினர் என ஒவ்வொரு தமிழனும்தமிழின் பெருமை கொள்ளல் வேண்டும்.

29. கம்பர் காவியம் வழிநூலன்று முதல் நூல்

நாரணன் விளையாட்டெல்லாம் நாரதமுனிவன் கூற
ஆரணக் கவிதைசெய்தான் அறிந்தவான்மீகி என்பான்
சீரணி சோழநாட்டுத் திருவழுந் தூரில் வாழ்வோன்
காரணக் கொண்டையான் கம்பன் தமிழினுல் கவிசெய்தானே

என்னும் இராமகாதைப்பாயிரத்தால் முதல் முதல் இராம கதையுள் உள்ள நாரணன் விளையாட்டுக்கள் எல்லாம் நாரதன் கூறினுன் எனத்தெரிகிறேம். நாரதன் புனைபெயர் வரலாற்றில் உள்ளதோ இல்லாததோ ஆன பெயர், இடங் களை வைத்துக்கொண்டு ஒன்றுக்கொன்று மாருன புனை

கதைகளைச்சொல்பவன் நாரதன் மட்டும் அல்லன்; எல்லாப் பௌராணிகரும் ஆவர். ஒவ்வொரு நாட்டாரும், சமயத்தாரும் தத்தமதுசமயத்துக்கும், நாட்டுக்கும் ஒத்தவாறு பலப் பலவிதமாகப் புனைந்து விட்டனர். தம்தம் சமுதாயத்தினும் சமயமே மேன்மையுற்ற தெனக்கருதிப் புனைந்தகதைகள் இராமாயணத்தில் பலப்பல உள்ளன என்பதற்காகக் ‘கதை’ என்றனர். அக்கதை சமயசம்பந்தமானகதை என்பதற்காகத் “தெய்வமாக்கதை” என்றனர். மேலும் கம்பர் இயற்றிய இராமகாதையை “கம்ப நாடன்பண்ணிய இராமகாதை”என்றனர். கம்பநாடரே தாம் செய்த இராமகாதை வரலாறன்று, கதை என்பதற்காக “இராமவதாரப் பேர்த்தொடை நிரம்பிய தோமறுமாக்கதை” என்றனர்.

அவற்றில், புத்தசைன இராமாயணக்கதைகள் தமது சமுதாய அமைப்பிற்கு முற்றும் மாறுபட்டிருந்தமையால் அவற்றிலிருந்து ஒரு கதைக்குறிப்பேனும் எடுத்துக்கொள்ளக்கம்பநாடர் கருதவேயில்லை. ஆரிய ராமாயணக்கதைகளிலும் வான்மீக இராமாயணக்கதைகளையே தமது இராமகாதைக் கதையமைப்பிற்குப் பெரும்பாலும் வைத்துக்கொண்டனர். கதைத்தலைவர்களின் பெயர்கள் மலையாறு, வழி. நாடு நகரம் இவற்றின் பெயர்கள் முதலியன வான்மீகர்சொல்லிய படியே வைத்துக்கொண்டனர். ஆனால் கதைத்தலைவர்களின் உள்ளம், உரை, செயல்களைத்தமிழர்சமுதாய அமைப்பிற்கும் கொள்கைக்கும் இயைந்தவாறு கம்பநாடர் மாற்றி அமைத்துக் கொண்டனர்.

அவற்றுள் பிரானுக்கும் பிராட்டிக்கு நடந்த திருமணத்தைக்காதல் மணமின்றி ஆரியர் சமுதாய அமைப்புப்படிப் பெற்றோர் மணமாக வான்மீகி நடத்தினர். தமிழர் சமுதாய அமைப்புப்படிக்காதல் மணமாகப் பிரானுக்கும் பிராட்டிக்கும் திருமணம் கம்பர் நடத்தினமை ஒன்றாகும். வான்மிகி சொல்லாத இரணியன் கதையைக் கம்பநாடர் தம்கொள்கைக்காகக் கொண்டது மற்றொன்றாகும். இங்ஙனமாய வேற்றுமைகள் ஒவ்வொரு கதைத் தலைவரின் அமைப்பிலும் நாடு, நகரம் ஆறு, மலை முதலிய வற்றைச் சொல்லும் வகையிலும் பலப் பல இருக்கின்றன. இன்னும் எத்துணையோ மக்கள் சொல்லிக்கொண்டிருந்த கதைகளை வான்மீகியும், கம்பரும் விட்டு விட்டனர். அவற்றுள் புறநானூறு, அகநானூற்றில் வரும் கதைகளில் ஒன்றும்கூட வான்மீகி சொல்லவில்லை. தென்

ஞட்டில் வழங்கிய அக்கதைகளில் புறநானூற்றுக் கதையை நகைப்புச் சுவைக்காகவேனும் சொல்லியிருக்கலாம். அகநானூற்றுக்கதை இயற்கைக்கு மாறுபட்டதெனினும் இராமபிரானுடைய கடவுள் தன்மையைக் காட்டுவதற்காகவேனும் சொல்லியிருக்கலாம். என்னேயோ! கம்பநாடர் சொல்லவில்லே. எனினும் தமக்கு முன்னிருந்த தமிழ் நூல்கள் அனைத்தையும் கம்பநாடர் துருவித்துருவி ஆராய்ந்து அந்நூல்களிலிருந்து தமக்கு வேண்டிய சொல், பொருள், கருத்து, அமைப்பு முதலியன எடுத்துத் தமது இராம கதையில் வைத்துள்ளனர். இவற்றை இராமகாதை ஆராய்ச்சியாளர் யாவரும் எடுத்து எழுதினர்; எழுதுகின்றனர்.

இக்கதைகள் நிறைந்த இராமகாதையை இலக்கண நூலார் பெருங்காப்பியம் என்பர்.

பெருங்காப் பியநிலே பேசும் காலே
தன்னேர் இல்லாத் தலேவனே உடைத்தாய்
நெருங்கிய சுவையும் பாவமும் விருப்பக்
கற்றேர் புனேயும் பெற்றியதென்ப —தண்டியலங்காரம். சூ 8

என்பதில் காப்பியத்தில் அமைக்க வேண்டிய ''வாழ்த்து, வணக்கம்'' முதலிய 25 உறுப்புகளே ஆராய்ந்து காப்பியம் இயற்றுவோர் எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்வாறு அவ்வுறுப்புகளே மிக்கும் குறைத்தும் வைக்கவேண்டுமோ அவ்வாறு வைத்துச் சுவையும் பாவமும் விரும்பத் தான் கருதும் நிகரில்லாத் தலேவன் பேரில் கற்ற கவிஞர் புனேந்துரைக்கும் தன்மையைப் போலக் காப்பியம் அமைப்பர்.

பாவிகம் என்பது காப்பியப் பண்பே-சூ. 91 என்பதால் காப்பியம் இயற்றுவோன் காப்பியப்பாத்திரங்கள் எவ்வகையில் அமைய வேண்டும் எனத் தானே கருதிக் கருதியமைப்பதே காப்பியம் ஆகும். எனவே காப்பியம் என்பது:-- தனி மனிதன், அத்தனிமனிதனேச் சார்ந்த பல மனிதரின் வாழ்க்கை வரலாறுகள் அல்ல. சமுதாயத்தில் பலப்பல காலங்களில் நிகழ்ந்த பலப்பல வரலாறுகளே ஆராய்ந்து வகுத்து, தொகுத்துக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு தனி மனிதன் பேரிலும், சார்ந்த பல மனிதர் பேரிலும் கற்பனே நயத்தில் சுவையும் பாவமும் இருப்பப் புனேந்து பாடுவதாகும். இதற்குச் சான்ருக ''காவிய காலம்'' 260 ஆம் பக்கம் ''இதிஹாஸம்'' எனும் சொல் இத, ஹ, ஆஸ எனப் பிரிந்து அது அவ்வாருக உள்ளது எனப் பொருள்படும். அநாதி

காலம் தொட்டுப் பரம்பரை கேள்வியாய் வந்து பின் வரலாருக எழுதப்பட்ட வீர புருஷ கதையே இச்சொல்லால் உணர்த்தப்படுவது. இராமாயணம் இவ்வகையைச் சார்ந்தது. மேலும் பக்கம் 264இல் ''உலக வழக்கில் உள்ளதாகவேனும், கவிஞன் தனது அறிவுத் திறமையால் கற்பித்துக் கொண்டதாகவேனும், அமைந்து நன்மையைப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ளதாகவேனும் இதிஹாஸம் இருக்கும்." மேலும்பக்கம் 266இல் ''வால்மீகி முனிவருக்கு முன்பு தொட்டே இராம சரிதம் வழங்கி வந்ததாகும். இது இராமாயணத் தொடக்கத்தில் காணப்படும் வரலாற்றுச் சுலோகங்களால் அறியப்படும். நமது தென் தேசத்தில் இராமசரிதம் பற்றிப் பல புதுக்கதைகள் வழங்கி வந்துள்ளதும், பௌத்தர்களிடையிலும், சைனர்களிடையிலும் மிகப்பூர்வ காலம் தொட்டே இராம சரிதம் பல வேறுபாடுகளுடன் வழங்கி வந்ததும், அச்சரிதம் பல பிரதேசங்களினின்றும் கதாம்சங்கள் பெற்றுஉருப்பெறலாயிற்று என்பதைத்தெளிவுறுத்தும். இந்தஇதிகாசமும்கால அடைவில்வளர்ந்து முற்றியதெனவே ஆராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளார்கள்'' என உள்ளதே சாலும் .''பொதுவகையில் வான்மீகியைப்பின்பற்றிய போதிலும், கட்டங்கள் தோறும் கம்பன் இராமசரித அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகுபட அமைத்திருக்கிருன். இவற்றையெல்லாம் ஊன்றி நோக்குமிடத்துக் கம்பனது பெருநூலை ஓரளவில் முதல் காவியம் என்றும், ஓரளவில் வழிமுறைக் காவியம் என்றும் கொள்ளல் வேண்டும் ''என'காவியகாலம்' பக்கம் 228இல் உள்ளது.

வான்மீகர் இராமாயணம் இயற்றுவதற்கு முன்னரே இராமாயணக் கதைகள் பேச்சு, உரைநடை, செய்யுள் வழக்குகளில் பாரத தேசம் முழுவதும் வழங்கி வந்தன. இவற்றையாராய்ந்து எவ்வெப்பாத்திரங்களில் எவ்வெக் கதைகள் வைக்க வேண்டுமோ அவற்றை வைத்துக்காவியம் என்னும் அமைப்பில் வான்மீகி பாடி இராமாயணம் எனப் பெயர் வைத்தனர். இன்று வான்மீகி இராமாயணம் முதல் நூல் என்றும் ஆதிகாவியம் என்றும் வழங்கப்படுகின்றது. வரலாற்றை ஆராயின் வான்மீகி இராமாயணம் முதல் நூலுமன்று; ஆதிகாவியமும் அன்று, எங்ஙனம்? வான்மீகருக்கு முன்னரே இராமாயணக் கதைகள் இருந்தன என்றும் அக்கதைகளைத் தொகுத்தடக்கிய சம்க்ஷேப இராமாயணம் என்

னும் சுருக்க இராமாயணம் ஒன்றிருந்ததென்றும் வான்மீகரே முதலில் ஒத்துக்கொண்டிருப்பதால் வான்மீகி இராமாயணம் முதல் நூலன்று; வழிநூலாகும். வான்மீகருக்கு முந்திச் செய்யுள் நடையிலோ அச்செய்யுட்கள் காவிய அமைப்பிலோ இருந்தவை ஒன்றுமே இன்றும் அன்றும் காணுமையால் வான்மீகி இராமாயணம் ஆதிகாவியம் ஆயிற்று; கண்டிருப்பின், கண்டதிருந்திருப்பின் ஆதி காவியம் ஆகாது; பிற்காவியம் ஆகும்.

கம்பர் இராமகாதை இயற்றுவதற்கு முன்னர் இராமாயணக் கதைகள் காவியமாகவும், சரிதமாகவும், நாடகமாகவும் பலப்பல பெயர்களைப் பெற்றிருந்தன. அவற்றுள் வான்மீகி இராமாயணம் கதைகளின் முறைவைப்பிலும், காவிய அமைப்பிலும் மிகச் சிறந்திருந்தது. அதனுல் அனைவரும் போற்றினர்; பாராட்டினர். கம்பரும் "வான்மீகி என்பான் தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச்செய்தான்" என்றனர். இவற்ருல் தமக்கு முந்திய இராமாயணக்காதை அமைப்புக்களிலும் வான்மீகி இராமாயணக் கதையமைப்பே தான் பாடும் இராமகாதை கதையமைப்பிற்கு ஒத்துள்ளதினுல் கம்பர் வான்மீகி இராமாயணத்தைப் போற்றினர்; பாராட்டினர். எனினும், கம்பர் இராமகாதையின் ஒவ்வொரு காண்டபடலக் கதை அமைப்பிற்கும் வான்மீகரின் ஒவ்வொரு காண்டச் சருக்கக் கதை அமைப்பிற்கும் பலப்பல வேற்றுமைகள் உள்ளன; இதனுல் வேறு இராமாயணக் கதைகளின் அமைப்பை ஒரு சிறிது ஒத்தும் இருக்கும். இதனுல் வான்மீகி ராமாயாணத்தைக்கம்பர் இராமகதைக்கு முதனூல் என்றல் பொருந்தாது. வான்மீகருக்கு முன்னரிருந்த இராமகதைகள் வான்மீக ராமாயணத்துக்கு முதனூல்கள் ஆகாமை போலக்கம்பருக்கு முன்னரிருந்த இராமகதைகளும் கம்பர் இராமகதைக்கு முதனூல்கள் ஆகா. ஒருநூலுக்கு ஒரு நூலை முதனூலாகச் சொலலுதல் முறையேயன்றிப்பல நூல்களைச் சொல்லல் முறையன்று. இதனுல் வான்மீகி ராமாயணம்வடமொழியில் முதனூலாயிறறு. அங்ஙனமே கம்பர் இராமகாதையும் தமிழ்மொழியில் முதனூலாயிற்று. வான்மீகி ராமாயணத்திற்கு முன்னர் காவிய அமைப்பில் ஒரு காவியமும் வடமொழியில் இல்லாமையால் வான்மீகி ராமாயணம் ஆதி காவியம் ஆயிற்று. அங்ஙனமே கம்பர் ராமகதைக்கு முன்னா காவியஅமைப்பில் ஒருகாவியமும் தென்மொழியில் இல்லா

மையால் கம்பர் இராமகதை ஆதிகாவியம்ஆயிற்று. இதனால் கம்பர் இராமகாதை முதல் நூலும் முதற்காவியமும் ஆகும்.

ராமம் தசரதம் வித்தி மாம்வித்தி ஜனகாத் மஜாம்
அயோத்தியாம் அடவீம் வித்தி கச்சதாத யதாசுகம்.

என இலக்குமணனுக்குச் சுமத்திரை சொல்லும் வான் மீகி இராமாயணச்சுலோகத்தின் மொழிப்பெயர்ப்பாகவே

ஆகாத தன்றாலுனக் கவ்வனம் இவ்வயோத்தி
மாகாத லிராமனம் மன்னவன் வைய மீந்தும்
போகா உயிர்த் தாயர்நம் பூங்குழல் சீதை என்றே
ஏகா யினிஇவ்வயி னிற்றலும் ஒது மென்றாள்.

எனும் செய்யுளைக் கம்பர் இராமகாதையில் அமைத்திருக்கிறார். அவ்வாறே, சைன இராமாயணச் செய்யுட்கள் இரண்டையும் போலவே அமைந்த இராமகாதைச் செய்யுளிரண்டினையும் முன்னரே காட்டப்பட்டுள்ளன. இவற்றால் கம்பர் இராமகாதைக்கு வான்மீகி முதல் நூல் என்னில் சைன இராமாயணத்தையும் முதல் நூல் எனல்வேண்டும். எனவே, இவ்விரண்டும் முதனூல்களாகா.

முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் லென்பதற்கும்
கூறுபழம் சூத்திரத்தின் கோள்.

என்பது இலக்கணத்திற்கு மட்டுமன்று; இலக்கியத்திற்கும் ஆகும். ஆகவே "முன்னோர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கு" அவ்வான்மீகி சூத்திரப் பொருளையும், அச்சைன இராமாயணச்செய்யுட்பொருள்களையும் கம்பர் இராமகாதையில் வைத்துக் கொண்டனர். இங்ஙனம் சில செய்யுட்கள் வான்மீகி இராமாயணச் சுலோகப்பொருளை ஒத்துக்கம்பர் இராமகாதையில் பாடியிருப்பின் அவை முன்னோர் மொழிபொருளைத்தாம் சொல்வதற்கு மேற்கோள்களாகக்கொண்டனவாகும். இதனால் கம்பர் இராமகாதை வழிநூலன்று; முதல் நூலாகும் இவற்றின் விளக்கங்களை இனி வெளிவரும் " கம்பரும் வான்மீகரும்," எனும் ஆராய்ச்சி நூலுள்காண்க.

30. கம்பர் காவியப்பெயர் இராமகாதை

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதையரோ.

எனக் கம்பநாடரே தாம்பாடிய நூலின் பெயர் இராமன் கதை என்கின்றனர். இதனை ஆதரித்தே "இம்பர் நாட்டில்" என்னும் பாடலில் ''இராமன் திருக்கதை'' என்றும், "எண்ணிய சகாப்தம்" என்னும் பாட்டில் "இராமகாதை"என்றும், ''ஆதவன் புதல்வன்'' என்னும் பாட்டில் "இராமகாதை'' என்றும் சொல்வதால், கம்பநாடர் தாம் இயற்றிய காப்பியத்திற்கு ''இராமகாதை'' என்றே பெயர் வைத்தனர். இதன் உண்மையையறிந்தும் அறியாதார் போலப் பெரும் புலவர் மூவர்

இத்த லத்தும் இராமவ தாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்டவர்
புத்தி மிக்கரும் புண்ணிய மும்தரும்
எந்த லத்தும் அவனடி யெய்துவார்.

என்னும் பாடலை ஆதாரமாகக் காட்டிப்புறத்திரட்டுடையாரும் ''இராமாவதாரம்'' என்றே சொல்வார் என்று, 'செந்தமிழ் தொகுதி3.பக்கம் 43லும்'எழுத்ததிகார ஆராய்ச்சி' பக்கம் 182லும், காவியகாலம்பக்கம் 222லும் எழுதியுள்ளனர். மேலும இவர் ஆதாரமாக காட்டுவது

நடையில் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே.

எனும் பாயிரச்செய்யுளாம். இதில் ''இராமவதாரம்பேர் மாக்கதை" என்பதற்குத்திருமாலின் 10 அவதாரங்களுள் ''இராமவதாரம்" என்னும் பெரில் நிகழ்ந்த—அதாவது இராமவதாரத்தில் நிகழ்ந்தமாக்கதை என நேராகப்பொருள் கொள்ளல் வேண்டும். கம்பநாடர் தாமியற்றிய நூலுக்கு "இராமவதாரம்'' எனப்பெயர் வைத்திருப்பரேல் அரங்கேற்றும் பொழுது இராமவதாரம் என்றே புலவர் சொல்லியிருப்பர். அங்ஙனமின்றி ''கம்பநாடன், பண்ணிய இராமகாதை''

என அரங்கேற்றப்புலவர் சொல்லி இருக்கின்றனர். மேலும்,

திண்மை ஏறும் கம்பனிடம் செய்யத் தகுர்பல் சிறப்பயர்ந்து
நண்மை ஏறும் இராமகதை நற்பேர் புவியில் தழைத்தேற
உண்மை ஏறும் திருவரங்கத் தொருவன் சபையில் உத்திரநாள்
வண்மை ஏற அரங்கேற்றி வைத்தார் சோழ மண்டலமே.

என்பதில் 'இராமகதை' என்பதால், கம்பநாடர் இயற்றியது இராமகதை ஆகும். இராம அவதாரம் என்பதுஇராமாவதாரம் எனும் வடமொழித் தீர்க்க சந்தியை இங்கன்றி இராமகதையில் வேறெங்கும் இல்லை. இதனால் 'இராமாவதாரம்'எனக் கம்பநாடர் பெயர் வைத்திருக்கார்.

வான்மீகி இயற்றியது இராமாயணம். வான்மீகியை முதனூலாகக்கொண்டுபாஸகவி பாடியதற்குப் 'பிரதிமாநாடகம்' என்றும், காளிதாசன் இயற்றியதற்கு 'இரகு வமிசம்' என்றும்,துளசிதாஸர் செய்ததற்கு 'ராமசரத்திரம்' என்றும் பெயர் வைத்தனரேஅன்றி இராமாயணம் எனப்பெயர் வைக்கவில்லை. அங்ஙனமே கம்பநாடரும் தம் நூலுக்கு இராமாயணம் எனப்பெயர் வைக்காமல் 'இராமகாதை' என்று பொருத்தமாகப்பெயர் வைத்தனர். இதனை ஒருவாறு அம்மூவரிலொருவர் ஒப்புக்கொண்டு 'காவியகாலம்'பக்கம் 222இல் இப்பெருங்காப்பியம் 'இராமகாதை' என்றும் ஒரு சிலரால் வழங்கப்பட்டது. அதற்கு எண்ணிய சகாப்தம் என்னும் அரங்கேற்றப்பாடலில் வரும் 'இராமகாதை' என்பது மேற்கோளாகும் என்றனர். இதனால் தலைப்புப்பாடலில் கம்பநாடர் சொல்லியபடியே தம் காப்பியத்திற்கு 'இராமகாதை' எனப்பெயர் வைத்ததே பலப்பல சான்றுகளால் உண்மையாயிற்று.

31. கம்பர் பாடவேண்டும் எனும் ஆசையினாலேயே பாடினர்

ஓங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான் மீகிஎன்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்.
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேச லுற்றான் என்னயான் மொழிய லுற்றேன்.

மூங்கையான் வாய்பேச முடியாமையால் தான் கண்டும் கேட்டும் கற்றும் உள்ளனவற்றை மனதில் நூல் நிலையம்

போல் அடுக்கி வைத்திருந்து ஒருநாள் வாய் பேசுவதற்கு வந்து விட்டால் மனதிலுள்ளனவற்றை இடைவிடாமல் ஒவ்வொன்ருக எங்ஙனம் எடுத்துச் சொல்வானே அங்ஙனமே, பலப்பல நாள் பலப்பலதிங்கள் பலப்பல ஆண்டுகள் இராமகாதை இயற்றவேண்டும் என்னும் ஆசையால் காவிய அமைப்பிற்காக வகுத்தும் தொகுத்தும் என வகைப்படுத்தியும் என்னுள்ளத்தில் வைத்திருந்த கலைகளைக் கவிகளாக மொழியலுற்றேன் என்கிருர். மேலும்,

> ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
> காசில் கொற்றத்து இராமன் கதையரோ—தற்சிறப்புப்பா-4

என்பதால் இராமபிரான் கதையைத் தமிழில்காவியமாக இயற்ற வேண்டும் என்னும் ஆசையினல் பாடுகிறேன் என்கிருர். இதனல் கம்பர் இராமகாதையைப் பாடினது இராமகாதையின் பேரிலுள்ள அன்பும், இயற்கையாகவும்செயற்கையாகவும் தமக்குள்ள கவிகளியற்றும் ஆற்றலுமே அல்லாமல் மற்றவர் தூண்டுதலோ வற்புறுத்தலோ அல்ல; அல்ல.

> வையம் என்னை இகழவும் மாசெனக்
> கெய்தவும் இதியம் புவதி யாதெனில்
> பொய்யில் கேள்விப் புலமையினேர் புகல்
> தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே —தற்சிறப்புப்பா-6

இதில் வையத்திலுள்ள ஒருசார் மக்களான அரசரும் அரசரைச் சார்ந்தவரும் அன்னேரன்னேரும் தம்மைக்கம்பர் மதிக்கவில்லையே எனச்சொல்லி என்னை இகழ்வர்; அதனல் குற்றங்களும் என்மேல் வரச்செய்வர். எனினும், பொய்யில்லாத நூல் கேள்விகள் உள்ள புலவர் புகன்ற தெய்வமாக் கவிகளின் பெருமை தெரிவதற்காக இராமகாதைக் காவியம் பாடுகிறேன் எனக் கம்பரே பிறர் சொன்னதினுல் பாடவில்லை என்பதைக் கண்கூடாகக்காட்டுகிருர். மற்றவர் தாம் பாடிய கவிகளைத் தெய்வக்கவிகள் என்கின்றனர். யானும் பாடுகின்றேன், இவ்விருவர் கவிகளின் பெருமையை மக்கள் எதுதெய்வக்கவி எனத் தெரியவேண்டும் என்பதற்காகவே நான் கவிகளை இயம்புவது என்கின்றமையால் கம்பரே இராமகாதையின பேரிலுள்ள அன்பினுலும், அக்காதைகளைக் கவிகளாகப்பாடல் வேண்டும் என்னும் ஆசையால் பாடினேன் என்கிருர். இங்ஙனம் கம்பரே சொல்வதால் எவருமே பாடவேண்டும் என எம்முறையிலும் சொல்லவில்லை

என்பதும் கம்பரே பாடவேண்டும் என்னும் ஆசையால் பாடினார் என்பதுமே கம்பர் வரலாற்றிற்கியைந்த உண்மையாகும்.

32. கம்பர் இராமகாதைப் படிகள் எடுத்தமை

ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே
வெற்றியூர் காகுதன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்த தெழுதுதற்கு நள்ளிரவில் மாணுக்கர்
பிந்தாமல் பந்தம் பிடி — தமிழ் நாவலர் சரிதை-96.

இராமபிரானைப் பற்றிப் பலப்பல புலவர் புகன்றனவும், உலக வழக்கில் உள்ளனவும் ஆன வரலாற்றுக்கதைகளை ஒரு 20 ஆண்டுகள் ஆர அமர ஆய்ந்தாய்ந்து இராமகதைப் பாத்திரங்களைப் பாவிகப் பண்பில் கண்டு கண்டு கம்பநாடர் திருவெண்ணெய்நல்லூரில் வல்லியம்மையுடனும், மக்களுடனும் இல்வாழ்க்கையில் இருந்துகொண்டே இராமகாதையைப்பாடி முடித்தனர். தாமே சிந்தித்துச்சிந்தித்துப் பாடுங்கால் உண்டாகும் மெய்ப்பாடுகளைத் தாமே மகிழ்வுடன் அடக்கிக்கொண்டும் ஏதேனும் ஒருகால் அம்மெய்ப்பாடுகள் வெளிவரின் அவ்வவற்றின் இயல்புகளுக்கேற்ப வெளிப்படுத்தியும் ஒவ்வொரு பாட்டையும் ஒவ்வொரு ஓலையில் எழுதினர். இங்ஙனம் எழுதிய ஓலைகளைப் படலம் படலமாகச் சேர்த்தும் அப்படலங்களை ஒவ்வொரு காண்டமாகவும் கட்டி வைத்தனர், பின்னர் அக்காண்டங்களைப் படிகள் செய்வதற்காகத் திருவொற்றியூருக்குப் போயினர். திருவொற்றியூரிலும் அதன் அண்மை ஊர்களிலும் தன்பால் அன்புள்ள மாணவரும் கற்றவரும் இருந்தனர். கம்பநாடர் கலியாணம்செய்து முதன் முதல் வாழ்க்கை நடத்திக்களிப்புடன், வாழ்ந்தவூரும் திருவொற்றியூர். இதனால் அவ்வூருக்கு சென்றனர்

திருவொற்றியூர்க் காளி கோயிலின் முன் மண்டபம் அகலமும் நீளமும் அழகும் ஆனது. காளி கோயில் தலைவரும்கம்பநாடர் கருத்தறிந்து வேண்டுவ செய்பவர். எனவே, இராமகாதைக்குப் பலபடிகள் எடுத்தல் வேண்டும் எனும் கம்பநாடர் கருத்தையறிந்த காளிகோயில் தலைவர் காளி கோயிலின் முன் மண்டபத்தில் அங்கங்கு பந்தங்களோ கல்தூண்விளக்குகளோ ஏற்படுத்தி அவற்றைப் பெரிதாக எரி

யும்படி செய்து, அவ்விளக்குகளின் பக்கங்களில் வரிசையாகப் படிகள் எடுப்பவர்களை வீற்றிருக்கும்படி செய்தனர். அவர்கள் படிகள் எடுக்குங்கால் உண்டாகும் சோர்வுக்களைப்புகளைப் போக்குவதற்காகச் சிற்றுண்டிகளும் பானங்களும், ஏற்பாடுகள் செய்திருந்தனர். கம்பநாடர் உட்கார்ந்தோ, நின்றோ, நடந்தோ, படுத்தோ இராமகாதைக் காவியப் பாட்டுக்களை உரக்கச்சொல்வதற்கான எல்லா வாய்ப்புக்களும் செய்து வைத்தனர். இங்ஙனம் படிகள் எடுப்பதற்காக ஒரு 70 பேர்கள் உட்கார்ந்துகொண்டனர். கம்பர் அளவிலா ஆனந்தத்துடன் முகம் மலர்ந்து தனக்குரிய இசையுடன் சில சில செய்யுட்களை இருந்தோ, நின்றோ, நடந்தோ, படுத்தோ சொல்வர். பல பல சமயம் தனது மாணாக்கர்களில் பழக்கப்பட்ட ஒரு சிலரில் ஒருவரைப் படியெடுப்பவர் அனைவரும் கேட்டு எழுதும் படியான ஒலியில் நிறுத்திப் பாடல்களைச் சொல்லச்செய்வர். படிஎடுப்பவர் 70 பேரும் நிதானமாக எழுதிக்கொள்வர். இங்ஙனம் ஒவ்வொருவரும் 100 செய்யுட்களாக 70 பேரும் 7000 செய்யுட்கள் எழுதுவர். இந்த 7000 செய்யுட்களும் 100, 100 செய்யுட்கள் அடங்கிய 70 படிகள் ஆகும். இங்ஙனம் படிகள் எடுப்பவர் நள்ளிரவுவரையிலும் எழுதுவர். அதுவரையும் பந்தங்களோ கல்விளக்குகளோ ஒரே விதமான ஒளியுடன் எரிந்துகொண்டேயிருக்கும். பாட்டில் பந்தம் என்பதால் பந்தங்கள் தான் எரிந்திருக்கும் இங்ஙனம் எழுதும்பொழுது படிகள் எடுப்பவர் எவரேனும் இப்பாடலுக்குப் பொருள் விளங்கவில்லையே என்று கேட்பாராயின், சிலசமயம் கம்பநாடர் விளக்கம் சொல்வர்; சில சமயம் ஒன்றும் உரையாமல் எழுதச்சொல்வர்; இங்ஙனம் சொல்வதை "நானும் அறியேன் அவளும் பொய்சொலாள்" எனச் சொல்வதாகச் சொல்வர். இங்கு அவள் சரசுவதி.

இங்ஙனம் படிஎடுத்த 70 பேர்களில் மிக்கும் குறைவாகவோ படிஎடுத்த 7000 பாடல்களில் மிக்கும் குறைவாகவோ இருக்கலாம். "நள்ளிரவில் மாணாக்கர் பிந்தாமல் பந்தம்பிடி" என்றதனை ஆராயின் நள்ளிரவு வரையில் மாணாக்கர் கம்பநாடர் சொன்னபடி எழுதினர் என்றும் அதுகாறும் பந்தம் எரிந்துகொண்டிருந்ததென்றும் தெரிகின்றோம். இவ்வுண்மையைப் பொருத்தமாகச் சொல்லாமல் பொருத்தமில்லா முறையில். கம்பநாடர் இராமகாதையை இரவிலே 700பாடல்

வீதம் முடியும்வரையும் ஒவ்வொரு இரவும் பாடி முடித்தனர் என்பதாக,

விழுந்த ஞாயிறுஎழு வதன்முன் கவிபாடின தெழுநூறே

எனச் சொல்லினர். இது இயற்கைக்கு மாருனது, அவ்வாறு பாடவும் முடியாது. அங்ஙனமே, காளி பந்தம் பிடித்ததும்ஆகும் அங்ஙனம். சொல்லுதல்காவியமரபாகும். இங்ஙனம் இராமகாதையைப் படிக்களெடுத்தும், அப்படிகள் முழுவதுமாகவே காண்டம் காண்டம் ஆகவோ வேண்டிய புலவரிடமும் மற்றவரிடமும் பலப்பல படிகளை எடுக்கும்படி செய்தும் அப்படிகளை நாடுமுழுவதும் படிக்கும் படியான முறையில் கம்பநாடர் செய்து வந்தனர்.

33. கம்பர் சடகோபரந்தாதி பாடியது

நஞ்சட கோபனைப் பாடினை யோஎன்று நம்பெருமாள்
விஞ்சிய ஆதரத் தால்கேட்பக் கம்பன் விரைந்துரைத்த
செஞ்சொல் அந்தாதிக் கலிதுறை நூறும் தெரியும் வண்ணம்
நெஞ்சடி யேற்கருள் வேதம் தமிழ் செய்த நின்மலனே.

கம்பநாடர் இராமகாதை திருவரங்கம் பெரியகோயிலில் அரங்கேற்றம் செய்யவேண்டும் என எண்ணினர். அதற்காகத் திருவரங்கம் சென்று அங்குள்ள கோயில் தலைவர்களை இராமகாதை அரங்கேற்றுவதற்கு இடமும் அனுமதியும் தரவேண்டும் எனக் கேட்டனர். அதற்குக் கோயில் தலைவர் பெரிய பெருமாளைப் போய் வேண்டிக்கேள் என்றனர்.

இதைப் பற்றிச் 'செந்தமிழ்' 3 ஆம் தொகுதி 4ஆம்பக்கம் "கம்பர் இராமாவதாரம் அரங்கேற்றுவதற்காகத் திருவரங்கம் பெரிய கோயிலை எய்தி ஆண்டைப் பிரணவாகாரத்து அறிதுயிலமர்ந்த கருணை மாமுகிலைச்சேவித்து நின்றபோது, அவ்விறைவன் இவரது பத்திக்கு வந்து இவரைத் தன்னடியார்க்காட்படுத்தக் கருதி 'நஞ்சடகோபனைப் பாடினையோ' என்று அருச்சகர் முகமாய்த் திருவுளம் பற்றித்தமிழ் மகளின் தவப்பேறனையசடகோபரது பரமஞானபத்தி அதிசயத்தை இவர் நெஞ்சில் தோற்றுவித்தருளினன். அப்போதே இவர் அவ்வாழ்வாரின் திருக்கோயிலின் முன்றிலில்புக்கு பணிந்து

கிடந்தார்க்கு ஆழ்வாரின் திருவருள்நோக்கம்உண்டாயிற்று. அந்நிலையில் எழுந்து ஆழ்வாரைப் போற்றி

வேதத்தின் முன்செல்க பெய்யுணர்ந் தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின் முன்செல்க குணங்கடந்த
போதக்கட லெங்கள் தென்குரு கூர்புப்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மோதொல்லை மூலப் பரஞ்சுடரே.

எனும் பாசுரம் தொடங்கி 100 பாடல் பாடினர். இதில் 'அருச்சகா முகனுய்த் திருவுளம்பற்றி' என்றதினுல், என்றுமே சிலைவடிவம் ஒன்றுமே பேசாது என்பதும், அப்படிப் பேசினது என்பது அருச்சகரோ அன்னுரோ சிலை சொன்னதாகச் சொல்லுவது என்பதுமே என மனனுணர்வுடையோர் மனதுறக் காப்பியமரபு எனக்கொள்ளல் வேண்டும்.

34. கம்பர் இராமகாதை அரங்கேற்றம்

எண்ணிய சகாப்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி உத்த ரத்தில்
கண்ணிய அரங்கர் முன்னே கவி அரங்கேற்றி னுனே.

இது இராமகாதைப் பாயிரத்தின் முன்புள்ளது. அரங்கேற்றுதலாவது:— கவிஞன் தான் செய்த நூலைப் பல புலவர் கூடியுள்ள சபையில் கொணர்ந்து படித்துக்காட்டி அச்சபைப்புலவர் கேட்கும் வினுக்களுக்கெல்லாம் தகுந்த விடைகளைக்கூறி அச்சபைப் புலவர்களை இந்நூல் ஒரு குற்றமும் இல்லை என ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல். இங்ஙனம் அரங்கேற்றம் செய்வதற்கு முன்னர்த் திருவரங்கம் அரங்கேற்றக் குழுவினர் பலப்பலரிடம் இராமகாதை ஏற்றுக் கொள்ளத்தக்க நூல்தானு எனக் கையொப்பம் வாங்கிவரச் செய்தனர். அங்ஙனமே கம்பநாடர் அப்பலப்பலரிடம் கையொப்பம் வாங்கி வந்தனர். அவரில் கம்பநாடர் மகன் அம்பிப்பதி ஒருவன் என்றும் அம்பிப்பதி சொல்லிய ஒப்புப் பாடல் பாயிரத்தின் முன்னுள்ள 'அம்பரா அணி' என்னும் பாடலைச் சொல்வர். இங்ஙனம் அன்னுர் சொன்னவரிடம் எல்லாம் கையொப்பம் வாங்கி வந்தபின்னர் திருவரங்கம் தெற்குகோபுரவாயில் பக்கம் நாதமுனிசுவாமி கோயிலுக்கு முன்னர் கம்பநாடர் இராமகாதை பாடி முறைப்படி அரங்கேற்றினர்.

தமிழ் நாட்டு மன்னரும், மன்னர் அவைப்புலவரும் அவரன்னுரும் அன்றித் தமிழ்நாட்டும் புலவரும் புரவலரும் பத்தரும் அவரன்னர் அனைவரும் வந்திருந்தனர். பிரானுக்கும் பிராட்டிக்கும் திருமணம் நிகழ்த்திய நாளை "பங்குனி உத்தரம் ஆன பகற்போது" எனக் கம்பநாடர் சொல்லியபடி இராமகாதை பங்குனித்திங்கள் உத்தர நட்சத்திர நாளில் அரங்கேற்றம் செய்தனர்.

திருவெண்ணெய்நல்லூரில் கம்பநாடன் இயற்றிய இராமகாதை அரங்கேற்றியது அரங்கர் முன்னே என்றுள்ளதினுல் திருவெண்ணெய்நல்லூர் அரங்கநாதர் முன்பு இராமகாதை அரங்கேற்றியதாகச் சொல்வர். அங்கன்று; இன்றுகாணும் திருவரங்கநாதர் முன்புதான் அரங்கேற்றியது என்பதை

திண்மை ஏறும் கம்பனிடம் செய்யத் தகும்பல் சிறப்பயர்ந்து
நண்மை ஏறும் இராமகதை நல்பேர் புவியில் தழைத்தேற
உண்மை ஏறும் திருவரங்கத் தொருவன் சபையில் உத்தரநாள்
வண்மை ஏற அரங்கேற்றி வைத்தார் சோழ மண்டலமே

என்பதால் தெளிகின்றேம். மேலும் நாதமுனி சுவாமி கோவிலின் முன் கம்பநாடர் இருந்து இராமகாதை அரங்கேற்றிய இடத்தில் ஒரு நாலுகால் மண்டபம் கட்டி அம்மண்டபத்தின் தென்கிழக்குத்தூணில் வடக்கு நோக்கித்திருவரங்கப் பெருமாளை இருகைகளைக் கூப்பிச்சேவிக்கும் முறையில் கம்பநாடர் இயற்கை திருவடிவச் சிலையை அமைத்திருக்கினறனர், அச்சிலை அன்று போன்றே இன்றும்உள்ளதைக் கண்குளிரக் கண்டு கண்டு சேவிக்கின்றனர். மேலும் கம்பநாடர் பெரிய பெருமாளைச் சேவிக்கும் பொழுது திருவரங்கநாதர் "நம்சடகோபனைப்பாடினையோ" எனக் கேட்டதாக அருச்சகர்சொல்லும் கதையும் கம்பநாடர் திருவரங்கத்தில் கம்பநாடர் இராமகாதை அரங்கேற்றம் செய்தனர் என்பதைத் தெளிவு செய்கின்றது.

கம்பநாடன் பண்ணிய இராமகாதை கண்ணிய அரங்கர் முன்னே கவி அரங்கேற்றுதலைக் கண்டு கண்டு கேட்டுக் கேட்டு அகம் மகிழ்ந்த புலவர்யாவரும் ஒருங்கே கம்பநாடருக்குக் "கவிச்சக்கரவர்த்தி" என்னும் பட்டம் கொடுத்தனர். பாகவதர் யாவரும் 'ஆழ்வார்' என்னும்பட்டங்கொடுத்தனர். இப்பட்டங்கள் அனைவருள்ளத்திலும் ஊறி உவகையுடன்

'கம்பர் கவிச்சக்கரவர்த்தி' என்றும், "கம்பநாட்டாழ்வார்" என்றும் பகர்ந்து பாராட்டினர். இவற்றை

அம்பிலே சிலையை நாட்டி அமரர்கள் றமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானும் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்கரவர்த்தி பார்மேல்
நம்புபா மாலையாலே நரருக்கின் றமுதம் ஈந்தான் —11

வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துபெறத்
தாழ்வார் உயரப் புலவோர் அகவிருள் தானகலப்
போழ்வார் கதிரின் உதித்ததெய் வப்புல மைக்கம்பநாட்
டாழ்வார் பதத்தைச் சிந்திப்பார்க் கியாதும் அரியதன்றே—5

என முறையே போற்றிப் புகழ்ந்தனர். (இவை பாயிரத்தின் முன்னுள்ளன)

35. கம்பர் உத்தரகாண்டம் பாடவில்லை

பூணிலாவும் கம்பனலம் பொலியும் தமிழால் புகழெய்திக்
காணுமாறு காண்டமுறும் கதையில்பெரிய கதைஎன்னும்
தாணி லாவும் கழலபயன் சபையில் பயிலுத் தரக்காண்டம்
வாணி தாதன் அரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே.

கம்பநாடர் இயற்றிய இராமகாதை என்னும் பெருங் காப்பியம் சோழநாடு மட்டுமன்றித் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. கம்பநாடர் தமது மாணக்கர்களால் இராம காதையைப் பலநூறுபடிகளாகச் செய்து தமிழ்நாட்டில் எவர் எவர்க்குக் கொடுக்கவேண்டுமோ அன்னோர் அனைவர்க்கும் கொடுத்தனர்; கொடுத்தனுப்பினர். அவ்வாறே சோழருக்கும் சோழரவைப்புலவருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் அனுப்பி யிருக்கலாம். அன்றிச் சோழன் முதலானோர்க்கும் மற்றவர் இராமகாதைப் படிகள் கொடுத்திருக்கலாம். அன்னருள் வாணிதாதன் இராமகாதைக் காப்பிய அமைப்பையும், செய்யுள் சிறப்பையும், கலைநலத்தையும் பலமுறை படித்துப் படித்து மகிழ்வுற்றிருப்பன்; பாராட்டியிருப்பன். அவற்றைச் சோழனுக்கும் அவைக்களப்புலவருக்கும் பலமுறை சொல்லி யிருப்பன்; போற்றியிருப்பன். ஆனால், இராமபிரான் கதைகளை இனிநான்பாடினால் இராமகாதை போல் எவ்வகையிலும் பாடமுடியாது. அதனால் எனக்குள்ள பெருமை குறைந்து விடும். எனவே, கம்பநாடர் இயற்றாத இராவணன் கதை களைப்பாடுவதே என் பெருமைக்குப் பெருமை என வாணி தாதன் உத்தரகாண்டத்தைப் பாடி முடித்தனன். அதனைச் சோழன் அவைக்களத்தில் அரங்கேற்றி வைத்தனன்.

அதற்குக் கம்பநாடரோ சடையப்பரோ மற்றவரோ போன தாக எவ்வரலாறுமில்லை.

சரசுவதி தாம்பூலம் மென்று கொண்டிருக்கும்பொழுது ஒட்டக்கூத்தன் போய்ச் சேவிக்கச் சரசுவதி மென்று கொண்டிருந்த தாம்பூலத்தை ஒட்டக்கூத்தன் வாயில் உமிழ்ந்தாள் என்றும், அதனுல் ஒட்டக்கூத்தன் வாணிதாதன் எனப் பட்டான் என்றும் வாணிதாதன் ஒட்டக்கூத்தன் பாடியது உத்தரகாண்டம் என்றும் சொல்வர். இது புனைகதையாகும் அதற்கேற்ப 'வாணிதாசன்' எனப் பாடம் கொண்டனர். அங்ஙனமின்றி வாணிதாதன் என இராமகாதை உரையாசிரியர் நூலாசிரியர் வரலாற்றில் பாடம் கொண்டனர். முன்னர்ப் பகைவனும் பின்னர் நண்பனும் ஆகிக் கம்பநாடர் பக்கல்அன்புற்றிருந்த வாணிதாதன் தொண்டை மண்டலம் கூவம் என்னும் ஊரினன். அவ்யுத்தகாண்டத்தை அரசனும் அரசனை அண்மினேரும் பாராட்டினர். இன்றுபோல் அன்றும் மக்கள் பாராட்டவில்லை. இவ்வரலாற்றுண்மையறியாமல் பாடினதே "கதைபொருகாண்டம் ஏழு ... கம்பன் சொன்னது" என்னும் பாடல். இது கம்பநாடரைப் பற்றிய பல புனைகதைகளுள் ஒன்ருகும்.

36. கம்பர் காவியத்துள் சோழர் பொதுப் பெயர்

புவிபுகழ் சென்னிபேர் அமலன் தோள்புகழ்
கவிகள்தம் மனைஎனக் கனக ராசியும்
சவுயுடைத் தூசுமென் சாந்து மாலையும்
அவிரிழைக் குப்பையும் அளவி லாதது.

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலோன்
நன்னிநாள் திருவைச் சேர்ந்த கண்ணனும் ஆளும் காணிச்
சென்னிநாள் தெரிய வீரன் தியாகமா விநோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப் போனுன்

இவை முறையே பிலம்புக்கு நீங்குபடலம்--35லும் மருத்து மலைப்படலம்58லும் உள்ளன. இவற்றிற்கு, "கம்பர் தமது செய்ந்நன்றி அறிவினுல் தம்மை ஆதரித்த குலோத்துங்க சோழனது பெருமையை உபமானமுகத்தால் இச்

செய்யுளில் பாராட்டிக் கூறினர். இவ்வரசன் தன்னை நாடி வந்து புகழ்ந்து பாடுகின்ற கவிசனங்களுக்கு உடனே பொற்றிரள் முதலியவற்றைக் கணக்கில்லாமல் கொடுக்கும் வண்மையுடையான் என்பதை விளக்கினர்" என உரை எழுதியுள்ளனர். இவ்வாறே எல்லா உரையாளரும் கம்பர் தம் காலக் குலோத்துங்க சோழனையோ, அவன் மகன் இராசராச சோழனையோ, தமக்கின்னவை வேண்டும்எனப்பாடி, இன்னவை பரிசிலாகப் பெற்றுக்கொண்டு வந்தார் என்பர். இதைப்பற்றிக் கம்பநாடர் குறிப்பாகவேனும் ஒரு சொல்லும் சொல்லவில்லை. மற்றுக் கம்பநாடரைச் சோழர் ஆதரித்ததாகச் சொல்பவரோ, மற்றவரோ ஒரு குறிப்பேனும்சோழர் கம்பநாடரை ஆதரித்ததற்கு இதுகாறும் காட்டவில்லை. எனவே, கம்பநாடரைச் சோழர் ஆதரித்தார் என்பது வரலாற்றில் காணாத கற்பனையாகும்.

தலைப்புப் பாடல்களில் வரும் சென்னி, அமலன், வீரன், தியாகமா விநோதன் என்பன சோழரின் பொதுப்பெயர்கள். விக்கிரமன், குலோத்துங்கன் இராசராசன் என்பன சிறப்புப் பெயர்கள் தமது காலத்திலிருந்தஇம்மூன்றுசோழருந்தமக்கு ஏதேனும் ஒன்று கொடுத்து ஆதரிப்பார்களேயானால், அன்னாரின் சிறப்புப்பெயர்களை விளக்கமும் வெளிப்படையும்ஆகச் சடையப்பவள்ளலைச் சொன்னதைப் போலச் சொல்லிப் பாராட்டியிருப்பர். இதனால் கம்பநாடர் அச்சோழர்களைப் பாடியோ, அண்மியோ ஒன்றுமே பெற்று வாழவில்லை என்பதே வரலாற்றில் காணும் உண்மையாகும்.

கம்பநாடர் பிறந்து வளர்ந்து கல்விகற்று வாழ்வாங்கு வாழ்ந்ததின் பெரும்பயனாகத் தாம் இருந்து இராமகாதை இயற்றுவதற்குப்பேறுபெற்றநாடுசோழநாடு. அதனைத்'தெய்வப்பொன்னிநாடு' எனப்போற்றினர். அச்சோழநாட்டுமன்னர் தம்மைப்புகழ்ந்து பாடுவோர்க்கு வேண்டியன கொடுத்தலைக் கம்பநாடர் கண்டிருந்தமையால், அக்கவிஞர் பெற்ற பொருளை ராசி என்றும் குப்பை என்றும் சொல்லினர். எனினும், மங்கையர் மாண்பையும் கற்பையும் மறைத்தும் மடித்தும் பாடும் கூத்தர் உலாப்பாட்டுக்களைப் போலப் பாடிப் பாடிப் பெறும் பரிசில்கள் எத்தகையன எனினும் அவை பாராட்டத்தக்கன அல்ல என்பதற்காக அவற்றைக் 'குப்பை' என்றனர்.

37. கம்பர் காவியத்தில் சடையப்பர்

எண்ணைத் தருப்பா ருள்ளளவும் இரவி மதியம் எழுமளவும்
கண்ணுற் கினிய சயராம கதையில் ஒருபான் கவிமுழுதும்
வெண்ணெய்ச் சடையன் சடையனென விறலார் கம்பன்
விளங்கவைத்த
வண்ணத் துறைவே ளாண்பெருமான் வளம்சேர் சோழ மண்டலமே.

என்பதினால் கம்பர் தாம் பாடி இராமகாதையில் சடையப்பவள்ளலின் பெரு நன்றியைப் பாராட்டி ஆங்காங்கு 9 பாடல்களால் புகழ்ந்துள்ளனர். அவை வருமாறு:—

1

நடையில் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமவ தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே. —இராம-பாயி

2

விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னூலே
தண்ணெனும் கானம் நீங்கித் தாங்கரும் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் மறுமை நோய்க்கு மருந்தென சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன படைக்கலம் அருளினனே.
—பால-வேள்வி-3

3

அரமடந் தையர் கற்பகம் நவநிதி அமிழ்தம்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்
ஞெருபெரும் பொரு ளின்றியே உவரியுக் கொளிப்ப
வெருவி ஓடின வெண்ணெய் வாழ் கண்ணன்மே வாரின்.
—பால-அகலி-18

4

வண்ண மாலை கைபரப்பி உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத் துயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசையனைத்தும் விழுங்கிக் கொண்ட
விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய் சடையன்றன் புகழ்போ லெங்கும்
பரந்துளவால்—பால-மிதி-74

5

மஞ்செனத் திகழ்தரும் மலையை மாருதி
எஞ்சலில் கடிதெடுத் தெறிய வேநளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்.
—உயுத்த-சேதுபர்-6

6

வாசம் கலந்த மரைநாள நூலின் வகைஎன்ப தென்னை மழைஎன்
ருசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல் சரராமன் வெண்ணெய் அணுகும்
தேசங்க லந்த மறைவாணர் செஞ்சொ லறிவாளர் என்றிம் முதலோர்
பாசம்க லந்த பசிபோல கன்ற பதகன்து ரந்த உரகம்.

—உயுத்த-நாபகா-236

7

அந்தணர் வணிகர் வேளாண் மரபினர் ஆலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளல் சடையனே அனைய சான்றோர்
உய்ந்தனம் அடியம் என்னும் உவகையர் உவரி நாண
வந்தனர் இராமன் கோயில் மங்கலத் துரிமை மாக்கள்.

—உயுத்த-திருமுடி-37

8

அரியணை அநுமன் தாங்க அங்கதன் அடைவாள் பற்றப்
பரதன்வெண் குடை கவிக்க இருவரும் கவரி ஏந்த
விரைசெறி குழலி யோங்க வெண்ணெய் மன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

—உயுத்த-திருமுடி-38

9

மறையவர் வாழி வேத மனுநெறி வாழி நன்னூல்
முறைசெயும் அரசர் திங்கள் மும்மழை வாழி மெய்ம்மை
இறைவன் இராமன் வாழி இக்கதை கேட்போர் வாழி
அறைபுகழ் சடையன் வாழி அருட்புகழ் அனுமன் வாழி.

—உயுத்த-திருமுடி-43

இங்ஙனம் சரராமன் சடையப்பவள்ளலைக் கம்பர் இராம காதையுள் வைத்துப் பாடியுள்ளார் என்பதைப்பாராட்டிப் 'பாண்டி மண்டல சதகம்' பாடினவர்

தேனேறும் இன்சொல் இராமாயணத்துத் திருவழுந்தூர்
ஆனேறனைய தமிழ்க்கம்ப நாடன் அமைத்து வைத்த
தானேரில் கீர்த்திசெய் வெண்ணெய்நல்லூரில் சடையனைப்போல்
வானேறு சீர்த்திகொள் வேளாளர் பாண்டியன் மண்டலமே.

என்பதைக் காண்க.

38. கம்பர் வல்லியம்மையுடன் கலைச்சுவை

கந்த மலர்ப்பிர மன் கன்னிமட வார்க் கெல்லாம்
அந்தஇள நீரைமுலை ஆக்கினன்—சுந்தரம்சேர்
தோற்றமிகு வல்லிக்குத் தோப்பைமுலை ஆக்கினன்
ஏற்றமிதில் யார்தான் இயம்பு —தனிப்பாடல்-கம்பர்-15

மகளிரின் முலைத்தோற்றம் பல வகைப்படும். அவற்றுள் 1 எலுமிச்சம் பழம் போலிருந்து வயது ஆக ஆக அப்படியே வற்றிவிடுவது அல்லது தோலோடு தோலாகக் தொங்கிவிடுவது.

2. நடுச்சோலை மாம்பழம் போலிருந்து தொட்டவுடன் மல்கோவா மாம்பழம் போலாகிப்பின் இளநீர் போலாகி அப்படியே தோல்பைபோலத் தொங்கி விடுவது. இங்குத் தோல்பை தோப்பை என வந்தது.

"சுந்தரம் சேர்தோற்றமிகு வல்லி" என்பதினல் அழகான தோற்றமும் வடிவும் உள்ளவள் வல்லி ஆவாள். அவ்வல்லியின் முலைகளை நடுச்சோலை மல்கோவா இளநீர் என எண்ணி எண்ணிக் கண்டு கண்டு அம்முலைகளைப் பருகிப் பருகி உடலின்பம் நுகருவதற்காக 1000 வாய்கள் வேண்டும் என்ற கம்பர் அப்பழங்களும் இளநீர்களும் ஆன வல்லியின் முலைகள் மக்கட் பேறு ஆயினபின் தொங்கித் தோற்பைகளாகக்காட்சியளித்தன. அக்காட்சியைக் கண்ட கம்பர் தலைப்புப் பாடலைச் சொல்லிச் சொல்லி வல்லி வில்லியுடன் கலை இன்பம் நுகர்ந்து வந்தனர். வயதான கணவனும் பூப்புநின்று பேரிளம் பெண்ணான மனைவியும் உடல் இன்பம் இன்றி உளம் இன்பத்திற்காக இத்தகைய முறையில் உரையாடல் இன்றும் உண்டு. இதனல் கம்பர் மனைவி வல்லியம்மை கருத்திற்கிசைந்த கலை வில்லியாம் பண்டிதள் என்பதைத் தலைப்புப்பாடலில் 'இளநீர், தோப்பை' எனவரும் நகைச்சுவை உரையாடல்களார்) ஐயமற அறிகிறோம்.

கம்பர் காவியத் தலைவன் இராமபிரான் போலவும், சமதருமவள்ளல் சரராமன் போலவும் ஒரு மணவாழ்க்கையும் கொள்கையும் உள்ளவர். எனவே கம்பரின் ஒரே மனைவி வல்லிக்குப் பிறந்த ஆண்மகன் அம்பிப்பதி; பெண் மகள் காவேரியம்மாள். பூப்புநின்று புணர்ச்சி விழுப்பம் அற்றுப் போனவில்லியாம் வல்லியுடன் வயதான கம்பர் மக்களுடன்

மகிழ்ந்து மனையறத்தில் இருந்து வந்தனர். அம்பி-ஓடம், அம்பிப்பதி ஓடங்களுக்குத் தலைவன் குகன்; கம்பர் குகனுடைய பெயரைத் தன் மகனுக்கு ''அம்பிப்பதி'' என வைத்தனர். அம்பிப்பதி பல நூல்களைக் கற்ற கலைஞன். பலவகைக் கவிசளியற்றும் கவிஞன். காவேரியம்மையும் கற்றவள்; கலைஞள். கம்பரைச் சைவர் எனற்காகஅம்பிப்பதிஎன்பதை அம்பிகாபதி எனத் திருத்திகொண்டனர். கம்பர் காவியத்தில் அம்பிகாபதி எனும் சொல்லைச் சொல்லாமையாலும், குகனை அம்பியின் தலைவன் எனக் கங்கைப் படலம் 56இல் சொல்வதாலும் அம்பிப்பதி என்ற பெயரே வைத்திருப்பர்.

39. கம்பர் வல்லியையன்றி மற்றவளை மறுத்து விட்டனர்

சொல்லியைச் சொல்லின் அமுதான சொல்லியைச் சொற்சுருபு
வில்லியை மோக விடாய்தவிர்ப் பாளைவிழி யர்பினல்
கொல்லியைக் கொல்லியம் பாவைஒப் பாளைக் குளிர்ஒற்றியூர்
வல்லியைப் புல்லிய கைக்கோ இவள் வந்து வாய்த்ததுவே.

—த-ந-ச-96

என்பது பின் பொருகால் குரும்பை என்னும் தாதியைத் தழுவிச் சொல்லிய பாட்டு என்னும் தலைப்பின் கீழுள்ளது. இப்பாடல் 'தனிப்பட்டல்திரட்டு' 80ஆம் பக்கம் கம்பர் பாடல் என்றில்லாமல் பல வித்வான்கள் பாடிய பாடல் தொகுதியில் இருக்கிறது. இப்பாடலை எல்லாப் புலவரும் ஒன்று போலச் சொல்லுகின்றனர். அன்னாரனைவருக்கும் வழிகாட்டியாகச்'செந்தமிழ்'தொகுதி 3இல் 11ஆம்பக்கம் கம்பர் தலைப்பில் எடுத்துக்காட்டி, அதற்கு விளக்க உரையாக ''இப்பாட்டினலிவர் வல்லியைப் பிரிந்தகாலத்துக் குரும்மை என்பாளைத்தழுவி மனம் பொருந்தாமையால் வெறுத்தனர் எனத்தெரிகிறது. இவர் வல்லியைப் பிரிகின்றபோது பாடியதாக "வடிப்பாளைவீசும் திருவொற்றியூர் வல்லி" என்னும் முதலையுடைய பாட்டொன்றும் வழங்குகின்றது. இவர்களை அன்றிக்களந்தைப் பதியின் ஒருத்தியையும் இவர் விழைந்தனர் என 'வில்லிகளந்தை மின்னே' என்னும் முதலையுடைய செய்யுளால் விளங்குகிறது. இப்புலமைக்கரசரது அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்தையும் இவ்வாறு அலைக்கவல்ல காமனே யாரினும் பெருவலியுடையன் என்

பது ஒருதலை. 'எவர்க்கும் வேள்கணை தீர்திறமின்று' என்பரன்றே. இவ்விழைவெலா முட்கொண்டு போலும் இப்புலவர் பெருநதகையார் 'கற்றனர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ (மாரீசன்வதை) என்பதூஉம்' என எழுதியுள்ளனர். இதனாலிவர் காமத்தையடக்க முடியாமல் பல தாசிகளிடம் செல்லுகின்ற கம்பர், கற்றவர். ஆனால், கம்பர் ஞானமில்லாதவர் என்னும் பட்டத்தைச் சூட்டி விட்டனர். இவர் காட்டும் "வடிப்பாளை வீசும்" என்னும் பாட்டு முழுவதும் எழுதவில்லை. இருக்குமிடமும் சொல்லவில்லை. காணவும் கிடைக்கவில்லை. எனவே, கம்பர் அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் அருந்துணைவியாயிருந்த அழகுச் செல்வியும், கலைச் செல்வியுமான வல்லியம்மையின் பருவுடல் கம்பர் புறக்கண் தோற்றங்களிலிருந்து மறைந்து விட்டது. இம் மறைவினால் மனம் மாழ்கிக் கொண்டிருக்கும் கம்பரின் ஒரு மண மனப்பண்பை அறியாத ஒருவன் வந்து வல்லிக்கு மாற்றாக இருக்கும் பையை வைத்துக்கொள் என்று சொன்னான். அதற்குக் கம்பர் அத்தகைய 'வல்லியைப் புல்லிய கைக்கோ இவள் வந்து வாய்த்ததுவோ' என்று மறுமொழி சொன்னார் என்றால், இவள் இக்குரும்பை எனக்கு வாய்க்க வேண்டாம், நீயே கொண்டுபோ எனப் பொருள் தோன்றுகின்றதேயன்றி அக்குரும்பையுடன் வாழ்ந்தார் எனும் பொருள் தோன்றவில்லையே!

இராமபிரானும் சூர்ப்பணகையும் ஆடிய உரையாடலின் முடிவில் சூர்ப்பணகை இராமனை நோக்கி என்னை நீ மணம் செய்து கொண்டால் 'விண்ணும் நின்னாட்சியாகும், இனியராய் அன்னர் (இராவணன் முதலானோர்)வந்துன் ஏவலின் நிற்பர்' என்றாள். இதற்கு இராமன்

நிருதர்தம் அருளும் பெற்றேன்: நின்னலம் பெற்றேன்; நின்னோடு
ஒருவரும் செல்வத் தியாண்டும் உறையவும் பெற்றேன்; ஒன்றோ
திருநகர் தீர்ந்தபின்னர் செய்தவம் பயந்த தென்னு
வரிசிலை வடித்த தோளான் வாளெயி றிலங்க நக்கான்.—சூர்ப்ப–56

என்பதினால் இராமன் சூர்ப்பணகையை மணந்து கொண்டேன் எல்லா நலமும் பெற்றேன் எனச் சொன்னான் எனப் பொருள் கொள்வதன்றி வேறுபொருள் கொள்ளமுடியுமா? முடியாது. ஆனால் இராமன்காதை இதற்குமாறாக உள்ளது. அதற்கு விளக்கவுரை "உன்னை மணம் செய்து கொண்டு

அதனால் அரக்கருளேப் பெற்று உன்னுடன் நெடுநாள் பெரும் செல்வ வாழ்க்கை அனுபவிக்கும்படி எனது முன்னே யதவம் இப்பொழுது மிகுதியாக பலித்ததென்று எதிர்மறை இலக்கணையால் பரிகாசமாகக் கூறி ஸ்ரீராமன் இகழ்ச்சி நகை செய்தனன் என்க'' என்றுள்ளது. எனவே, வாய்த்தது என்பதற்கு வாய்க்கவேண்டாம் என எதிர்மறை இலக்கணையால் கொண்டு வல்லியின் பெருமையைச் சொல்லிக் குருப்பையைக் கூட்டிக்கொண்டு வந்தவனேநோக்கி இகழ்ச்சி செய்தனன் எனப் பொருள் கொள்க. மேலும், கம்பநாடர் கற்றவர்; ஞானமுள்ளவர். நமது ஞானமின்மையைப் போக்கிய ஞானமுள்ளவர் எனக் கருத்திருத்திக்களிப்புறுக.

40. கம்பர் மகன் அம்பிப்பதி காதலுக்கும் மகள் காமத்துக்கும் உயிர் கொடுத்தல்

மைவடிவக் குழலியர்தம் வதனத்தை நிகர்ஒவ்வா மதியே! மானே!
செய்வடிவச் சிற்றிடையைத் திருநகையை வேய்த்தோளைத்
தெய்வம்ஆக
இவ்வடிவைப் படைத்தபடி வெவ்வடிவோயானறியேன்; உண்மை
ஆகக்
கைபடியத் திருமகளைப் படைத்திவளைப் படைத்தனன் நற்கமலத்
தோனே.

உருகி உடல்கருகி உள்ளீரல் வற்றி
எரிவ தவியாதென் செய்கேன்—வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு.

கம்பர் மகன் அம்பிப்பதியும் இராசராசசோழன் மகளும் ஒருவருக்கொருவர் காதல் கொண்டனர். அதனால் அம்பிப்பதி சோழன் மகளைப் போற்றிப்புகழ்ந்து, தலைப்பிலுள்ளன வாகிய காதல் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பதைச் சோழன் அறிந்து அம்பிப்பதியை அழைத்து, என் மகளைக் காதல் கொண்டது குற்றம்; மன்னிக்க முடியாத குற்றம். எனினும், இனி 100 பாடல் இவ்வுலகச் சிற்றின்பம் ஆகப் பாடாமல் அவ்வுலகப் பேரின்பம் ஆகப்பாடுவாயேயானுல் மன்னிக்கப்படும் என்று சொல்லியபடி அம்பிப்பதி காப்புப் பாடலைச் சேர்த்து 100 பாடல் பாடினன். இப்பாடல்களைக்

கேட்டுக்கொண்டிருந்த சோழன் மகள் 100 பாடல்கள் அரசன் ஆணைப்படி அம்பிப்பதி பாடி முடித்தனனே என்று மகிழ் வுடன், அம்பிப்பதி கண்டு கண்டு வந்த மேன்மாடி முகப்பி லிருந்து காட்சி அளித்தனள். அம்பிப்பதியும் பாடிமுடித்த மகிழ்வினில் பொங்கிய காதலில் என்றும்போல் மாடிமுகப் பைப்பார்த்து

சற்றே பருத்த தனமே குலுங்கத் தரள வடம்
துற்றே அசையக் குழை ஊசலாடத் துவர்கொள் செவ்வாய்
நற்றேன் ஒழுகந ட்னசிங்கார நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலைஅலங்காரம் புறப்பட்டதே

என்றனன். அரசன் ஒட்டக்கூத்தன் சொற்படி காப்புப் பாடலை நூற்குப்புறம்பெனத்தள்ளிவிட்டு இப்பாடலை 100-வது பாடல் என எண்ணி அம்பிப்பதி குற்றத்திற்கு ஆளான வன் என முடிவு செய்து அம்பிப்பதியை யானைக் காலில் மிதிக்கச்செய்து கொன்று விட்டனன். இதனைக் கண்ணில் கண்டு கலங்கிய கம்பநாடர்

பரப்போத ஞாலம் ஒருதப்பி யாளப் பனிமதியம்
துரப்போ னெருதம்பி பின்வரத் தானும் துணைவியுடன்
வரப்போன மைந்தர்க்குத் தாதை பொருதுயிர் மாய்ந்தனன்நெஞ்
சுரப்போ எனக்கிங்கினி யாருவமை உரைப்பதற்கே

என வருந்தினர். இப்பாட்டில் தம்பி, தம்பி துணைவி, மைந் தர், தாதை என்னும் சொற்களை வைத்துள்ளதை ஆராய்ந் தால், கம்பர் இராமகாதை பாடி அரங்கேற்றிய பின்னரே அம்பிப்பதி இறந்தனன் ஆவான்.

'செந்தமிழ்' தொகுதி 3-பக்கம்-86 – 87 இல் "கம்பர் வமி சத்தினருள் ஓர் அரிய கதை வழங்குகிறது. அஃதாவது:— கம்பருக்குக்காவேரி என்னும் பெயரில் ஓர் அழகிய திருமகள் இருந்தனள். அவளைச் சோழன் மகன் முறைதவறி விரும்பி அவளைத் தான் எய்துதற்குப் பல்லாற்றானும் முயன்றனன். இதுதெரிந்த அத்திருமகள் உயிரினும்பன் மடங்கு சிறந்த கற் பினை அழித்துப் பழிமலைந்து வாழ்தலினும் அவ்வுயிரை இழந்து புகழ் எய்தலே சீரிதாமெனத் தேர்ந்து, கம்பர் திரு மனையின் முற்றத் தொருபுறத்துக் கம்புநிறையப் பெய்திட்ட மிகவும் ஆழமான பெரியதோர் கம்பங்குழி நடுவில் ஓர்நாளி

ரவில் தனியே இறங்கி மூழ்கிமாய்ந்தனள். இப்போதும் கம்பர் வமிசத்தினர் மேற்காட்டிய காவேரி என்னும் கற்புடையாட்டியைத் தங்கள் வீட்டுக் குலதெய்வமாகக் கொண்டுஅவளது திருவுருவத்தை வழிபட்டு வருகின்றனர்" என உள்ளது. எனவே, கம்பநாடர் தமது மக்கட் பேற்றுக்கு வாய்த்த ஒரே மகனும் ஒரே மகளும் இங்ஙனம் பிரிந்தனர். இம் மக்களுக்கு முன்னரே வில்லி என்னும் செல்வப்பெயர் அமைந்த ஒரே மனைவி வல்லியம்மை பிரிந்தனள். கம்பநாடர் மனைவியும் மக்களும் இன்றித்தனிமையில் இருந்தனர்.

41. கம்பர் சடையப்பரின் மறைவுக் கிரங்கல்

ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேர்பாய உண்டு தெவிட் டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா! கம்பன்
இறக்குமோ தேனும் இனி. —தமிழ் நாவலர் சரிதை-101

இப்பாடலைக் கம்பன் இறக்கும் போது பாடியதாக இதுகாறும் கம்பநாடரைப் பற்றி எழுதினவர் யாவரும் ஒன்றுபோன்றே எழுதியிருக்கின்றனர். இதில் வரும் "சடையா!" என்பதைச் சிந்தித்துப் பார்க்கில் தன்னைச் சிறுவயது முதல் ஆதரித்துப் பெருமைப் படுத்திய சடையப்பவள்ளல் இறந்தமைக்குப் பாடியபாடல் என்றுதான் தோன்றுகிறது. எங்ஙனம்? சடையப்பவள்ளல் இருந்திருந்தால் சோழன் கம்பநாடரை நாட்டை விட்டுப்போ எனச் சொல்லியிருக்க மாட்டான்; கம்பநாடரும் நாட்டை விட்டுப் போயிருக்கமாட்டார். எனவே, சடையப்பவள்ளல் இறந்தமைக்காகக் கம்பநாடர் பாடிய இரங்கல்பா எனக் கொள்வதே பொருத்தமாகும்.

ஆன்பால் நறுந்தேன் முக்கனிநீ டமுதில் சுவையா றுடனருந்தித்
தான்பா லணைய மறப்பதில்லை; சடையா! என்று தமிழோதும்
தேன்பா யலங்கல் கம்பனுக்குச் செழுப் பா ரிடத்தில் செய்தநன்றி
வான்பா லிருக்கச் செய்துநலம் வைத்தார் சோழமண்டலமே.

இப்பாடலால் தலைப்புப் பாடலைக் கம்பர் பாடிய இரங்கற் பாட்டெனக் கொள்வதே பொருத்தமாகும்.

42. கம்பர் இராசராசனால் நாடுவிட்டுப் போதல்

மன்னவனும் நீயேயோ மண்ணுலகும் இவ்வளவோ
உன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவது—என்னை
விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? சோழ!
குரங்கேற்றுக் கொள்ளாதோ கொம்பு. —தமிழ்-நா-ச-88

ஒருநாள் இராசராச சோழன் அவையில் என்றும் போல் வரும் கூத்தரும் தாதருமேயன்றி அழைப்பிற்காக வேறு புலவரும் வந்திருந்தனர்

இராசராச சோழன்:- (புலவர்களை ஏறிட்டுப்பார்த்து) 'புலவர்களே! கம்பன் பாடியுள்ள இராமகாதையில் என்னையோ, என் தகப்பன் குலோத்துங்க சோழனையோ, என் பாட்டன் விக்கிரம சோழனையோ, என் மூதாட்டிகளையோ பாடியிருக்கின்றானா?

புலவர்:- (இவ்வினாவை எண்ணி இராமகாதை படிக்காமையால் நிலமகளைப்பார்த்தனர்.)

ஒட்டக்கூத்தன்:- (படித்துள்ளமையைக் கூர்ந்து சிந்திப்பான் போல் விண்மகளைப் பார்த்தனன்.)

வாணிதாதன்:- (நேர் மகளைப் பார்த்தனன்) 'அரசே! வணக்கம். உங்களில் எவரையும் குறிக்கும் சிறப்புப் பெயர்களால் ஒருவரையும் பாடவில்லை. பொதுப்பெயர்களால் பாடியிருக்கிறான்'.

அரசன்:- (அழன்று; இடதுகையால் மீசையை முறுக்கி வலதுகைச் சுட்டுவிரலைக்காட்டிக்காட்டி) "மற்றுயாரைச்சிறப்புப்பெயரால் பாடியிருக்கின்றான்?"

தாதன்:- (அச்சத்தால் அகம் குழைந்து நாத்தடுமாறியதை அடக்கிக் கொண்டு) 'அரசரேறே! வணக்கம்' [எனத்தலை குனிந்துவணங்கிநின்று] சடையனை மட்டும் சடையன் எனும் சிறப்புப்பெயரால் ஒரு 9 இடத்தில் பாடியிருக்கிறான்.

சோழன்:-அப்படியா! (கம்பன் சடையனைத் தனித்துப்பாடினதும்அன்றி மும்மணிக் கோவை என்னும் முழு நூலும் பாடினான். அவற்றிற்கு மேல் இராமகாதையில் 9 இடங்களில் சடையனைப் பற்றிப் பாடியிருக்கிறான் என எண்ணிக் கொண்டு,) புலவர்களே! இன்று கம்பனை வரும்படி செய்து எம்மேல் ஒரு முழுநூலைப் பாடச்செய்தல் வேண்டும்.

அதற்கு இதுதான் தக்கதருணம் எங்ஙனே என்னில் சடையன் சாய்ந்து விட்டனன். மனைவி மக்கள் மறைந்து விட்டனர். கம்பன் தனித்தவன் ஆனுன்; ஆதரவற்றவன் ஆனுன். எனவே, இத்தருணம் கம்பனை வரும்படி செய்து எம்மேல் பாடச் சொன்னுல் பாடுவான்.

புலவர்:–ஆம்; ஆம்; அதுவே சரி; அதுவே சரி.

சோழன் இத்தருணம் வரவழைத்துப் பாடச் சொன்னுல் பாடுவான் எனும் முடிவில் கம்பரை வரவழைத்தனன்.

கம்பர் எல்லா ஆடம்பரங்களுடனும் வழக்கம் போல் வந்தனர்.

அரசர் மற்றவர் வழக்கம் போல் கம்பருக்கு மரியாதை செய்து வரவேற்றுப் பின்னர் அவையில் அமரும்படி செய்தனர். அன்புடன் அளவளாவினர். சடையப்பனும் மனைவி மக்களும் இன்றித் தனிமையானமைக்குப் புறத்தில் இரங்கினர்; அகத்தில்மகிழ்ந்தனர்.

இராசராசசோழனும் அண்டினேரும்:

அவ்வழி ஆயிரம் ஆயிரம் நிரைச்
செவ்வழிச் செம்மணித் தூணம் சேர்த்திய
அவ்வெழில் மண்டபத் தரிகள் ஏந்திய
வெவ்வழி ஆசனத் திலிருந்து மேயினுன்.

—உயுத்த-இராவணன்

வரம்பெறு சுற்றமும் மந்திரத் தொழில்
நிரம்பிய முனிவரும் சேனைநீள் கடல்
தரம்பெறு தலைவரும் தழுவத் தோன்றினுன்
அரம்பையர் கவரியோ டாடும் தாரினுன்.

—மந்திரப்படலம்-5—6

இங்ஙனம் இராசராச சோழன் வீற்றிருந்தனன்.

இன்னபோ திவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறை முறை துறையில் சுற்றவே. —ஆரணிய

மங்கையர் திறத்தொரு மாற்றம் பேசினும்
தங்களை ஆமெனத் தாழும் சென்னியர்
அங்கையுர் உள்ளமும் குவிந்த ஆக்கையர்
சிங்கஏ றெனத்திறல் சித்தர் சேரவே. —இராவணன்

அன்னவன் அமைச்சரை நோக்கி ஆண்டொரு
நன்மொழி கூறினும் நடுங்கும் சிந்தையர்
என்னைகொல் பணிஎன இறைஞ்சு கின்றனர்
கின்னரர்; பெரும்பயம் கிடந்த நெஞ்சினர்.

—அனுங்குறு-8-9-10

இங்ஙனம் அரசனை அண்டினோர் இருந்தனர். இவற்றைக் கம்பர் கண்டு கண்டு அகத்துள் வெறுத்தனர்; உதட்டில் சிரித்தனர்.

இராசராசன்:- கம்பரே! உமது இராமகாதை எனது அரசவையில் ஏன் அரங்கேற்றவில்லை?

கம்பர்:- சோழரே! அரங்கேற்றும் அரங்கம் அமைத்தவர் சடையப்பர்.

சோழன்:- அரங்கேற்றத்திற்கு என்னையேன் அழைக்கவில்லை?

கம்பர்:- அதற்கு அரங்கேற்றக் குழுவின் தலைவரைக்கேட்க வேண்டும்.

சோழன்:- அரங்கேற்றத்திற்குப் பலப் பலரிடம் சென்று கையொப்பங்கள் வாங்கிவந்தமைபோல என்னிடம் ஏன் வந்து கையொப்பம் வாங்கவில்லை?

கம்பர்:— அரங்கேற்றக் குழுவினர் எவரும் உம்மிடம் கையொப்பம் வாங்கிவரச் சொல்லவில்லை.

சோழன்:- சரி. நீர்தான் என்னிடம் ஏன் வரக்கூடாது?

கம்பர்:- அங்ஙனம் வரும்படி வரும்படியில்லை.

சோழன்:- நான் மன்னவனுயிற்றே. அம்முறையில் என்னை வந்து காணுதலோ ஆதரவு பெறுதலோ அவசியம் அன்றோ?

கம்பர்:- நீர் மன்னவர் தான். யார் இல்லை என்றனர். அம்முறையில் உம்மைக் காணவோ ஆதரவு பெறுதலோ ஆன அவசியம் எனக்கின்று.

வாணிதாதன்:— நீவிர் பாடிய அரசியல் படலங்களிலேனும் நமது அரசரைப் பற்றி உவமானம் ஆகவேனும் பாடியிருக்கலாமே.

கம்பர்:— நான் சொல்லும் உவமானம் இதுகாறும் சொல்லிய புலவருக்கு மாறுபட்டது.

வாணிதாதன்:— எங்ஙனம்?

கம்பர்:— எங்ஙனமா? இதுகாரும் புலவர்

நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் —புறநா. 186.

என அரசனை உயிராகவும் மக்களை உடம்பாகவும் பாடினர். யானே

வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்உயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்—பால-அரசி-10

என அரசனை உடம்பாகவும் மக்களை உயிராகவும் வைத்துப் பாடினேன்.

வாணிதாதன்:-தசரதன் அத்தகையவனு?

கம்பர்:- இனிமேல் அரசன் மக்களின் உயிர்போல் இருக்கக்கூடாது; உடல்போல் இருக்கவேண்டும். தசரதன் வரலாறுத்தசரதன் அல்லன். கதையிலிருந்து கற்பனையானவன். எனவே நான் நீர் சொல்லும் தயரதனைப் பற்றிப் பாடவில்லை. என் மனப்பண்பில் பாவனைசெய்த அரசனைத் தயரதன் மேல் வைத்துப்பாடினேன். உமது அரசர் மக்களின் உடல் போன்ற நிலையில் அரசியல் நடத்துகிருரா? அங்ஙனம் கூத்தன் உள்ளிட்ட நீவிர்எவரேனும் பாடியிருக்கிறீர்களா? இல்லையே!

வாணிதாதன்:- இருக்கட்டும். நீவிர் உயர்த்திப்பாடிய சடகோபர் "திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக் கண்டேன்" எனப்பாடினரே! அம்மன்னர்களில் எமது மன்னவன் சேர்ந்தவன்தானே! அவ்வாறு எமது சோழரையும் ஓரிடத்தில் பாடியிருக்கலாமே!

கம்பர்:-அரசருக்கும் திருமாலுக்கும் ஆடை, அணி, மகுடம், மாலைஇவற்றின் அலங்காரங்கள் ஒன்று போன்றனவாகையால் நம்மாழ்வாருக்குத் திருமால் பேரிலுள்ள பத்திப் பெருக்கினுல் எல்லா மன்னர்களும் திருமாலாகவேதோன்றுகின்றனர்.

சோழன்:- என்னுட்டில் இருந்துகொண்டு என்னைப் பாடாமல் இருக்கலாமா?

கம்பர்:- அவ்வுலகமெல்லாம் உன்னுடலல்ல; உன்னுடு இவ்வுலகில் ஆலிலையில் நுனிபோன்றது.

சோழன்:- என் நாட்டிலுள்ள எப்புலவனும் என்னைப் பாடாமல் இருந்ததும் இல்லை; இருக்கவும் முடியாது. எனவே, நீவிர் மட்டும் ஏன் என்னைப்பாடவில்லை?

கம்பர்:-"இருக்கவும்முடியாது" என்றல் என்னிடம் இருக்கவும் முடியாது

சோழன்:-நீவிர் இன்று இருப்பது என் நாடுதானே? அதனுல் என் நாட்டை ஏன் பாடவில்லை?

கம்பர்:- இன்று உமது நாடு நாளை யார் நாடோ?

சோழன்:-இன்று என் நாட்டில் இருப்பதால் என்னை ஏன் பாடக்கூடாது?

கம்பர்: உன்னைப்பாடற்கான புகழ் என்ன?

சோழன்:- ஒன்றுமின்ரு?

கம்பர்:- இன்று; இகழ்வதற்கான சிறுமையே உண்டு.

சோழன்:- சொல்லுக; அச்சமின்றிச் சொல்லுக.

கம்பர்:-அச்சம் உமக்கு; உமது அவைப்புலவருக்கு.

சோழன்:- இருக்கட்டும் இயம்புக.

கம்பர்:-உமது மகள் எனது மகனைக் காதலித்தாள்;எனது மகன் உமது மகளைக் காதலித்தான். இதில் எனது மகன் காதலித்தது குற்றம்; அதற்காக என் மகனுக்குக் கொலைத் தண்டனை. உமது மகள் காதலித்தது குற்றமில்லை; அதற்காகவும் மகளுக்குச் சிறப்புகள் . இஃதொன்ரு?உம்மகன் என் மகளைக் காமித்தான்; என் மகள் உம் மகனைக் காமிக்கவில்லை; உம்மகன் என் மகளை வற்புறுத்தினுன்; என்மகள் இணங்கவில்லை. உம்மகன் என்மகளின் தாய்மையை அழிக்கத் தொடங்கினுன்; என்மகளின் தாய்மையை மண்ணின்மேல் காக்கவழியின்றி மண்ணுள் மறைந்தனள். என்மகள் மண்ணுள் மறையும் தற்கொலைக்குக் காரணம் உன்மகனுவான். அதற்காக உன் மகனை என் மகளைக் கொன்றது போல்கொன்றீரா? அன்றித்தண்டித்தீரா? இவையொன்றுமின்றி உம்மகனுக்கு இளவரசுப்பட்டம் தந்தீர். இன்னும் கேண்மின். உமது அவையில் உமது உளம்ஒட்டக் கூத்தாடும் அவைக்களப்பலவர் இருக்கின்றனர். அவருள் தலைவன் ஒட்டக்கூத்தன். உமது விருப்பப்படி எனது மகன் 100 செய்யுட்களைப் பாடினுன். அதில் காப்புச் செய்யுள் கணக்கில் சேராது எனச் சொல்லி, என் மகனை வெட்டவேண்டும் எனச்சொன்னவன்

ஒட்டக்கூத்தன். ஏன்? கூத்தனுக்குக் குமரன் இல்லை. எனவே கம்பன் மகன் அம்பிப்பதி கற்றவன், கவிஞன்; தனக்குப்பின் அரசவைப் புலவன் ஆவான் எனக்கூத்தன் புழுங்கினான்; பொறாமை கொண்டான். இதனால் என் மகனைக் கொலை செய்யச் செய்தான்; செய்தீர். இங்ஙனம் கொலைஞரோடுள்ள கொலைஞனையா நான் புகழ்ந்து பாடுவது?

சோழன்:- எனது முன்னோர்களையேனும் புகழ்ந்து பாடலாமே?

கம்பர்:- உமக்கு 4 மனைவியர். உம் தகப்பன் குலோத்துங்க சோழனுக்கு 2 மனைவியர். உம்பாட்டன் விக்கிரம சோழனுக்கு 3 மனைவியர் உம் முன்னோன் அரிஞ்சயனுக்கு 5 மனைவியர். உம் முன்னோன் முதல் இராசராசனுக்கு 12 மனைவியர். இங்ஙனம் பலப்பல மனைவிகளைக் கொண்ட அரச வாழ்க்கை குற்றமில்லையா? அதற்குத் தண்டனையில்லையா? இத்தகைய மன்னர்களையா யான் புகழ்வது?

சோழன்:- (பெருமூச்சு விட்டான்) இராம காதையுள் சொல்லும் தயாதன் எம்போன்று பல மனைவியரை மணந்த மன்னனல்லவா?

கம்பர்:- ஆம்; நான் இராமகாதை இயற்றுவதற்காகப் படித்தன பல இராமாயணங்கள். அவற்றிலுள்ள நாடு நகரங்களையோ, மலை, ஆறுகளையோ, மனிதன் தெய்வம் விலங்குப் பாத்திரங்களையோ பார்ப்பதற்காக அவ்வவ்விடங்களுக்கு நான் போகவில்லை. நான் கண்டது காவேரி, வைகை; அவைதான் எனக்குக் கங்கையும் சரயுவும் ஆகும். நான் கண்டது பொதியமலை, கொல்லிமலை, வேங்கடமலை; அவையே எனக்கு இமயம், விந்தியம், கிட்கிந்தை மலைகளாகும். நான் கண்டது தொண்டைநாடு, தமிழ்நாடு; அதுவே கோசலம், இலங்கைகள் ஆகும். நான் கண்டது தமிழரசர் அரண்மனைகள். அவையே தயரதன், இராவணன் அரண்மனைகள். நான் கண்டது சோழவரசர்; அவரே தயரதன், இராவணன் ஆவர். கைகேயி, சூர்ப்பநகை, தாடகை, உரிமை, தாரை முதலிய பெண்பாத்திரங்களும், இராமன், இலக்குமணன், பரதன், கும்பகருணன், விபீடணன், இந்திரஜித்து, அநுமான், சுக்கிரீவன், வாலி முதலிய ஆண் பாத்திரங்களும் அரசர், அரச மகளிர் சமுதாய மக்களுமே ஆவர். மண்

ணுலக மக்களேயே, மலேவாச வானரர்கள் என்றும் வான வாசவானவர்கள் என்றும் கவிஞர் மரபில் கற்பனே செய்தேன். தமிழர் சமுதாயமேயல்ல. ஆரியர் சமுதாயமேயல்ல. உலகர் சமுதாயமே இங்ஙனம் இருந்தது; இருக்கின்றது; இருக்கவேண்டும் என்பதற்காக அமைத்த காவியமே இராம காதையாகும். அதனுள் யான் கண்ட இராமன் சடையப்பன். அதனுல் சடையப்பனே சரராமன் என்றேன்.

சோழன்:- கம்பரே! நீவிர் சொல்லும் இராமகாதையை இன்னெரு முறை என் அவையில் அரங்கேற்றலாம். அதற்காகஎன்னேப்போற்றிப்புகழ்ந்து பாடவேண்டும். இன்றேல் உன் வரிசைகள் யாவும் இல்லாமல் போகும். நீ தனி மனிதனுவாய்.

அவையத்தார்:- அகம் அசையவில்லே; அண்ணுந்து பார்த்தனர். கண்கள் இமைக்கவில்லே; உதடுகள் அசையவில்லே. சோழன் இராசராசன் சிந்தையில் எழுகின்ற சினத்தீயின் அலேகள் தங்கள் முகங்களில் வெம்மையாகவும் கம்பர் முகத்தில் தண்மையாகவும் வீசுவதைக் கண்டனர். தத்தம் அகங்களில் இராமகாதைப் பாத்திரங்களில் தாம் எப்பாத்திரத்திற்குத் தகுதியுள்ளவர் எனும் சிந்தனேயில் சிக்கினர்; செயலற்றனர்.

கம்பர்:- சோழரே! இராசஇராசரே! நீவிர் சொல்லியதும் அதன் விளேவும் உமக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். அவ்விளேவின் விளேவு உமக்குத் தெரியாது; எனக்குத் தெரியும்.

சோழன்:- விளேவுக்கு விளேயும் பின் விளேவைப் பற்றி எனக்குத் தெரியவேண்டாம். முன் விளேவைப் பற்றி என்ன சொல்லுகிறீர்?

கம்பர்:- சொன்னது தலேப்புப்பாடல்.

சோழன்:- இதுவா? போ; என் நாட்டைவிட்டுப்போ. உனது வரிசைகளும் வாய்த்த வளங்களேயும் பறிமுதல் செய்துவிடுவேன். அவற்றுடனு? பொதுவாக உமது நூல்களேயும் சிறப்பாக இராமகாதையும் பறிமுதல் செய்துவிடுவேன்.

கம்பர்:- எல்லாம் பறிமுதல் செய்யலாம்; எனது இராமகாதையும் பறிமுதல் செய்யலாம். எனது நூல்களும்

இராம காதையும் எழுதி வைத்துள்ள மக்கள் மனங்களைப் பறிமுதல் செய்ய உம்மால் முடியாதே! மகிழ்ச்சி.

மன்னரைப் பாடாத மாப்புலவர் வாழ்வதற்குப்
பின்னர்அந் நாட்டில் பிழைப்பில்லை—உன்னியுளம்
வெர்பிப் பலபுலவர் வேறுவேறு நாடுற்றார்
கர்பர்இதற் கோரெடுத்துக் காட்டு —திரு. வ. காவியம்

43 கம்பர் கம்ம குலப் பிரதாபருத்திரனிடம் போதல்.

அவனி முழுதுண்டும் அயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குராம் —தமிழ் நாவலர் சரிதை-89

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் இராசராச சோழன் அவைக்களத்திலிருந்து வந்ததும், தமது சிவிகை வரிசைகள் ஆட்கள் இருக்கவேண்டிய இடத்தில் கண்டிலர். தான் நினைத்த வண்ணமே அவையனைத்தும் சோழனல் பறிக்கப்பட்டன என்பதைத் தெரிந்து கொண்டனர். அதைப் பற்றி அணுவளவும் கவலைகொள்ளாதவராய் மகிழ்வுடன் நடந்து சென்றனர். எங்கெங்குச்செல்வாரோஎங்கெங்குத்தங்குவாரோ அங்கெல்லாம் மக்கள் வரவேற்று மகிழ்ச்சியுடன் உபசரித்தனர். பின்னர் தனது கம்பநாடு வந்தனர். வீடு திறந்திருந்தது; வீட்டில் ஒரு பொருளும் இல்லை; முன்னிருந்த ஆட்களும் இல்லை. எனினும் அப்பககம் மக்களால் மிகவும் போற்றப்பட்டவராய்த் தொண்டை நாடு வந்தனர். அங்குத் தமது வாழ்விற்கும் பெருமைக்கும் ஒரு குறைவும் இல்லாதிருப்பினும் தமது முன்னோர்களுள்ள ஆந்திர நாடு போக வேண்டும் என எண்ணினர். அங்குத்தமது பெருமையை அறிந்து போற்றுபவர் ஓரங்கல் பிரதாபருத்திரன் எனத் தெரிந்து அங்கும்போகவேண்டும் எனஎண்ணினர். ஓரங்கல் இன்று ஐதராபாத்துக்கு வடகிழக்கே உள்ளது.

சம்மவார்சரித்திரம்31ஆம் பக்கத்தில் சொல்லியபடி உருத்திரன் கம்மவார் மரபினன ஆவான். இதனை ஆய்ந்தரிந்த கம்பநாடர் பிரதாபருத்திரனடம் செல்லவும் உருத்திரனும்

கம்பநாடரைத் தமது முன்னோர் கம்மவார் மரபினர் எனத் தெரிந்து மிகவும் அன்பு வணக்கத்துடன் உபசரித்தனன். பிரதாபருத்திரன் அருங்கலை விநோதன். தனது அவைக் களத்தில் கலை வல்லுநர்களைக் கண்டு வரவழைத்துக் கலை யின்பம் துய்த்து வருவான். அங்ஙனமே கம்பநாடரிடம் கலையின்பமும், இராமகாதை இன்பமும் நுகர்ந்து வந்தனன். இராம காதையில் தெலுங்குச் சொற்களை வைத்திருப்பதைக் கண்டு கம்பநாடரின் கலைப் பெருமையையும், தாய்மொழிப் பற்றையும் பெரிதும் பாராட்டினன். கம்பநாடர் தாய்மொழித் தெலுங்குப் பயிற்சியேயன்றித் தெலுங்கு நூற்பயிற்சியும் மிக் கிருந்தனர் என்பதும், உருத்திரனும் தமிழ்க்கலைச் சுவை அறி யும் புலமையுள்ளவன் என்பதும் 'செந்தமிழ்' தொகுதி-3 பக் கம் 97 முதல் 101 வரை செவ்வனே விளக்கப்பட்டுள்ளன.

கம்பர், கம்பநாடர், கவிச்சக்கரவர்த்தி, கம்பநாட்டாழ் வார் என்னும் சிறப்புப் பெயர்களைப்பெற்றுப் பெரும் சிறப்புக் களுடன் மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தமையும், அன்பு டன் ஆதரித்துப் பெருமையுடன் சடையப்பர் வைத்திருந்த மையும், பின்னர் மனைவி, மக்கள், சடையப்பர் மறைந்தமை யும், சோழனால் கம்பரின் வரிசைகளும், பொருள்களும் பறி முதல் செய்யப்பட்டதையும், கம்பர் தனிமையானமையும், பிற வும் பிரதாப ருத்திரன் உண்மையுற உணர்ந்திருந்தனன் உணர்ந்தே கம்பநாடர் சோழநாட்டில் எத்துணை சீரும் சிறப் புக்களுடன் வாழ்ந்தாரோ, அத்துணை சீரும் சிறப்புடன் ஓரங்கல் நாட்டில் வைத்திருந்தனன். கம்பநாடரைச் சீரும் சிறப்புடன் சோழ நாட்டில் கம்பநாட்டுக் கம்பர் வீட்டிலிருக் கச்செய்து கம்பநாடர் முன்னர் எவ்வெச் சிறப்புக்களுடன் வாழ்ந்தாரோ, அவ்வச் சிறப்புகளுடன் வாழ்வதற்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் செய்துவைத்தனன். கம்பநாட ரைத் தன்னந்தனியனாக்கிய இராசராச சோழனையும், தன் னந்தனியனாக ஆக்கல் வேண்டும் எனச் சூளும் சொல்லி னன். கம்பநாடர் ஓரங்கல் நாட்டிலிருக்கும்பொழுது பிரதாப உருத்திரன் ஆடம்பர வாழ்வையும், அரண்மனை விருந்தை யும் கண்டு சொல்லியதே தலைப்புப் பாடலாகும்.

44 கம்பர் சோழன் ஏவிய புலியை உறுத்து நிறுத்தல்

வெங்கண் சிவந்து வெடிவால் முறுக்கி வெகுண்டெழுந்தென்
அங்கம் பிளக்க வரும்புலியேயன் றிரணியனைப்
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றியுண்ட
சிங்க மிருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே

—த-நா-ச—99

கம்பநாடரைப் பிரதாபருத்திரன் ஓரங்கல் நாட்டிலிருந்து வரிசைகளுடன் அனுப்பிவைத்துக் கம்ப நாட்டில் எல்லாச் சிறப்புகளுடன் இருக்கச்செய்ததையும், தான் கம்ப நாடரைத் தனியனாக்கியதைப்போலத் தன்னைப் பிரதாபருத்திரன் தனிமையாக்கல் வேண்டும் எனச் சூள் செய்ததையும், ஒற்றரால் தெரிந்த இராசராசன் கம்ப நாடரை எப்படியேனும் ஒரு சூழ்ச்சி செய்து கொன்றுவிட்டால், பிரதாபருத்திரன் போருக்கு வரமாட்டான என எண்ணினன். உருத்திரன் போர்ப்படைப் போக்கையும், வெல்லும் திறமையையும், சூளை நிறைவேற்றும் ஆற்றலையும் எண்ணினன். கம்பநாடரை பேராபத்தினின்றும் காக்கச் செய்த முயற்சி தவறிப் போகக் கம்பநாடர் இறந்துவிட்டனர். சோழன் மேல் தவறில்லை; செய்த முயறசியின் மேல்தவறு எனப் பொது மக்கள் புகன்று நம்மைப் போற்றவேண்டும் என இராசராசன் எண்ணினான். கம்பநாடரை என்றும் போல் வரிசைகளுடன் அரண்மனைக்கு வரும்படி செய்தான். தான் பரிசனங்களுடன் எதிர் கொண்டழைப்பதற்காக அரண்மனைக்கு முன்னர் நின்றுகொணடிருந்தான். கம்பநாடர் வரும் வழியில் மறைவாக ஒரு புலிப் பெட்டியையும் வைத்திருந்தான். கம்பநாடர் வரும்பொழுது கம்பநாடரைக் கொல்வதற்காகப் பெட்டியிலுள்ள புலியைத்திறந்து விடுவதற்காக ஏற்பாடு செய்திருந்தனன். முன்னைய வழக்கம் போல் கம்பநாடர் வராமல் தன்னந்தனியாக வந்தனர்; புலியையும் ஏவி விட்டனர். கம்பநாடர் தலைப்புப்பாடலை உரக்கச் சொல்லிச் சினக்கோலத்துடன் புலியைப் பார்த்துப் பார்த்துக் கண்களில் தீப்பொறி பறக்க உறக்க உறுத்து நின்றனர். மக்கள் மனத்தின் ஆற்றலுக்கு முன் விலங்கு மனத்தின் ஆற்றல், அடங்கும். அடங்காதனவும் சிறிதே அடங்கும். என்னும் இயற்கைப்படி சினப் புலியும் சிறிதே அடங்கி நின்றது. இதனைக் கண்ட இராசராசன் அடங்கியபுலி அடங்கி விடுமோஎன்னும் ஐயத்தினால்

கம்பரைக்கொல்வதற்கு வேறு சமயம் வாய்க்காதோ என்னும் ஐயத்தினுல், இவ்விரண்டையமும் உண்டாக்கிய அச்சத் தினுல் தெளிவினுல் புலியின் மேல் எய்வான் போல் கம்ப ரின் மேல் அம்புகள் எய்து விட்டனன்.

45. கம்பர் பருவுடல் மறைவு
நாட்டரசன் கோட்டையன்று

வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானுலும்
வில்லம்பில் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டுருவிற் றென்னைஎன் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கும் என்றே துணி —தமிழ் நாவலர் சரிதை-100

எனக் கம்பநாடர் சொல்லிய திருவாக்கின்படி அன்றையிலி ருந்து சோழர் குலம் அழிநிலைக்கு வந்து விட்டது. இதற்குச் செந்தமிழ் தொகுதி 3-ம் பக்கம் 104ல் "கம்பர் இறந்த பின் னர் சோனுடு ஓரங்கல் கணபதியரசர்களால் படை எடுத்து வெல்லப்பட்டுச் சோழரது பெருமை எல்லாம் போய் அவ் வரசர் வமிசமும் அருகித் தொலையப்பட்டதாகும். கம்பரை அம்பால் எய்து கொன்றவன் விக்கிரமனுக்குப் பின் ஆண்ட குலோத்துங்கனுக்குப் பின் அரசெய்திய இராசராசன் என் பவன் ஆவான். இச்சோழனுக்குப்பிற்பட்டு அச்சோழப் பரம் பரைப் பழைய சாசனங்கள் காணப்படாமையும், ஓரங்கல் அரசர் இக்காலத்துச் சோனுடு வென்ருண்டனர் எனச் சாச னங்களால் அறியப்படுவதுமே, இச்சோழராச்சியம் கெட்டு வங்கிசமும் கம்பர் தெய்வ வாக்குப்படி அருகித் தொலைந்தது என்பதற்குத் தக்க சான்ருகும்" என்பதுவே சான்ற சான் ருகும்.

வில்லம்பு பட்டதும் சொல்லம்பு தொடுத்த கம்பநாடர் எங்குபோய் எவ்வாறு மறைந்தனர் என்பதைப் பற்றி வர லாற்றுக் குறிப்புக்களோ கற்பனைக் குறிப்புக்களோ ஒன்றுமே காணவில்லை. ஆனுல். நாட்டரசன் கோட்டையில் ஓர்சமாதி யிருந்தது அதற்கு ஓர் 50 ஆண்டுகளுக்கு முன் அச் சமாதிக்கு மேல் சிறு காரைக் கட்டிடமும் முன்னர் சிறு தகரக் கூரையும் போட்டு அச்சமாதியைக் கம்பர் சமாதி என்கின்ற னர். அச்சமாதிக்கு வடபுறம் உட்கார்ந்த வடிவமுடன் ஓர் சிலையை வைத்து அதனைக்கம்பர் சிலை என்கின்றனர்.

இச்சமாதியும் சிலேயும் கம்பர் சமாதியும் சிலேயும் அல்லன என்பதற்குக் காரணங்கள் காண்க.

1. அது கம்பர் சமாதி ஆகுமேல் சமாதிக்கு மேல் கம்பர் சிலே வைத்திருக்க வேண்டும். வைக்காமல் சிவலிங்கம் வைத்திருக்கின்றனர். அதனுல் அது கம்பர் சமாதி ஆகாது.

2. கம்பர் பாடியது எனத் தனிப்பாடல் திரட்டில் 76 பாடல்கள் இருக்கின்றன. அவற்றுள் பல பாடல் வரலாற்றுக்குப் பொறுந்தாததால் கம்பர் பாடியனவல்ல என வரலாற்ருசிரியர் தள்ளிவிட்டனர். அத்தள்ளப் பட்டதினும்நாட்டரசன் கோட்டையைப் பற்றிய ஒரு பாடலும் இல்லே.

3. தனிப்பாடல் திரட்டில் இல்லாத பல பாடல்கள் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளன. அச்சரிதை தொகுத்தது 250 ஆண்டுகளுக்கு முன்னென்பர். அச்சரிதையிலுள்ள கம்பர் பாடல்களே ஆராய்ச்சியாளர் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். அச்சரிதையில் கம்பர் நாட்டரசன் கோட்டைக்குப் போனதாக எக்குறிப்பும் இல்லே.

4. கம்பரைப் பற்றிச்சொல்லும் சோழ, பாண்டிய, தொண்டை மண்டல சதகங்களிலும் கம்பர் நாட்டரசன் கோட்டைக்குப் போனதாக எப்பாடலிலும் இல்லே.

5. முறையே 100, 75 ஆண்டுகளுக்கு முன்னர் இல்லாததனே உண்டெனக் கற்பனேகள் செய்து பாடிய, எழுதிய புலவர் புராணம் விநோதரச மஞ்சரி இவற்றினும் நாட்டரசன் கோட்டைக் கம்பர் சமாதியைப் பற்றி ஓர் கற்பனேயும் புனேயவில்லே. இவற்ருல் நாட்டரசன் கோட்டையில் கம்பர் சமாதி அடைந்ததற்கான ஆதாரம் ஒன்றுமே இல்லே எனத் தெளிந்தோம்.

6. தேரழுந்தூர் கம்பர் சிலேக்கும், நாட்டரசன் கோட்டைக் கம்பர் சிலேக்கும் முற்றிலும் வேறுபாடு. தேரழுந்தூர் சிலே முன்னேயது. நாட்டரசன் கோட்டைச் சிலே பின்னேயது. அவ்வேறுபாடுகளேக் காண்க.

அ) தேரழுந்தூர் கம்பர் சிலே நின்ற வடிவில் கூப்பிய கைகளுடன் உள்ளது. நாட்டரசன் கோட்டைக் கம்பர் சிலே உட்கார்ந்த வடிவில் வலது கை மேல் நோக்கி உள்ளங்கை விரித்துக் கட்டைவிரலும் பெருவிரலும் தொட்ட

வடிவிலும் இடதுகை கீழ் நோக்கி உள்ளங்கை விரல்கள் மடித்த வடிவிலும் உள்ளது.

ஆ) திருவழுந்தூர் கம்பர்சிலை தலைமயிர் கட்டி முடித்த கொண்டை வடிவில் உள்ளது. கோட்டைக் கம்பர் சிலை தலையில் தலைப்பாகை வைத்துள்ளது.

இ) திருவழுந்தூர் கம்பர்சிலை முன்கையில் மணிக்கடகங் களும், தோள்களில் வளையங்களும். காதுகளில் குண்டலங் களும் உள்ளன. கோட்டைக் கம்பர் சிலைக்கு அவையில்லை.

ஈ) திருவழுந்தூர் கம்பர் சிலை செவ்வனே விழித்த கண் களும் அடர்ந்து வளைந்த புருவங்களும் மீசையும், உள் ளது. கோட்டைக்கம்பர் சிலை முகிழ்த்த கணகளும் சிறுத்த புருவங்களும் உள்ளது. மீசை இல்லாதது.

உ) திருவழுந்தூர் கம்பர் சிலை நெற்றியில் திருமண்குறி யுள்ளது. கோட்டைக் கம்பர் சிலை நெற்றியில் விபூதிக்குறி யுள்ளது. இங்ஙனம் திருவரங்சம் கம்பர் சிலை தோள், மார்பு, நெற்றி, முகம் இவற்றின் தோற்றங்களுக்கும், கோட்டைக் கம்பர் சிலைத் தோற்றங்களுக்கும் மிக்க வேறு பாடுகள் உள்ளன.

8. இப்பொழுது நாட்டரசன் கோட்டையில் கம்பர் விழா நடத்துவோர் கம்பர் எனச் சொல்லும் உருவப்படம், திருவ ழுந்தூரிலும் நாட்டரசன் கோட்டையிலும் உள்ள சிலைகளின் உருவங்களுக்கு முற்றிலும் வேறானது. நாட்டரசன் கோட் டைக் கம்பர் சிலையைக் கம்பர் சிலைஎன உண்மையும் உறுதி யும் ஆகக் கம்பர் விழா நடத்துவோர் எண்ணியிருப்பரேல் நாட்டரசன் கோட்டைக்கு மாறான உருவப்படத்தை வைத் துக்கம்பர் விழா நடத்தவே மாட்டார். இவற்றால் நாட்டர சன் கோட்டையிலுள்ள சமாதி கம்பர்சமாதி என்பதும் வலது பக்கம் உள்ள சிலை கம்பர் சிலை என்பதும் வரலாற்றுக்கு மாறாகப் புனைந்த பொய்மையாகும். இப்பொய்மையை உறு திப்படுத்த இன்னொரு பொய்மையையும் புனைந்தனர். ஔவையார் பாட்டாக இன்றுகாறும் எல்லாத் தனிப்பாடல் திரட்டுகளிலுமுள்ள

கருங்காலிக் கட்டைக்கு நாணுக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றேன்
ஈரிரவும் துஞ்சாதென் கண்.

என்பதில் உள்ள ஈற்றடியை "நாட்டரசன் கோட்டை நகர்க்கு" எனமாற்றிக் கம்பர் நாட்டரசன் கோட்டையில் சமாதியடைந்தார் என்பர். இதுவும் அடியை மாற்றி வைத்த அடிப்படைப் பொய்மையாகும்.

திருவழுந்தூரில் கம்பர் மனையிருந்த இடம் கம்பர் மேடு என இன்னும் இருப்பதுபோல் திருவழுந்தூரில் கம்பர் பருவுடல் பலரும் காண மறைக்கப்பட்டிருந்தால் அதை இன்று சமாதி எனச் சொல்வர்; மண்டபம் கட்டியிருப்பர் கம்பர் சிலை வைத்திருப்பர்; பூசை செய்வர்; அங்ஙனம் ஒன்றும் இன்மையால், மார்பில் அம்பு பட்ட கம்பர் திருவழுந்தூர் வரும் வரையும் உடல் நிலை இருந்திருக்காது. ஒரு 15 மைல் அளவுள்ள திருவழுந்தூருக்கே வரமுடியாத கம்பர் ஒரு 50 மைலுக்கு மேலுள்ள நாட்டரசன் கோட்டைக்குப் போனார் என்றால் ஒரு சிறிதும் பொருந்துவதன்று. எனவே தஞ்சைக்கு அண்மையில் எங்கேயோயாவரும் அறியா நிலைமையில் கம்பர் பருவுடல் மறைக்கப்பட்டிருக்கும்.

இன்றும் திருவழுந்தூர் ஆமருவிப்பெருமாள் கோவிலில் உள்ள மிகப்பழமையான கம்பர் சிலையும் கம்பர் மனைவி வல்லியம்மை சிலையும் காட்சிதருகின்றன. பழைய கம்பர் சிலையின் திருவடிவத்தைக் கண்டு கண்டு பிற்கால ஓவியர் ஒருவரால் வரையப்பெற்ற கம்பர் திருஉருவப்படம் ஒன்றும் கம்பர் மனைவி திருஉருவப்படம் ஒன்றும் திருவழுந்தூரில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மக்கள் வழிபட்டு வருகின்றனர். திருவரங்கத்திலும் திருவழுந்தூரிலும் உள்ள கம்பர் சிலைகளின் கூப்பியகைகளும் நின்ற திருக்கோலங்களும் ஒரு தன்மைத்தாக இருப்பினும், திருவரங்கம் கம்பர் சிலையின் திருமுகம் அச்சந்தரும் வீரன் நிலையிலுள்ளது. திருவழுந்தூர் கம்பர் சிலையின் திருமுகம், அமைதி தரும் அன்பன் வடிவில் உள்ளது. திருவரங்கத்தில் சிலை ஒன்றுதான் உண்டு. திருவழுந்தூரில் கம்பர் சிலையும் வல்லியம்மை சிலையும் என இரண்டுண்டு. அன்றுபோலின்றும் திருவழுந்தூர் கம்பர் தம்பதிச் சிலைகளைத் தம்பதிகள் ஆகுபவரும், ஆகியுள்ளவரும், ஆயினவரும் வழிபட்டுவருகின்றனர். எனவே திருவழுந்தூரில் காட்சிதரும் அவ்விரு சிலைகளே கம்பர் வல்லியம்மையின் இயற்கை வடிவங்களாகும்.

46. கம்பர் சொல்லும் பட்டிமண்டபம்

மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்
அன்னமென் நடையவர் ஆடு மண்டபம்
உன்ன அரும் அருமறை ஒது மண்டபம்
பன்ன அரும் கலைதெரி பட்டி மண்டபம் —பால-நகர-61

இங்ஙனம் ஆயப்பலமண்டபங்களுள் பட்டிமண்டபமும் ஒன்று. ஆராய்வதற்கு அருமையான பல கலைகளில் இன்ன கலையைத்தான் ஆராயவேண்டும் என ஒருவர் ஒரு கலையைத் தேர்ந்தெடுத்து ஆராயும் மண்டபத்தைக்கம்பர் பட்டி மண்டபம் என்கின்றனர். இதைப் பற்றி

பட்டி மண்டபம் ஏற்றினை —திருவா-திருச்சத-49

என்பதில் பட்டி மண்டபம் என்பதற்கு விளக்கமில்லை.

மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக்கொடுத்த பட்டி மண்டபம் —சிலப்-5-101

இதில் பட்டி மண்டபம் என்பதற்கு அடியார்க்கு நல்லார் வித்தியா மண்டபம் ஓலக்க மண்டபம் என உரை எழுதியுள்ளனர். வித்தியா மண்டபம், படிக்கும் மண்டபம், ஓலக்க மண்டபம், அரசன் கொலுவீற்றிருக்கும் மண்டபம் இவை ஒன்றுக்கொன்று வேறுபாடான நிகழ்ச்சிகள் நிகழும் மண்டபங்கள். இவ்வுரையில் தெளிவில்லை. சாத்தனுர் தெளிவாக

ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின் —மணிமே-2-61

என்றதில் சமயவாதிகள் தம்தம் சமயங்களில் உள்ள உறுதிப் பொருள்களை எடுத்துச் சொல்லும் மண்டபத்தைப் பட்டி மண்டபம் என்றனர். கம்பர் கழறிய வண்ணம் கலைகளின் சிறப்பையோ, சாத்தனுர் சாற்றியபடி சமயத்தின் உயர்வையோ, வாதிக்கும் மண்டபம் பட்டிமண்டபம் ஆகும். வரலாற்றுத் தொடக்க முதல் கி. பி. 1ஆம் நூற்றுண்டு வரை இருந்த சங்க காலத்தில் கலைகளுக்கான பட்டி மண்டபம் பற்றிப் புறநானூறு 34இல்

இரத்தி நீடிய அகலத்லை மன்றத்து
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி

என்பதால் "இலந்தை மரத்துப் பொது இடத்தில் இருந்து கொண்டு மொழிப் பயிற்சியும் நூல் பயிற்சியும் செய்தனர்" எனத் தெரிகின்றேம். நூல் பயிற்சியில் கலைப் பயிற்சியும் அடங்கும். கலைப் பயிற்சி செய்யுமிடம் பட்டி மண்டபமாகும்.

சங்க காலத்திற்குப் பின்னர் கம்பர் காலம் வரை 12 நூற்றுண்டுகளில் தோன்றிய நூல்களனைத்தும் சமயங்களை முக்கிய அடிப்படையாகக் கொண்டு தோன்றிய நூல்களேயல்லாமல் கலைகளை முதன்மையாகக் கொண்டு ஒரு நூலும் தோன்றவில்லை. கம்பர் காவியம் ஒன்றே கலைகளின் அடிப்படையாகத் தோன்றிய காவியம் ஆதலின் ''பன்ன அரும் கலை தெரி பட்டி மண்டபம்'' என்றனர். சாத்தனர் சாற்றியபடி பட்டிமண்டபத்தில் சமய வாதம் புரிந்ததாக மணிமேகலையில் ஒரு கதையுமில்லை. மணிமேகலை ஒவ்வொரு சமய வாதியிடம் சென்று அவரவர் சமயங்கேட்டதாக உள்ளது. சைனர் 7-ம் நூற்றுண்டில் சம்பந்தருடன் அனல் வாதம் புனல் திருநீற்று மந்திர வாதம் எனும் வாதங்களைப்பட்டிமண்டபத்தில் செய்து தோற்றுப் போனதால், கழுவுகளில் ஏற்றிக் கொல்லப்பட்டதாக வரலாறுகள் உள. இதனுல் இருவேறு மாறுபட்ட கொள்கையுடையவர் ஓரிடத்திருந்து வாதம் செய்யும் இடத்திற்கு பட்டிமண்டபம் என்றனர்.

இன்றைய கம்பர் விழாப்பட்டி மண்டபங்களில் கம்பர் காவியத்தில் வரும் இரு வேறு மாறுபட்ட தன்மையுள்ளவரைப் பற்றிச் சொற்போர் நிகழ்த்துவதில்லை. கம்பர் காவியத்தில் வரும் ஒரே கொள்கையைப் பற்றி கம்பர் மாறுபட்ட கருத்துக் கொண்டவர் எனச் சொற்போர்கள் நிகழ்கின்றன. எடுத்துக்காட்டாக இராமாயண மையம் அறமா? கற்பா? பக்தியா? என்பன சொற்போரின் தலைப்புக்கள். இவற்றில் கற்பிற்குச் சீதையை மையமாக வைத்துக் கொண்டு பேசுவர். கம்பர் அறம்தான் சிறப்பாகச் சொல்லியிருக்கிருர். மற்றைக் கற்பும் பக்தியும் சிறப்பாகச் சொல்லவில்லை என ஒருவர் சொல்வர். மற்றவரும் அங்ஙனமே ஒன்றைச் சிறப்பாகவும் மற்றவற்றைத் தாழ்வாகவும் பேசுவர். இராமாயணத்தின் மையம் அறம்தான் எனத் தீர்ப்புக் கூறுகின்றனர். இது அறத்தைப் பற்றி ஆய்ந்து அறியாத பேச்சும் தீர்ப்பும் ஆகும். இது ஒன்றே அறம் மற்றவை அல்ல எனச் சொல்லக்கூடிய தன்மையில் அறத்தை ஆன்ருேர் அமைக்கவில்லை. திருவள்ளுவனுர் அறம் என்பதைப் பல பகுதிகளாகப் பகுத்து அறததுப் பால் எனப் பெயர் வைத்து அறத்தை 38 பால்களாகப் பகுத்திருக்கின்றனர். அவ்வறத்துப் பாலுள் இல்லறம், வாழ்க்கைத் துணை நலம் என்பனவற்றில் கற்பு என்பதும் அன்பு என்பதில் பக்தியும் அடங்கும்.

கம்பர் காவியத்தில் சிறப்பாகச் சொல்லப் பெறுவது அன்பா? அழகா? அறமா? என்னும் தலைப்புக்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை உயர்த்தியும்மற்றையிரண்டைத் தாழ்வாகவும் பேசும்பொழுது ஸ்ரீ ராமனையே எடுத்துக்காட்டாகக் காட்டிவர். இவற்றிற்கு நடுவணர் ஸ்ரீ ராமன் அன்பு, அறம் என்னும் இரண்டினுள் அழகே மிக்குள்ளவன் எனத் தீர்ப்புக் கூறுகின்றனர். இதிலும் அறம் என்பதின் ஒரு பாலே அன்பு. எனவே அறம் என்பதில் அன்பும் அடங்கும். அழகு என்பது ஸ்ரீ இராமனின் உடல் தோற்றத்தின் அழகு.

இத்தகைய பட்டி மண்டபச் சொற்போர்களைக் கேட்பவர் ஸ்ரீ இராமன் அன்பில் சிறந்தவன் அல்லன்; அறத்தில் சிறந்தவன் அல்லன்; அழகில்தான் சிறந்தவன் எனக் கம்பர் சொல்லியிருக்கிறார் என எண்ணங்கொள்கின்றனர். அவ்வாறே கம்பர் கற்பு மையமாகக் கொள்ளவில்லை. பக்தி மையமாகக் கொள்ளவில்லை. அறத்தைத்தான் மையமாகக் கொண்டனர் என முடிவு கொள்கின்றனர்.

இங்ஙனம் ஒரு முறை இராமன் அறத்தின் தலைவன் எனப்போற்றுவதும், ஒருமுறை இராமன் அறத்தின் தலைவன் அல்லன் எனத் தூற்றுவதும், அங்ஙனமே சீதைதைக் கற்பின் தெய்வம் என ஒரு முறை போற்றுவதும், சீதையைக் கற்பின் தெய்வம் அல்லள் என ஒருமுறை தூற்றுவதும், இவ்வாறே கம்பர் காவியத்தின் மற்றைய பாத்திரங்களைப் போற்றுவதும், தூற்றுவதும் ஆனபட்டி மண்டபச் சொற்பொழிவுகள், கம்பர் காவியப் பெருமையை உயர்த்துவது போலத் தாழ்த்துவதாகும்.

கம்பர் விழா நடத்துவோர் சாத்தனர் சாற்றிய சமயப் போர்ப்பட்டி மண்டபங்களைப் பற்ருமல் கம்பர் கழுறிய பல வகைக்கலைகளை ஆராய்ந்து தெரிந்து சொல்லும் பட்டி மண்டபங்களைப் பற்றல் வேண்டும். கம்பர் காவியத்தில் கலைகளை எவ்வெவ்வாறு எங்கெங்கு எவ்வெப்பாத்திரங்களில் அமைத்திருக்கிருர் என்பதைத் தெளிந்து தேர்ந்து மக்கள் மனதில் பதியும் வண்ணம் பட்டி மண்டபங்கள் அமைத்தல் வேண்டும். கம்பர் காவியப் பெருமையும், காவியப்பாத்திரங்களின் மேல் மக்கள் வைத்திருக்கும் எண்ணங்களும் குறையாமல் உயரும் வகையில் கம்பர் விழாப்பட்டிமண்டபங்கள் தோன்றல் வேண்டும்.

47. கம்பர் வைணவர் விசிட்டாத்துவைதியர்

1-மூவரில் முதல்வன்

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

ஆதி அந்தம் அரிஎன யாவையும்
ஓதி னாரல கில்லன உள்ளன
வேதம் என்பன மெய்ந்நெறி நன்மையன்
பாதம் அல்லது பற்றிலர் பற்றிலார்.

கம்பர் இராமகாதைக் காவியம் பாடுவதற்கு முதல் முதல் இயறறிய காப்புச் செய்யுள் முறையே இவ்விரண்டும் ஆகும். அவற்றுள் முதல் செய்யுளில் கடவுளைப்பற்றிய பெயர், தன்மை, உருவங்களைச் சேக்கிழாரைப்போல ''அம்பலத்தாடுவான்'' என்றோ, ஞானசம்பந்தரைப் போலத் ''தோடுடையசெவியன்'' என்றோ சொல்லாமையால் கம்பர் வைணவருமல்லர், சைவருமல்லர்; இரண்டிற்கும் பொதுவர் என்பர். நமது பரமாசாரியரான நம்மாழ்வார் முதல் பாசுரத்தில்

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்.
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

எனப்பரம்பொருளின் சிறப்புத் தன்மையைச் சொல்லிமற்றைய பாசுரங்களில் சிறப்புத்தன்மைப் பரம்பொருளின் பெயரும் வடிவமும் சொல்வதைப் போலக் கம்பரும் முதல் பாட்டில் பரம்பொருளின் சிறப்புத் தன்மையைச் சொல்லி இரண்டாம் பாட்டில் அச்சிறப்புப் பரம்பொருளின் பெயர் அரி என்பதினால் மகாவிஷ்ணுவின் பெயரும் உருவமும் செயலும் சொல்லினர். மேலும் ''உலகம் உளவாக்கல்'' என்பதால் உலகத்தை உண்டாக்கும் 'அயனும்' ''உலகம் நிலை பெறுத்தல்'' என்பதால் உலகத்தைக் காக்கும் ''அரியும்'' 'உலகம் நீக்கல்'' என்பதினால் ''உலகத்தை அழிக்கும் அரனும்'' என முத்தொழில் செய்யும் முத்தேவரும் அரிஎன்னும் மகாவிஷ்ணுவே என உறுதிப்படுத்தினர்.

2. அவதாரம்

திரு நாராயணனைப் பரம்பொருளாகக் கொண்ட திரு வைணவசமயத்தில் அப்பரம்பொருள் ''பரத்துவம், விபவம், வியூகம், அந்தரியாமி, அர்ச்சை'' என்னும் ஐந்து நிலைகளை யுடையவன் என்பர். அவற்றுள் ''விபவம்'' என்பது அப் பரம்பொருள் இவ்வுலகில் வந்து இச்சையால் பிறத்தல் என்பதாம். அங்ஙனம் பிறத்தலை ''அவதாரம்'' என்பர். இங் ஙனம் பத்து அவதாரங்களைப் பரம்பொருளாம் திருமால் எடுத்தனன் என்பர். அவற்றுள் இராமாவதாரமும் ஒன்று. அப்பத்தின் நடுவில் உள்ளதால் இராமாவதாரத்தை இடை நிகழ்ந்த அவதாரம் என்பர்.கம்பரும் அவ்வாறே பாயிரத்தில்

நடையில் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமவதாரர்

என்கின்றனர். இங்ஙனம் பரம்பொருளான கடவுள் இவ் வுலகில் வந்து பிறக்கும் அவதாரங்கள் சைவர்க்குடன் பாடல்ல. இதனைச்செவ்வனே தெளிந்த கம்பர் பிணிவீட்டுப் படலம்–75இல்

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மூர்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்

எனச் சொல்வதால் திரிமூர்த்தி வடிவமாய்ப் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களை நடத்துகின்ற உலகுக் கெல்லாம் காரணமான கடவுளே, அத்திரிமூர்த்தி வடிவங் களில் கைக்கொள்ளுகின்ற சூலம் முதலியவற்றைக் கைவிட்டு கைவில்லேந்தி, அம்மும்மூர்த்திகட்கு உரிய இடமாகின்ற ஆலிலை முதலியவற்றை விட்டு, அயோத்தியில் வந்து அவ தரித்தனன். மேலும் முழுமுதற் கடவுளின் ஒவ்வோரமிச மான சிவன், திருமால், பிரமன் என்ற மூர்த்திகள் போலன்றி இராமபிரான் அக்கடவுளின் முழு அமிசம் எனக் கூறியவாறுயிற்று என இன்றைய உரையாசிரியர் தெளிவு செய்தனர்.

ஆரிய சமயத்தின் எல்லாப் பிரிவினரும் பகவன் கீதையை ஒப்புக்கொள்கின்றனர். ஆரியரின் புராண ஆக மங்களை ஒப்புக்கொள்ளும் சைவர் பகவன் கீதையை மட்டும்

ஒப்புக்கொள்வதில்லை. வைணவர் பகவன் கீதையைத் தமது வைணவ சித்தாந்த நூலாக ஒப்புக் கொள்கின்றனர்.பகவன் கீதையின்

பரித்ராணுய சாதுநாம் விநாசயஸ துஷ்கிருதாம்
தர்மஸ்தாப ஞர்த்தாய சம்பவாமி யுகே யுகே -அத்-4-சு-9

எனும் சுலோகத்தின் மொழிபெயர்ப்பும் விளக்கமும் ஆக

அறம்நிலை நிறுத்திவேதம் அருள்சுரந் தரைந்த நீதித்
திறம்தெரிந் துலகம்பூணச் செந்நெறிசெலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேக ஈண்டுப்
பிறந்தனன் தன்பொன் பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்

எனப் பிணிவீட்டு–76இல் சொல்வதால் கடவுள் அவதாரம் எடுப்பதில்லை எனும் சைவ சித்தாந்தக் கொள்கையை மறுத்து கடவுள் அவதாரம் செய்வார் என்னும் வைணவ சித்தாந்தக் கொள்கையை நிலைநாட்டிய ஆசாரிய புருடர் கம்பர் ஆவார்.

3. சிவன் சாபம் தீர்த்தவன்

பிருமனது தலையைச் சிவன் கிள்ளியெடுக்கவும், அத் தலை பிருமானது சாபத்தால் கையில் ஒட்டிக்கொண்டதால் அதைச் சிவனாலும், மற்ற எவராலும் நீக்க முடியாமல் போகவே, மகாவிஷ்ணு அத்தலை ஓட்டில் சிறிது பிச்சை போடவே, அத்தலையோடு சிவன் கையிலிருந்து நீங்கிவிட்டது. இதனல் சிவன் பரம்பொருளா? விஷ்ணு பரம் பொருளா? என்னும் ஐயம்நீங்கி விஷ்ணுதான் பரம்பொருள் எனத் தீர்மானித்துவிட்டனர். இதனை

பெய்யைத்தான் சிறிதுணர்ந்து நிவித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறையுண்டோ
வையத்தார் வானத்தார் மாமாவளிக் கன்றளித்த
ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாரும் உளர்; ஐய!-விராத 58

என்பதால் சிவன் பரம்பொருளல்ல; விஷ்ணுதான் பரம் பொருள் எனச் சித்தாந்தம் செய்தனர்.

4. திருமந்திரம் திருநாமம்

பரம்பொருளாம் மகாவிஷ்ணுவின் பெரும்பதமாம் திருவைகுந்தம் அடைவதற்குச் சொல்லும் நாமங்கள் ஆயி

ரத்தில் 2 நாமங்களை மந்திரங்களாகத் தாரகம் என்றும், அட்டாட்சரம் என்றும் சொல்வர். அவற்றுள் "ராமா" என்பது தாரகம்; ஓம் நமோ நாராயணாய என்பது அட்டாட்சரம். தாரகமந்திரம் "ராம" என்பதும், அம்மந்திரம் தரும்பயன் இன்னதென்பதும் செவ்வனே தெளிந்து கம்பர்

மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக்கண்டான்.

எனவாலிவதை 77இல் தாரகமாம் இராமநாமத்தின் பெருமையைச் சொல்லி முடிவில், பெரும்பதமாம் பரமபதமும் நல்கும் என்றனர். இங்ஙனமே அட்டாட்சர மந்திரத்தை

ஓம் நமோ நாராயணாய நம —இரணியன்வ-23

என்று உரைத்து இம்மந்திரம்

வேதத்துச்சியின் மெய்ப்பொருள் —இரணியன்வ-22

என்கிறார். "ஓம் நமோ நாராயணாய நம" என்னும் அட்டாட்சர மந்திரப்பொருளாவது:— "அகார அர்த்தமான திருமாலுக்கு உரிய ஞானவடிவ ஆன்மாவாகிய நான் நாராயணனுக்கே எல்லா அடிமையும் செய்யப்பெறுவேன் ஆக" என்பதாம். ஓம் என்பதை அ.உ.ம் எனப்பிரித்து அகரம் திருமாலும், ம்-ஆன்மாவும் என்பர். நாராயணாய நம என்பதற்கு நாராயணனுக்கு அடிமை கைங்கரியம் செய்பவன் என்பர்

அட்டாட்சரம் மந்திரம் சொல்லிய பிரகலாதனை அம்மந்திரம் சொல்லவேண்டாம் என இரணியன் சொல்லியும் பிரகலாதன் கேட்காமல் சொன்னதற்காக இரணியன் பிரகலாதனுக்குக் கொடிய கொடிய துன்பங்களைச் செய்தான். அவற்றுள் ஒன்று பிரகலாதனைக் கல்லால் சட்டிக் கடலில் போடச் செய்தது. அப்பொழுது பிரகலாதன்

நடுவொக் குர்தனி நாயகன் நாமம்
விடுகிற் கின்றிலன் ஆகலின் வேலை
மடுவொத் தங்கதின் வங்கமும் அன்றாய்
குடுவைத் தன்மைய தாயது குன்றம்—இரணியன்-101

எனப் பிரகலாதன் நடுநிலைமையுள்ள ஒப்பற்ற தனிநாயகன் நாமம் ஆகிய ஓம் நமோ நாராயணுய என்னும் எட்டெழுத்து மந்திரத்தைச் செபிக்கவும், அக்கல் சுரைக் குடுவைப் போல மிதந்து பிரகலாதனைக் கரைக்குக்கொண்டு வந்து சேர்த்தது. அவ்வாறே பல்லவ அரசன் சைனர்களுக்காகக் கல்லில் கட்டிக் கடலில் போடச் செய்தனன். அப்பொழுது

சொல்துணை வேதியன் சோதி வானவன்
பொன்துணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கல்துணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நல்துணையாவது நமச்சி வாயவே --நமச்சிவாயப்பதிகம்

எனப் பாடவும் க்ல் கடலில் ஆழ்த்தாமல் திருநாவுக்கரசரை கரையில் கொண்டுவந்து சேர்த்தது. கம்பரினும் திருநாவுக் கரசர் 3 நூற்றுண்டுகளுக்கு முந்தினவர். இதைக் கம்பர் அறிவர். திருநாவுக்கரசர் "நமச்சிவாய" என்பதால் எங் ஙனம் சைவர் ஆவாரோ அங்ஙனமே கம்பர் ''ஓம் நமோ நாராயண'' என்பதால் வைணவர் ஆவார். திருநாவுக்கரசர் சைன சமயத்திற்குரிய ''பாய், குண்டிகை, மயில்பீலி'' இன் னும்புறச்சின்னங்களை நீக்கிவிட்டுச் சைவசமயத்திற்குரிய 'நீறு அணிந்து தொண்டு செய்வதற்காக அலகும் தோண்டியும்' கொண்டனர். இங்ஙனமான திருநாவுக்கரசர் தரும சேணர் என்னும் பெயருடன் சைன சமயத்திலிருந்து சைவ சமயத் திற்கு வரும்பொழுது சைனருடன் சைவ சமயந்தான் சைன சமயத்தினும் மேலானது என வாதம் செய்து சைனரை வென்று சைவ சமயத்திற்கு வரவில்லை. தரும சேனரைச் சைவ சமயத்தில் சேர்ப்பதற்காகப் பரமசிவன் தருமசேனன் வயிற்றிலே நோயுண்டாக்கினன். அந்நோய் சைனர்களால் தீர்க்க முடியாமல் போகவே ''திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக் கொடுக்கவும்" அச்சூலை நோய் நீங்கிச் சைவர் ஆயினர் எனப் பெரிய புராணத்திலுள்ளது.

5 மூலகாரணன்

உலகத்திற்கு மூலகாரணமான பரம்பொருள் யார் என் னும் சொற்போரில், இரணியன் நான்தான் பரம்பொருள் என்று சொல்லவும் பிரகலாதன், 'இரணியனே! நீ பரம் பொருள் அன்று. உன்னைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேலாகப் பரம்பொருள் ஒன்று உள்ளது' எனப் பல

காரணங்கள் சொல்லினன். முடிவில் சத்தியம் செய்து சொன்னதாவது:-

"மூன்று அவன் குணங்கள்: செய்கை மூன்று:
அவன் உருவம் மூன்று
மூன்று கண்: சுடர்கொள் சோதி மூன்று: அவன் உலகம் மூன்று
தோன்றலு இடையும் ஈறும் தொடங்கிய பொருட்கட்கு எல்லாம்
சான்று அவன்: இதுவே வேத முடிவு: இது சரதம்" என்ருன்.
- இரணி 122

இதனுல் பிரகலாதன் பரதத்துவ நிருணயம் செய்வதற்காக நேர்ந்த பல துன்பங்களையும் வென்று பரதத்துவம் நாராயணனே என நிருணயம்செய்தான் என்பது தெரிகின்ரேம் வாலி பரமசிவனைக்குறித்துத் தவம் செய்து வரங்களைப்பெற்றவன். சிவனே பரம்பொருள் என்பவன். அவ்வாலி இறுதியில் இராமபிரானைப் பார்த்துச் சொன்னதாவது:-

ஏவுகூர் வாளியால் எய்துநாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவுதந் தருளினுய்
மூவர்நீ முதல்வன்நீ முற்றும்நீ மற்றும்நீ
பாவம்நீ தருமம்நீ பகையும்நீ உறவும்நீ—வாலிவ-127.

என்பதாம். இராவணன் பெரும் சிவபக்தன்; சிவனைக் குறித்துப் பல கடும்தவங்கள் செய்து வரங்களும், ஆயுதங்களும் பெற்றவன். அவற்றுள் ஒன்று வேலாயுதம். அதை எப்பேர்ப்பட்டவன் பேரில் விடினும் அவன் இறந்து போவான் எனச்சிவன் வரங்கொடுத்துக் கொடுத்தனன். அவ்வேலை இராமன் மேல் விட்டான். இராமபிரான் அதை எதிர்த்து அம்பெய்யாமல் மார்பைக்காட்டி நின்றனன். மார்பின் பக்கம் வேல்வரவும் உம்ம்ம்ம் என்றனன். வேல் முறிந்து உதிர்ந்து விட்டது. இதை

சங்கா ரத்தார் கண்டை ஒலிப்பத் தழல்சிந்தப்
பொங்கா ரத்தான் மார்பெதிர் ஓடிப் புகலோடும்
வெங்கா ரத்தான் முற்றும் முனிந்தான்: வெகுளிப்போர்
உங்கா ரத்தால் உக்கது பல்நூ றுதிராகி —இராவ-வதை-132

என்றனர். இங்ஙனம் உங்காரத்தால் பொடியாகி உதிர்ந்து விழுந்ததைக் கண்ட இராவணன்.

சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னில் செய்து முடிக்கும் தரமல்லன்;
இவனோ தான்அவ் வேத முதல்காரணன் என்றான். —டை 135

எனப்போற்றினன். இவ்விரு சைவபத்தர்களும் வாழ்நாள் முழுவதும் சைவபத்தர்களாகவே யிருந்து, சிவனால் வரங்களைப் பெற்றுப் பயன்களை நுகர்ந்து வந்து, இறுதியில் தத்துவஞானம் உண்டாக்கிச் சிவனுக்கும் மேலான பரம்பொருள் திருநாராயணனும் திருமால் என்றும், அத்திருமாலின் இச்சைப்பால் எடுத்துக்கொண்டதே இராமாவதாரம் என்றும் தெளிந்து சொல்லினர்.

6. அறியாதாருக்கறிவித்தல்

இவ்வுண்மையை அறியாதார் அரனதிகன் உலகளந்த அரிஅதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்குப் பரகதி சென்றடைவரிய கிட்கிந்தா-நாடவிட்ட-24 என்பதைக் காட்டிக்கம்பர் சைவரும் அல்லர்; வைணவரும் அல்லர்; சமரசம் கொண்டவர் என்பர். ஏன்? கம்பரை வைணவர் அல்லர் எனச் சொல்லல் வேண்டும் எனும் தம்எண்ணத்திற்குச்சிறு ஆதரவும் கம்பர் காவியத்தில் கிடைக்காமையால் இப்பாடல் ஒன்றைக்கொண்டு கம்பர் வைணவசமயத்தவர் அல்லர்; சமரச சமயத்தவர் என்பர். ஆம்; சமரசர் தான். எல்லாக்கடவுளருக்கும் மேலாகப் பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான் உண்டு. அப்பரம்பொருளே அயனென, அரி என, அரன்என மூன்று வடிவங்களைக் கொண்டு உலகத்தைப்படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களைச் செய்கின்றான் எனும் சமரசத்தை முதலிலே காப்பாகச் சொல்லினர். பின்னர்,

கல்லிடைப் பிறந்து போந்துகட லிடைக்கலந்த நீத்தம்
எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையின் ஒன்றேயாகித் துறைதோறும் பரந்தசூழ்ச்சி
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்ததன்றே

என்பதில். மலையில் பிறந்த ஆறு பலகால்வாய்களாகப் பிரிந்து பின்னர், அக்கால்வாய்கள் கடலில் கலக்கின்றன. அதைப்போல் ஒன்றாயிருந்த பரம்பொருள் பலசமயத்தான் சொல்லும் பல வடிவங்களைப் பெறினும், அவ்வடிவங்கள்

அனைத்தும் ஒரே மூர்த்தியின் வடிவங்களாக உள்ளன என்றனர். மேலும், இராமபிரானே பரம்பொருளாகவும், அப்பிரானின் தோள், தாள், கை, என்னும் உறுப்புக்களைச் சமயங்களாகவும், தோள், தாள், கை, உறுப்புக்களின் அழகைக் கண்டவர், அவ்வுறுப்பழகையே கண்டு, கண்டு அவ்வோருறுப்பையே பார்த்துப் பார்த்து மகிழ்கின்றனர். ஒருவரும் இராமபிரானின் முழுஅழகையும் கண்டு மகிழ்வதில்லை. அதைப்போல எச்ச சமயத்தவரும் அவ்வச்சமயம் பெரிது பெரிது என்கின்றனரேயன்றிப் பரம்பொருளின் முழுத்தத்துவத்தைக்கண்டு சொல்வதில்லை. இதை

தோள்கண்டார் தோளே கண்டார்; தொடுகழல் கமலம்அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்; தடக்கை கண்டாரும் அஃதே
வாள்கொண்ட விழியார் யாரேவடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னுன் உருவுகண் டாரைஒத்தார்.

—உலாவி-19

என்கின்றார். இங்ஙனம் பல இடங்களில் சொல்லிக்கொண்டே வந்து இறுதியில் நான்முகன் நன்காராய்ந்து நவில்வதாக.

என்னுருக்கொ டிவ்வுலகினை ஈனுதி; இடையே
உன்னுருக்கொடு புகுந்துநின் றோம்புதி; உமையோன்
தன்னுருக்கொடு துடைத்தி; மற்றிதுதனி அருக்கன்
முன்னுருக்கொடு பகல்செய்யும் தரத்தது முதலோய் -மீட்சி-109

என்கின்றனர். சூரியன் உலகிற்கு ஒளிவேண்டும் என்பதற்காகக் காலையில் தோன்றி ஒளியையுண்டாக்குகிறான். பகல் முழுவதும் இருந்து ஒளியால் உலகைக்காக்கிறான். மாலையில் மறைந்து ஒளியை அழிக்கிறான். அதைப்போல மும்மூர்த்தி வடிவம் ஆயபரம்பொருள் பிருமனுக்கு அந்தராத்துமாவாய் நின்று உலகின் தோற்றத்தையும், திருமால் ஆகிய தானான நிலையில் நின்று உலகத்தின் காப்பையும், சிவனுக்கு அந்தராத்துமாவாய் இருந்து உலகத்தின் அழிவையும் செய்கிறான்.

செந்தமிழ் அருட்செம்மல் P. S. G. G. கோவிந்தசாமி நாயுடு "அரனதிகன் உலகளந்த அரியதிகன்" என்பதற்குக் கூறும் விளக்கஉரையாவது:-

"பரம்பொருள் தன்னிச்சையால் கொள்ளும் பலப் பல வடிவங்களுக்குப் பலப்பல சமயத்தார் பலப்பல பெயர்களைச் சொல்லுகின்றனர். அவற்றுள் அரி, அரன் என்ற பெயர்களும் அப்பெயர்களின் வடிவங்களுமே சிறப்புடையன. அவையே வைணவம் சைவம் எனும் சமயங்களின் மூர்த்திகளாகவும் உள்ளன. அப்பரம்பொருளின் வடிவங்களான மூர்த்திகளில் இம்மூர்த்தி அதிகப் பெருமையுடையவன், அம் மூர்த்தி அதிகப் பெருமையுடையவன் என்று சொல்பவர் அறிவில்லாதவர்; பரகதியடையமாட்டார் எனக்கம்பர் சமரசத்தைச் சாற்றுகிறார். ஆனால், இச்சமரசத்தில் ஓர் உண்மை உணர்தல் வேண்டும். என்னை? அரி, அரன் இரண்டும் பரம்பொருளின் வடிவங்கள். அவற்றுள் பரம்பொருள் தன்னிச்சையாகக் கொண்ட வடிவம் அரிவடிவம்; பரம்பொருள் ஓர் ஆத்துமாவில் தன்னந்தராத்துமாவின் ஆற்றலைச் செலுத்திக்கொண்ட வடிவம் அரன் வடிவம். இவ்வுண்மையை இருசமயத்தவரும் உணர்தல் வேண்டும். அவருள்ளும் அரன்சமயத்தவர் ஆர அறிதல்வேண்டும். எங்ஙனம்? அரன் என்பதற்கு அடைமொழியில்லை. அரி என்பதற்கு "உலகு அளந்த" என்னும் அடைமொழியுண்டு. பரம்பொருள் கொண்ட திரிவிக்கிரமாவதாரத்தில் பிரமஉலகம் உள்பட எல்லாஉலகங்களையும் தனது திருவடிக்கீழ்ப்படுத்துக் கொண்ட சிறப்பையும், சிவன் தனது சிரம்மேல் கொள்ளுமாறு, திருவடியிருந்து கங்கையைப் பயந்த மேன்மையையும், "உலகு அளந்த" என்னும் அடைமொழியில் அறிகின்றோம். இங்ஙனமான அடைமொழி ஒன்றும் "அரனுக்குக்" கொடுத்துக்கூறாததால். உலகளந்த அரியே பரம்பொருள் எனத்தனது முடிவைக் கம்பர் கட்டுரைத்தனர். இங்ஙனமான உண்மைகளை உளமார உணர்ந்தவர் சமயச்சொற்போரோ, கைப்போரோ செய்யமாட்டார் என்பதே கம்பர் கண்ட சமயசமரசமாகும். அரனதிகன் என்பதை அரன் அதிகன் என்றும், அரன் நதிகன் என்றும்பிரிக்கலாம். இவற்றில் அரன் நதிகன் என்று பிரித்து. அரன் தலையியே நதியுள்ளவன் ஆயினன். எதனாலென்னில் அரி உலகளந்தால். எனவே அரிதான் அதிகன் என வீரவைணவர் பொருள் கூறுவர்" என்பதாம்

கம்பர் காலம் 12-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஆரிய சமயப்பிரிவினரான சைவரும், வைணவரும் ஒருங்கே

தோளோடு தோள் கோத்துப் புத்தமதத்தைத் தமிழ்நாட்டில் இல்லாமல் செய்து விட்டனர். சைன சமயத்தைத் தொண்டை மண்டல ஆர்க்காட்டு மூலைக்குத் தள்ளிவிட்ட னர். பின்னர் சைவ வைணவத் தனியரசே, தமிழ்நாட்டை ஆளத்தொடங்கிய பொழுது வைணவத் தனியரசாள்வதா? சைவத்தனியரசாள்வதா? என்ற வேறுபாடு தோன்றவே, இவ்விருசமயங்களும் ஒன்று சேரமுடியாமல் தனித் தனியரசு களாகிச் சொற்போர் செய்து கொண்டே அரசாண்டு வந் தன. கவியரசர் கம்பர்பெருமான் இவ்விருசமயச் சொற் போர்களின் காரணங்களைச் செவ்வனே தெரிந்தனர்; அவற் றின் விளைவுகளைக் கருத்துறக் கண்டனர். அதனால் சிவன் பெரியவனா? திருமால் பெரியவனா? எனும் புராணப் புனை கதைகளின் ஆராய்ச்சியில் கம்பர் செல்லவில்லை. இச்சிவன் திருமால் இருவருக்கும் ஆதியான பரம்பொருள் ஒன்றுண் டென்பதும், அப்பரம்பொருளே இவ்விருவருடன் அயனும் ஆனமும் மூர்த்திவடிவம் கொண்டு உலகைப்படைத்தல் காத்தல் அழித்தல் செய்கின்றான் என்னும் உண்மைத் தத் துவப் பொருளை ஆராய்ந்து முடிவு கொண்டு

காலையில் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையில் மலர்புரை சமய வாதியர்
சூலையின் திருக்கலால் சொல்லு வோர்க்கெலாம்
வேலையும் திரையும்போல் வேறு பாடிலான்—இரணிய-77

என்றனர். கடலில் அலைகள் பொங்கி எழுந்து காணப்படி னும் அவை அக்கடலிலே அடங்குதல்போல, அவ்வச்சமய வாதியர் செல்வன எல்லாம் அப்பரம்பொருளிலே அடங்கும் ஒரு மாலையில் பலவித மலர்கள் அமைதல் போல ஒரு பரம் பொருளிடத்துப் பல சமயங்கள் அமைகின்றன. அதனால் எவரும் மாலையின், மலர்களைக்கண்டு எம்மலர் உயர்ந்தது எம்மலர் தாழ்ந்தது என்னும் சொற்போர் செய்து கொண் டிராமல், மாலையின் அழகைக்கண்டு மகிழ்தல் போலப் பரம் பொருளின் வடிவங்களான திருமாலையும் சிவனையும் கண்டு கண்டு மகிழ்ந்து மகிழ்ந்து இவ்விருவுருவங்களுக்கும் மூல காரணமான பரம்பொருளின் தத்துவத்தை ஆராய்ந்து கண்டு கொண்ட மனஅமைதியில் மகிழ்தல் வேண்டும்; அமைதியே கம்பர் கண்ட சமரசம்; அதுவே உலக சமரசம்.

7. விசிட்டாத்துவைதம்

பலப்பல சமயத்தார் பலப்பல வடிவப் பெயர்களில் சொல்லும் மூர்த்திகளுக்கு மேலாக ஓர் பரம்பொருள் உள்ளதை,

ஆதிப் பிரமனும்நீ ஆதிப் பரமனும்நீ
ஆதிஎனும் பொருளுக் கப்பால் உண்டாகிலும்நீ
சோதிநீ சோதிச் சுடர்பிழம்பும் நீஎன்று
வேதம் உரைசெய்தால் வெள்காரே வேறுள்ளார்—கவந்த-43

என்பதால், புராணங்கள் புகலும் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான பரம்பொருளாம் கடவுள் திருநாராயணனே என வேதங்கள் சான்றுகச் சொல்லிக் கம்பர் பரத்துவ நிருணயம் செய்தனர். மேலும் அப்பரம்பொருளைப் பற்றி

உலகுதந் தானும்பல்வே றுயிர்கள் தந்தானும் உள்ளுற்று
உலைவிலா உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின்றானும்
மலரினில் மணமும் எள்ளில் எண்ணெயும் போலஎங்கும்
அலகில்பல் பொருளும் பற்றிமுற்றிய அரிகாண் அந்தா
—இரணி-120

என்றனர். பரம்பொருளின் இச்சைவடிவம் ஆன அரியையே பரம்பொருள் என்றனர். அப்பரம்பொருள் மலரில் மணம் போலவும், எள்ளில் எண்ணெய் போலவும், உலகினுள்ளும் உலகிலுள்ள உயிர்களின் உள்ளும் இரண்டறக் கலந்திருக்கிறான். உலகுதந்தான் என்றதில் "ஆன்" என்னும் விகுதி ஆண் பாலை மட்டும் குறிக்கும்; பெண்பாலைக் குறிக்காது ஆண்பாலால் மட்டும் எங்ஙனம் மக்களைப் பெறமுடியாதோ, அங்ஙனமே ஆண்பாலாம் அரியால் மட்டும் உலகைத்தர முடியாது. பெண் பாலும் வேண்டும் அதைப் பற்றி

செந்தா மரைப் பொகுட்டில் சேர்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை நறுந்தாழ் இளங்கொழுந்தை
முந்தா உலகும் உயிரும் முறைமுறையே
தந்தானை நோக்கினன் தன்னெப்பொன் றில்லாதான்
—இரணி-164

என்றனர். இதனால், உலகிற்கு மூலகாரணமான பரம்பொருள் ஆண்கூறும் பெண்கூறும்ஆன இரு கூறுகளும் ஒன்றுகிப் பிரிக்க முடியாமலுள்ள பரம்பொருள் என்பது

தெளிவாம். உலகிற்கு முதற்காரணமான மூலப்பிரகிருதியிலிருந்து உலகத்தை உண்டாக்குகின்றுன். அவ்வுலகத்தில் உயிர்களின் வினைகளுக்குத் தக்கவண்ணம் பிறவிகளைக் கொடுக்கிறுன். அவ்வுலகு உயிர்களுள் நீக்கமற நிறைந்திருக்கின்றுன் பரம்பொருள் திருநாராயணன்.

தன்னுளே உலகங்கள் எவையும் தந்தவை
தன்னுளே நின்றுதான் அவற்றுள் தங்குவான்
பின்னிலன் முன்னிலன் ஒருவன் பேர்கிலன்
தொன்னிலை ஒருவரால் துணியல் பாலதோ—இரணி–198

என்பதினுல் உலகத்திற்கு முதற்காரணமான கடவுள் திருநாராயணன். உலகங்கள் எல்லாவற்றையும் தன்னுள்ளேயிருந்து உண்டாக்கி, அவ்வுலகங்களில் இராமன் கிருஷ்ணன் என்னும் அவதாரங்கள் ஆகத்தங்கியும், அவ்வுலக உயிர்களில் அந்தரியாமியாகத் தங்கியும், எக்காலங்களிலும் இருப்பவன். அதனுல், பரம்பொருள், உலகம், உயிர் என்னும் மூன்று தத்துவங்கள் பெறப்பட்டன. அம்மூன்றுதத்துவங்களையும் சித்து, அசித்து, ஈசுவரன் என்பர்: சித்து=அறிவாம் உயிர். அசித்து=அறிவில்லாத சடப்பொருள். ஈசுவரன்=இவற்றை நியமிக்கும் கடவுள். இம்மூன்று தத்துவங்களும் வெவ்வேறு தன்மையுள்ளனவாயினும், ஒன்றைவிட்டொன்று பிரியாமல் ஒன்ருகவே இருக்கும் தன்மையுள்ளன. இதனுல், சித்து அசித்து ஈசுவரன் எனஈற்றில் அன் எனும் ஒருமை விகுதி கொடுத்து முடித்தனர். வெவ்வேருன தன்மையுள்ள இம்மூன்று தத்துவங்களும், ஒன்று கூடிப்பிரிந்து போகும் தன்மை உள்ளனவாய் இருந்திருப்பின் ஈசுவரன் என அன்விகுதி கொடுத்துக் கூறமாட்டார். முப்பொருள் எனச்சொல்லியிருப்பர். அம்முப்பொருளைப் பற்றிய சமயங்கள் மூதுலகில் மூன்ருக உள்ளன. அவை, அத்துவைதம், துவைதம், விசிட்டாதுவைதம் என்பன.

1. அத்துவைதம் அதில் துவைதம் என்பது உலகு, உயிர் என்னும் இரண்டு. அ. என்பது அன்மை, அத்துவைதம் என்பது உலகு உயிர் என்னும் இரண்டும் அல்லாத ஒன்று. இவ்வொன்றே பரம்பொருள். அது இவ்வுலக சம்பந்தமான ஒரு குணமும் இன்மையால், நிர்க்குணம் என்பர்; ஞானவடிவம் என்பர் நிர்க்குணமான ஞானவடிவப்

பரம்பொருளிலிருந்து, உலகும் உயிரும் தோன்றியது மாயையாகிய அஞ்ஞானத்தினுல் என்பர். கயிற்றைப் பாம்பெனும் அஞ்ஞானம் போல நிர்குணமான பிருமத்தினிடமிருந்து சகுனமான உலகும் உயிரும் தோன்றியது எனல் அஞ்ஞானமாகும்: மாயையாகும் என்பர். இங்ஙனம் அஞ்ஞானம் மாயைநீங்கி உலகும் உயிரும் அல்லாத பிருமம்ஒன்றேயென மெய்ஞ்ஞானத்தால் உணர்தல்வேண்டும். இவ்வுலகு குணங்களேயில்லாததினுல், நிர்குணமான பிருமத்திற்குஇவ்வுலக குணங்கள் உண்டாகச் சகுணம் ஆயிற்று என்பதும், மாயையாம் இவ்வுலகு ஞானமே இல்லாத பிருமமேகற்பனை செய்யப் பெற்ற அஞ்ஞான மாயையால், உலகும் உயிரும் ஆகித் தோன்றுகின்றது என்பதும் மாயை நீங்கினுல் உயிர்கள் பிறப்பற்று அப்பிருமத்தோடு இரண்டறக் கலப்பதுவே மோட்சம் என்பதும் அத்துவைதம் ஆகும். நிர்குணமான பிருமம் சகுணம் ஆயிற்றென்பதும் மெய்ஞ்ஞானமான பிருமம் அஞ்ஞானமாயிற்றென்பதும் ஆன அத்வைதம் கம்பருக்குடன்பாடன்று.

2. துவைதம் என்பது இரண்டு பொருள். அஃதாவது:—

1. கடவுள், 2. உலகு, உயிர் என்பனவாம். அக்கடவுள் இவ்வுலகு உயிர்களுடன் கலந்தும் இருப்பான்; நீங்கியும் இருப்பான். இங்ஙனம் உலகும், உயிரும் வேறு; கடவுள் வேறு. என்னும் இரண்டு கொள்கைகளையுடையது. துவைதம் ஆகும். அக்கடவுளைப் போன்றே உலகும், உயிரும் நித்தியமானவை. கடவுள் மேலுலகத்தில் இருக்கிறுர். இவ்வுலக உயிர்கள் அக்கடவுளுள்ள மேலுலகத்தை அடைதலே மோட்சமாகும். அனைத்திலும் நீக்கமறக் கலந்திருக்கும் பரம்பொருள் ஒருகால் கலந்தும் ஒருகால் கலக்காமலும் இருக்கிறுன் எனும் துவைதம் கம்பருக்குடன் பாடன்று.

3. விசிஷ்டாத்துவைதம்:- துவைதம் என்பது உலகு உயிர் என்னும் இரண்டு. அ என்பது அவ்விரண்டும் அல்லாதது. அது கடவுள்; வித்ட்டம் என்பது பிரிவின்றி ஒன்ருயிருப்பது. உலகு, உயிர், கடவுள் என்ற மூவரும் வெவ்வேறு தன்மையுள்ள தனித் தனிப் பொருள்கள் எனினும் அம்மூன்றும் பிரிவின்றி ஒரே பொருள் எனும் தன்மைத்தாய் என்றும் ஒன்ருகவே இருப்பதால், விசிட்டாத்துவைம் என்றனர். சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்றும் பிரிக்க

முடியாத ஒன்றென்பதற்காகவே ஈற்றில் அன்எனும்ஒருமை விகுதி கொடுத்தனர். உலகு, உயிர் என்னும் இரண்டையும் இயக்குவிக்கும் ஈசுவரன், பரம்பொருள் என்னும் உயர்வைக் காட்டுவதற்காக அன் எனும் உயிர்திணை விகுதி கொடுத்தனர்.

உலகிற்கு முதற்காரணம் ஆகிய பரம்பொருள், அம்மை அப்பன் எனும் பெண்கூறும் ஆண்கூறும் உள்ள பிரியாத ஒன்றென்பதைத் தெளிவு செய்வதற்காகத் தொல்காப்பியனார் முதல் சூத்திரத்தில் .

அகர முதல் னகர இறுவாய்

என்றனர். இதில் அ என்பது அம்மை; ன் என்பது அப்பன் எனும் பொருளும் உணர்த்துதல் காண்க. இங்ஙனமே ஆதி என்பது பெண்பால்கூறும், பகவன் என்பது ஆண்பால் கூறும் ஆகிய இரண்டும் பிரிக்க முடியாத ஒன்றென்றும் தன்மை உணர்த்துவதற்காக அன் என்னும் ஆண்பால் விகுதி கொடுத்து

''ஆதி பகவன் முதற்றே உலகு''

எனத்திருவள்ளுவனார் தெளிந்து சொல்லியருளினர். இவ்விரு தமிழ்த் தலைமை முனைவர்கள் அருளிய தமிழர் சமய முதன்மைக் கொள்கைகளையே, இராமாநுஜ ஆச்சாரியார் தெள்ளத்தெளிந்து தமது சமயத்திற்கு ''விசிட்டாத்துவிதம்'' எனப் பெயரிட்டுச் சித்தாந்தம் செய்தனர். இவற்றின்விளக்கத்தைத் 'தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்' என்னும் பெருநூலில் காண்க. இவ்விசிட்டாத்வைதம் கம்பர்க்குடன்பாடாகும்.

8. திருவைகுந்தம்

இராமாநுசஆச்சாரியார் நிலை நாட்டிய விசிட்டாத்துவைதச் சித்தாந்தத்தையே கம்பர் மேல் குறித்த "உலகுதந்தானும், செந்தாமரை தன்னுளே" என்னும் பாடல்களினால் சித்தாந்தம் செய்தனர். இச்சித்தாந்தமாகிய வைணவ சமய நெறிகளில் நின்றவர் அடையும் மோட்சமாம் திருவைகுந்தத்தைப் பற்றி

சொல்பொங்கு பெரும்புகழோய்! தொழில்மாய்
சிற்பங்களில் வீவன சேர்குவனே
அற்பங் தருதேன் என்அருந் தவமோ
கற்பம் பலசென் றனகா ணுதியால்—சரபங்கன்18

சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலாம் உகினும்
மறுகா நெறியெய் துவன்வான் உடையோய்—ஷை20

என்பதில் என இந்திரனை நோக்கிச் சரபங்கர் சொன்னதாவது:- நான் பல கற்பங்கள் தவம் செய்கின்றேன். அதனுல் சிலகாலங்களில் அழிவதான பிருமலோகம் போன்ற உலகங்களுக்கு வரமாட்டேன். காலஎல்லைகள் இல்லாமல், எக்காலமும் இருப்பதும், நிலையில் என்றும் வெறுபடாதிருப்பதும், குறுகாமலும் நெடுகாமலும் என்றும் ஒரேதன்மையாய் இருப்பதும், வேறுபடும் குணங்களில்லாமல் என்றும் ஒரே சத்துவ குணத்தோடிருப்பதும் பூதங்கள் எல்லாம் அழிந்தாலும் அழியாத தன்மையுள்ளதும், சென்றவர் திரும்பிவருதலின்றி அங்கேயேயிருக்கும் படியான வாய்ப்புகள் உள்ளதும் ஆன பரமபதமாம் திருவைகுந்தத்தை அடைவேன்" என்பதாம் இதனுல் பரமபதம் என்பது என்றும் அழியாத அப்பிராகிருத உலகமாகும். பிரகிருதம் இவ்வுலகம். அப்பிராகிருதம் இவ்வுலமல்லாக அவ்வுலகம். அதாவது இவ்வுலகத்திற்கு மேற்பட்ட உலகம்.

எண்திசையும் திண்சுவரா ஏழேழ் நிலவகுத்த
அண்டப் பெருங்கோயிற் கெல்லாம் அழகுடைய
மண்டலங்கள் மூன்றின்மேல் என்றும் மலராத
புண்டரிக பொட்டின் பொகுட்டே புரையம்மா—சவந்த-46

என்பதால் இப்பிரகிருதியைச் சேர்ந்த 14 உலகங்களுக்கும் மேலாக உள்ள அப்பிராகிருதம் என்னும் பரமபதத்தில், திருமாமணிமண்டபத்தில், ஆதிசேஷன் மீதுள்ள தரும பீடத்தின் மேல் 12 இதழ்களையுடைய தாமரை மலரின் மேல் திருநாராயணன் எழுந்தருளியுள்ளான் எனும் வைணவ சித்தாந்த திருவைகுந்தத்தை, உண்மையும் உறுதியுமாக உரைத்தனர். இத்திருவைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் திருநாராயணன் அப்பரமபத உலகிலும் அவ்வுலகில் முத்தி

பெற்றவர்களாகி நித்திய சூரிகளாக உள்ளவரின் உடல் உயிர்களிலும் இரண்டறக் கலந்திருக்கிறனன். இங்ஙனம் இலீலா விபூதி என்னும் இவ்வுலகினும், உயிர்களினும் பிரிவின்றி இரண்டறக்கலந்து ஒன்றெனும் தன்மையாய் திருநாராயணன் இருக்கும் தன்மையாம் விசிட்டதுத்துவைத சித்தாந்தத்தைக் கம்பர் தெளிவாகச் சித்தாந்தம் செய்தனர்.

சித்தாந்தம்:- சித்தம் மனது; அந்தம் முடிவு. கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர், பலமுறை ஆராய்ந்து தெளிந்த சித்தத்தின் அந்தமாம் முடிவில் தெரிந்த தத்துவங்களே சித்தாந்தம் ஆகும். இத்தகைய சித்தாந்தங்களைச் சேர்ந்தவர்களில் இவர் இன்ன சித்தாந்தத்தார் என அறிவதற்கான வெளிக குறிகள் ஒன்றுமேயில்லை. ஆனால், அன்னார் புறக்குறிகள் வைத்துக் கொள்வாராயின் அவர் இன்ன சமயத்தார் என்கின்றனர். இத்தகைய புறக்குறிப்புகள் உள்ள சமயத்தாரைக் கம்பர் கண்டனர். அவரைப்பற்றி

காடு பற்றியும் கனவரை பற்றியும் கலைத்தோல்
முடி பற்றியும் முண்டித்தும் நீட்டியும் முறையால்
வீடு பெற்றவர் பெற்றதின் விழுமிய தியன்ற
மாடு பெற்றனன் மற்றினி என்பெற வருந்தி —இரணி–31

என்கின்றனர். இதில் காடு பற்றியும் கனவரை பற்றியும் இருப்பவர் யோகம் செய்யும் ஆரிய சமயத்தைச் சேர்ந்தவர் கலைத்தோலால் உடலை மூடியும் சடைகளை நீட்டியும் உள்ளவர் தவம் செய்யும் ஆரிய சமயத்தைச் சேர்ந்தவர். முண்டித்துள்ளவர் தலையை மொட்டை செய்து கொள்ளும் புத்தர் சமயங்களைச் சார்ந்தவர். ஆரியர் புத்தர் சைனர் சமயங்களில் உள்ளவர் தத்தம் சமயங்களில் சொன்ன நெறிகளில் நின்றவர்; அவரவர்க்குரிய வீடுகளை அடைக்கின்றனர் அன்னார் அடையும் முத்தியுலகங்களுக்கும் மேலான திருவைகுந்தமாம் பரமபதத்தை, விசிட்டாத்துவைத சித்தாந்த வைணவசமயத்தவன் ஆகிய நான் அடைந்தனன் எனப் பிரகலாதன் சொல்லினன்.

9. திருமண் காப்பு

அன்றேயன்றி, இன்னும் சமயங்கள் என்பன அகத்திலுள்ள சமய உண்மைகளைக் கொண்டமையவில்லை. புறத்தி

லுள்ள சமயக்குறிகளைக் கொண்டே அமைந்துள்ளன. தலைமயிர் நீட்டிச் சடைவளர்த்துள்ள ஆரிய சமயிகளைப் பற்றியும் மொட்டையடித்துள்ள புத்த சைனரைப் பற்றியும் கம்பர் கருதவில்லை. கணங்கணமும் கண்களால் காணும் ஆரிய சமயப்பிரிவுகளான வைணவ சைவசமயங்களைப் பற்றிச் சிந்தித்தனர். திருமண் துளசி மாலைகளைப் புறத்தில் அணிந்துள்ள வைணவரைப் பற்றியும் திரு நீறு உருத்திராக்கங்களைப் புறத்தில் அணிந்திருந்த சைவரைப் பற்றியும் சிந்தித்தனர். சிந்தித்துத் தெளிந்த வைணவசமயப் புறக்குறிகளுள் திருமண் தரித்தலைப் பற்றி

என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்றபேர் இருளினை நீக்கி நீள்நெறி
சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடும்
தன்திரு நாமத்தைத் தானும் சாத்தியே—கடிமணம்-45

என்கின்றனர். இராமபிரான் திருமண மண்டபத்திற்கு வருமுன்னர் திருமணக் கோலங்களில் ஒன்ருகத் திருமண்ணும் சாத்திக்கொள்கின்றனர்.

ஐயனும் அமைந்து நின்ருன் ஆழியான் அளவில்நாமம்
நெய்சுடர் விளக்கில் தோன்றும் நெற்றியே நெற்றியாக
—சம்புமா-21

என்பதில் ''ஆழியான் அளவில் நாமம் என்பதால்" திருமாலின் வைணவ சமயத்திற்குரிய திருமண் என்பதும், ''நெய்சுடர் விளக்கு'' என்பதால் நெய்வெள்ளைத் திருமண்ணும், சுடர் சிவப்புத்திருமண் என்பதும் தெரிகின்ருேம். இங்ஙனம் திருமண்ணைப் பற்றிய செய்தி ஒன்றுமே வான்மீகிமுனிவர் எங்குமே கூருமலிருக்கவும், கம்பர் வேண்டும் என்றே திருமண்வைக்கும் தம் கொள்கையைக் கூறினமையால், கம்பர் வெள்ளைத் திருமண்ணும் அதன் நடுவில் சிவப்புத்திருமண்ணும் தரிக்கும் வைணவ சமயத்தினர் ஆவர். இதற்குச் சான்ருகத் திருவரங்கம் நாதமுனி கோவிலுக்கு முன்னுள்ள நாலுகால் மண்டபத் தென்புறக் கிழக்குத் தூணில் வடக்கு நோக்கிக் கைகளைக்கூப்பித் திருக்கோலமாகச் சேவைதரும் கம்பநாட்டாழ்வார் சிலைவடிவத்திருநெற்றியில்வெள்ளைத்திருமண்ணும் அதன் நடுவில் செவப்புத் திருமண்ணும் இருப்பதை இன்றும் காணலாம். அதனினும், திருவழுந்தூரில்

உள்ள பழைய கம்பர் வல்லியம்மை சிலேகளின் நெற்றிகளேக் கூர்ந்து நோக்கில், திருமண் குறிகள் காணலாம். மேலும் கம்பர் சிலேகளே திருவழுந்தூர் சைவவேதபுரீசுவரர் கோவிலில் வைக்காமல் வைணவ ஆமருவிப்பெருமாள் கோவிலில் வைத்ததே கம்பர் வைணவர் என்பதற்காம்.

10. பிரபத்திசரணுகதி

இதுகாறும் கூறியவற்ருல் கம்பர்வைணவர்; விசிட்டாத்துவைத சித்தாந்தம் உள்ளவர் என்பதை ஐயம்அற அறிந்தனம். ஸ்ரீவைண சமயத்தில் திருவைகுந்தம் அடைவதற்கு எம்பெருமானும் திருமால் திருவடிகளில் பத்தி செய்தல் வேண்டும்; அதனிலும் பிரபத்தி செய்தல் வேண்டும் என்பர். அதற்காகவே இரணியன் வதைப்படலமாம் பரத்துவ நிர்ணயப்படலத்தில் திருநாராயணனேபரம்பொருள்என நிருணயம் செய்து அப்பரம்பொருளே அடைவதற்குப் பிரபத்தியாம் சரணுகதி தருமத்தை விபீடணன் அடைக்கலப் படலத்தில் சொல்லியருளினர். விபீடணன்

எந்தையே! இராகவா! சரணம்—விபீடணன்-96

என்று சொல்லிக் கொண்டே

கரங்கள்மீச் சுமந்து செல்லும் கதிர்மணி முடியன்கல்லும்
மரங்களும் உருகநோக்கும் காதலன் கருணைவள்ளல்
இரங்கினன் நோக்கும் தோறும் இருநிலத் திறைஞ்சுகின்ருன்
வரங்களின் வாரியன்ன தாளிணை வந்து வீழ்ந்தான்
—விபீடணன்-140

இங்ஙனம் இராகவா! சரணம் எனச் சரணுகதியடைந்த வீடணனே நோக்கி இராமபிரான்

ஆழியன் அவனைநோக்கி அருள்சுரந் துவகைகூர்ந்தே
ஏழினே டேழாய்நின்ற உலகுர்என்பெ யரும்எந்நாள்
வாழுநாள் அன்றுகாறும் வாளெயிற் றரக்கர்வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வர் நின்னதே தந்தேன்என்ருன்
வீட-142

என்றனர். இச்சரணுகதி தருமத்தைப் பற்றி

சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ருஜ
அகம்த்வா சர்வபாபேப் யாம்மோட் சயிஷ்யாமிமாசுச.
பகவத்கீதை.

கருமயோகம் ஞானயோகம் பக்தியோகம் முதலிய எல்லாத் தருமங்களையும் கீழ்ச்சொல்லியபடி சாத்துவிகத்தியாகம் செய்து விட்டு அதாவது அவைகளைச் செய்துகொண்டே அவைகளில் கருத்தா வாம்தன்மை பலம் முதலியன விட்டு விட்டு ஒருவனும் என்னை காப்பாற்றுபவன். அல்லது அக் கருமங்களில் ஆராதனை செய்து அக்கருமங்களின் பலன் களைக் கொடுப்பவன். ஆகத்தியானம் செய்து கொண்டிரு; துக்கப்படாதே; உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் மோட்சம் கொடுக்கிறேன்; சுகம்ஆகஇரு என்னும் சரணாகதி தருமத்தின் சால்பைச் சமயச் சார்பில் சாற்றினர்.

11. பிரபத்தி செய்தவன் கருமயோகி பரமபதம் அடைவான்

மக்கள் தம் தம் வாழ்க்கையில் நேரும் இன்ப துன்பங் களில், நட்புப் பகைகளில், வெற்றி தோல்விகளில், விருப்பு வெறுப்புகளில் இன்னோரன்னவற்றில் எவ்வெவ்வகை மன நிலைகளைக் கொண்டிருந்தனரோ அவ்வவ்வகை மனநிலை களையே மனிதன் ஆக அவதாரம் செய்த இராமபிரானும் கொண்டிருந்தனன். ஆனால் மக்களாகப் பிறந்தவர் அன்னோ ரன்னவை நேரினும் மனம் சமநிலையில் இருத்தல் வேண் டும் என்பதும், தாம் செய்யும் கருமங்கள் ஒவ்வொன்றிலும் பலனை நோக்காது பற்றின்றிச் செய்தல்வேண்டும் என்ப தும் மனத்தில் சொள்ளல்வேண்டும் என்பதற்காக இராம பிரான் தானே நடந்து காட்டினன். அது கருமயோகம் எனப்படும்.

திருநாராயணன் திருவடிகளில் சரணாகதியடைந்து பிரபத்தி செய்து கொண்டவர் இருக்கும்வரையும் எத்தொழி லைச்செய்து கொண்டிருப்பர் என்பது ஓர்வினா. அத்தொழில் கள் அனைத்தையும் இரண்டாக வகுத்துச் சாங்கியயோகம் கருமயோகம் என்பர். இதனை

சாங்கியம் யோகம்என் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருள்எலாம் வேறு காண்பன
ஆங்கவை உணர்ந்தவர்க் கன்றி அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரல் பாலதோ —இரணியன்வதை–190

என்றனர். சாங்கியம் என்பது:- ஒரு தொழிலும் சேய்யாமல் தனித்துத் தனது ஆன்மநிட்டையிலிருத்தல். கருமயோகம்

என்பது:- எத்தொழிலைச் செய்யினும் அதன் பலனில் பற்றுவைக்காமல் அத்தொழிலைப் பகவான் ஆராதனை எனச் செய்து கொண்டிருத்தல். இவ்விரண்டில் கருமயோகமே சிறந்தது எனப் பகவன் கீதையில் பல இடங்களில் உள்ளன. அவற்றுள் ஒன்று:- ஞாநயோகம் கருமயோகம் என இரண்டும் ஆன்ம அநுபவத்தைக் கொடுப்பன. அவற்றுள் ஞாநயோகத்தைக் காட்டினும் கருமயோகமே சிறந்தது" என அ. 5. சு. 2இல் உள்ளது.

இராமபிரான் திருவவதாரம் முதல் திருமுடிசூடும் வரையும் பலப் பல கருமங்களைச் செய்து கொண்டே வந்தனன். மரத்தின் கீழோ குகைகளுக்குள்ளோ இருந்து கொண்டு ஆன்மாநுபவம் செய்து கொண்டு ஒரு தொழிலும் செய்யாமல் இருக்கவில்லை. அவ்வக்காலங்களில் ஏற்ற ஏற்ற தொழில்களைச் செய்து கொண்டிருந்தனர் என்றே இராமபிரானைப் பற்றிய எல்லா மொழிக்கதைகளும் ஒரு முகமாக உரைக்கின்றன. எனவே மக்கள் தம்தம் வாழ்க்கையில் செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் பலனை நோக்காமல் பற்றின்றிப்பகவான் ஆராதனையாகச் செய்து பரமபதம் அடையும் கருமயோகியர் ஆதல்வேண்டும் என்பதை இராமபிரான் நடந்து காட்டிய கருமயோகங்கள் பலப் பலவாகும். அவற்றுள் இரண்டு காண்போம்.

1. தாதைஅப்பரிசு உரைசெயத் தாமரைக் கண்ணன்
காதல்உற்றிலன் இகழ்ந்திலன் கடன் இதுஎன் றுணர்ந்தும்
யாதுகொற்றவன் ஏவியது அதுசெயல் அன்றோ
நீதியற்கேற்ன நினைந்தும் அப்பணிதலை நின்றான் -மந்திர-69

இதில், இராமபிரான் முடிசூடுவதைப்பற்றி விருப்பும் வெறுப்பும் கொள்ளவில்லை. தகப்பன் தயரதன் சொல்லை ஏற்றுக்கொள்வது "கடமை" என்றனன். அதைச் செய்யுளில் "கடன்" எனல்காண்க. இனிமுடிசூடுதல் இல்லை காட்டிற்குப் போதல் வேண்டும் என்றவுடன் இராமபிரான் உள்ளம் உரை செயல் எங்ஙனம் இருந்தன எனல் காண்போம்.

ஆழிசூழ் உலகம்எல்லாம் பரதனேஆள நீபோய்த்
தாழிரும் சடைகள்தாங்கித் தாங்கரும்தவம் மேற்கொண்டு
பூழிவெம் கானம்நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டில்வா என்றுஇயம்பினன் அரசன்என்றாள்

எனக் கைகேசி சொல்லியதைக் கேட்ட இராமபிரான் திருவுள்ளம் எங்ஙனம் இருந்தது என்பதைக் காண்போம்.

இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கெளிதே யாரும்
செப்பருங்குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பிவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா.

என்றனர். திருமுடி சூட்டிக்கொள்வாய் என்ற அப்பொழுதினும் காட்டிற்குப் போவாய் என்ற இப்பொழுதில் இராமபிரான் திருமுகம் மிகவும் மகிழ்ந்திருந்தது. அம்மகிழ்வுடன் காட்டிற்குப் போவதற்காகச் சீதையிடம் சென்றனன். அம் முகப்பொலிவைச் சீதை திரும்பத்திரும்பப் பார்த்துச் சிந்தையில் வைத்துக் கொண்டாள். இதனை

மெய்த்திருப்பதம் மேவு என்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள் —காட்சி-20

என்பதில் காண்கின்றோம். முதல் நாள் போரில் இராவணன் சினந்த முகத்துடன் போர் செய்கின்றான். இராமபிரான் சிரித்த முகத்துடன் போர் செய்கின்றான். இதனை நேரில் கண்ட இராவணனே

எறித்தபோர் அரக்கர்ஆவி எண்ணிலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோ தென்னை அந்தப் பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்தபோது அன்னான் அந்தக்கூனி கூன்போக உண்டை
தெறித்தபோதுஒத்த தன்றிச் சின உண்மை தெரிந்ததில்லை.

—கும்பவதை-17

என இயம்புகின்றான். இங்ஙனம் இராமபிரான் முன் அவதாரத்தில் நடந்துகாட்டியதை பின் அவதாரத்தில் கண்ணபிரான், "அருச்சுன! பலன்களில் பற்றுதலைவிட்டுப் பலன்கள் கிடைக்கினும் கிடைக்காவிடினும் மனதைச் சமநிலையில் வைத்துக் கொண்டு யோகம் செய்க. சமமனதுள்ளதே யோகம்" என அ-2-சு-47இல் சொல்லினர்.

"இத்தகைய எனது மேலான அவதாரத்தையும் கருமயோகத்தையும் உள்ளபடி எவன் அறிகிறானோ அவன்

உடம்பை விட்டபின்பு பிறப்பு இறப்புக்களை அடைகிற தில்லை. என்னையே அடைகிருன் ''என அ-4-க-9 இல்பின்னர் தான் சொல்லப் போவதற்காக முன்னரே தன்னை அடைந் தவர்களுக்குத் தனது பரம பதத்தைக் கொடுத்திருக்கிருன். இதற்குச் சான்ருக இறுதியில் விருப்பு வெறுப்பின்றி மனம் சமநிலையடைந்த வாலி மகன் அங்கதனிடம்

தோன்றலும் இறத்தல்தானும் துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுல கத்தினோர்க்கும் மூலத்தே முடிந்த தன்றே
யான்தவம் உடைமையால் இவ்விறுதிவந்து இசைந்தது யார்க்கும்
சான்றுஎன நின்ற வீரன் தான்வந்து வீடுதந்தான்.

என்றனன். இதனுல் தன்னைச் சரணுகதியடைந்த பிரபத் திக் கருமயோகியருக்கு இராமபிரான் மோட்சத்தைக் கொடுத் தான்; கொடுக்கிருன்; கொடுப்பான் என்பதைத் தெளிகின் ருேம். இதனுல் இராமகாதையை வைணவர் ''சரணுகதி தருமம்'' என்பர்.

கம்பர் தமது வைணவ சமயத்தை எங்ஙனம் உண்மை யும் உறுதியும் ஆக உரைத்தனரோ அங்ஙனமே காவியத்தில் வரும் ஒவ்வொரு கதைப் பாத்திரத்தின் அமைப்பைப் பற்றி உண்மையும் உறுதியும் ஆக உரைத்திருக்கின்றனர். அவற் றைப் பற்றி இனி வெளிவரும் ''கம்பர் கருப்பொருள்'' என் னும் தனி நூலில் காண்க.

கம்பர் வாழ்க! கம்பர் காவியம் வாழ்க!!

கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு முற்றிற்று.

கம்பரும் காவியமும்

1. கம்பர்

1 கருநூல் சேர் கம்பம் எனும் தாய் நாட்டின் பெயர் வைத்தல் கருத்தில் கொண்டு
பெருவாழ்வின் ஆதித்தன் தன் மகற்குக் கம்பர் எனும் பெயரை வைத்தான்
திருவாரும் கம்பர் மகள் காவேரி கம்மகுல தெய்வம் ஆக
ஒரு ராயார்க் குள்ளதினுல் கம்மகுலம் கம்பர்என உணர்ந்தே உரைப்போம்.

2 வண்ணமுறு சோழரிடம் போகாமல் சடையப்ப வள்ளல் அன்பால்
வெண்ணெ நல்லூர் மனைவாழ்வில் வல்லியுடன் அமர்ந்திருந்தே விழைந்து நாளும்
கண்ணமரும் காவியத்தை இயற்றிப்பின் திருவரங்கம் கற்ருேர் முன்னர்
திண்ணமுற அரங்கேற்றும் காவியம்போல் கம்பர்சிலை சென்னி வைப்பாம்.

3 சாதிமத அரசியலின் வேற்றுமையார் அவைமறந்து சார்ந்தொன் ருக
ஓதிவரும் நூலுளதேல் அதுகம்பர் காவியம்என் றுரைக்கும் உண்மை
ஆதிமுதல் இன்றுவரை கண்கூடாக் காண்கின்ருேம் அதனுல் என்றும்
போதியவா சமதருமம் உரைகடவுள் கம்பர்எனப் போற்றுவோமே.

2. காவியம்

4 ஆய்ந்தபெருங் காப்பியத்தின் இலக்கணங்கள் அத்தனையும் அமையப் பெற்றும்
வாய்ந்தமரும் காவியத்தின் உயிரனைய பாவகமே மன்னப் பெற்றும்
தோய்ந்துவரும் ஒவ்வொருசொல் உள்ளத்தின் உணர்ச்சியொடு தோன்றப் பெற்றும்
ஏய்ந்தமரும் கம்பரது காவியம்போல் உலகினில்ஒன் றெங்கும் இல்லை.

5 முந்தெழுந்த காவியங்கள் அனைத்தினுமே வடித்தெடுத்த முதன்மைத் தாகி
பிந்தியெழும் காவியங்கட் கோரெடுத்துக் காட்டாகும் பேறுபெற்றுச்
சந்தமொரு பலப்பலவாம் விருத்தமமை பாவமைக்கும் சால்பு கொண்டு
வந்ததமிழ்க் காவியம்செய் கம்பரினல் தமிழுலகம் மாண்பாயிற்றே.

6 தன்னேரில் லாதவொரு தலைவனுடன் தலைவியமை சால்பை ஆர்ந்தும்
பொன்னேரும் காவியத்தின் பாத்திரரின் தன்மைகளைப் பொருந்த ஆய்ந்தும்
சொன்னேரும் குணம் செயலும் ஊணுடையும் உறையுளுமே தொகுத்தொவ்வொன்ருய்
முன்னேநாம் காண்பதுபோல் கம்பரது காவியம்தான் மொழிதல் கண்டோம்.

7 முன்னையநாள் வடநாடோ டிருந்தகதை விரித்துரைக்க மூன்று திக்கில்
பொன்னிமையம் வடக்கும்மேல் கீழ்த்திசையில் கடல்களுமே பொருந்த ஆய்ந்து,
தென்னதிசை இலங்கைவரை வான்மீகி கதைவிரித்தான் தெளிந்த கம்பர்
தன்னுளஞ்சேர் காதைகளைப் பாத்திரத்தில் வைத்தமைத்தான் சரிதம் அன்று.

8 மக்களுறை வாழ்க்கையிலே நிகழ்ந்த பல வரலாற்றை மனத்தில் ஆய்ந்து
தக்கனவும் தகாதனவும் இன்னின்ன எனத்தெளிந்து தனக்காம் கொள்கை
தொக்கபல பாத்திரத்தில் காவியத்தின் அமைப்பிற்காய்த் தொகுத்து வைத்தான்
ஒக்கவர லாறன்று வரலாற்றின் நிகழ்ச்சிஎன உளத்தில் கொள்வோம்.

9 தேர்ந்துரைக்கும் காவியத்தில் செயற்கரிய செய்பெரியார்த் தேவர் என்றும்
கூர்ந்துமலை காடுறையும் வனசரராம் வனநரரைக் குரங்கர் என்றும்
ஆர்ந்தபெரும் தீவினைசெய் கயவராம் காமுகரை அரக்கர் என்றும்
ஏர்ந்துரைத்தல் கற்பனைதேர் கம்பருளக் கவிமரபிற் கேற்றதாகும்.

10 அண்ணனொடு தம்பிக்கும் அச்சனொடு மகனுக்கும் அமையப் பெற்ற
கண்ணனொடு மனைவிக்கும் காதலொடு கற்பிக்கும் கருத்தில் நின்ற
பெண்ணினொடு ஆணுக்கும் குடிகளொடு கோனுக்கும் பெரிதாம் பண்பை
எண்ணிஒரு கம்பர்செய் காவியம்போல் சமுதாயம் இருத்தல் மேலாம்.

11 சிறையிருந்தாள் ஏற்றத்தைச் சொல்லுவதே இராமகதைச் சிறப்பென் றாய்ந்து
நிறையிருந்த பெண்ணினது பெருமையினைப் போற்றுதலே நேர்மை என்னும்
துறையமைந்த விருத்தப்பாக் கம்பரது காவியத்தின் தூய பண்பால்
அறைகடல்சூழ் ஆணுலகில் பெண்ணுலகம் உயர்வாக அமர்தல் கண்டோம்.

12 அல்லவரைப் போக்கற்கும் நல்லவரைக் காக்கற்கும் அறத்தை நாளும்
தொல்லுலகில் நிறுத்தற்கும் திருராமன் தோன்றினதாய்ச் சொல்லும் உண்மை
நல்லவராம் ஊண் உடை ஒன்றில்லாத வனநரரை நயந்து காத்தும்
அல்லஅரக் கரைஒறுத்தே அவர் பதுக்கும் திருக்கொணர்தல் அறமாம் என்றான்.

13 தீவியமாம் இராமகதைக் கருப்பொருளைக் கருத்துறவே தெரியக்காணின்
பூவியலும் மக்களுக்கோர் எதிர்சூழல் தோன்றிடினும் புந்தி குன்றா
மாவியல்பை கொள்க என இராமன்சூர்ப் பநகைகதை வைத்த தொன்றாம்
காவியத்தின் கருப்பொருளை அறிந்துகதைப் பெயர்விடுத்துக் கலையைக் கொள்வோம்.

14 அடைக்கலத்தைச் சொல்சரணா கதிதருமம் தாபிக்கும் அவதா ரந்தான்
படைத்திட்ட தெக்கருமம் செய்திடினும் பலனெண்ணும் பற்றொன் றில்லா
நடக்கையுடன் பரதன்சுக் கிரீவன்வீ டணற்கரசை நல்கி அன்னார்
இடைக்கரும யோகிஎன இருந்தராமன் யோகத்தை ஏற்றல் மேலாம்.

15 திருவமரும் காவியத்தின் செய்யுளெலாம் கம்பர்தான் செய்தார் என்றே
ஒருவரும் உளங்கொள்க அமைப்பின்றுகளையலுற்றால் ஒவ்வொன்றாக
இருமனைவி கொண்டவனின் தலைமயிர்போல் ஒரு நாளில் இல்லை யாகும்
உருவமரும் கம்பருறுப் பொதுக்காமல் உள்ளபடி உவந்து காண்போம்.

16 தீட்டியநல் லோவியத்தின் அமைப்பைப்போல் சிந்தித்துச் செய்த செய்யுள்
நாட்டினக விருளகற்றும் ஞானவொளிக் கண்களென நயத்த லின்றி
ஒட்டியவவ் வெஞ்சினத்தைப் போக்கற்கோர் வழியறியா துள்ளுள் உழன்று
தேட்டியகா வியம்சிதைத்தல் தங்கண்ணைத் தாம்சிதைக்கும் செய்கை ஆகும்.

17 கம்பருரை காவியம் ஓர்கதை எனவும் கருதற்க கனிந்தே எண்ணின்
இம்பருறை மக்களெலாம் எல்லாமாம் பெருஞ்செல்வம் எய்தி நின்று
தும்பமுறும் உடையோரும் இல்லோரும் இல்லைஎனும் சமதருமத்தை
உம்பரென உரைப்பதுவே கம்பரது காவியம்என் றுவந்து காண்போம்.

18 தேவைக்குமேல்தேவை தேடாத சீராமன் தெய்வ வாழ்வில்
நாவைக்கும் சுவையுணவை உழைத்துண்ணல் கடமைஎன நாளும்நாளும்
காவைக்கும் அரணியத்தில் பதினான்காண் டுழைத்துண்டான் காவி யத்துப்
பாவைக்கும் உண்மை இதைச் சீராமர்த் துதிபத்தர் பண்பாய்க் கொள்க.

19 விதிஎன்னும் பெயராலே பலமணம்செய் தசரதனை, விதியொன் றின்றி
மதிமுகமா மடந்தையரைத் தூக்கிச்செல் இராவணனை மதித்தொன் றாக
ஆதிபிரிவாம் நோயாலும் போரென்னும் கொலையாலும் அழியச் செய்து
கதியொழுக்கம் ஓர்மணம்என் காகுத்தன் காவியம்ஓர் கடவுள் வாழ்வாம்.

20 தொடையழகும் சொல்லழகும் தொனியழகும் தொனியைச் சேர்ந்த
நடையழகும் தெளிவழகும் அணியழகும் அமைப்பழகும் நண்ணிச் சேர்ந்த
அடையழகும் கவியழகும் நிறைகம்பர் காவியமாம் ஆலயத்தில்
கொடையழகுக் கவித்தெய்வம் கண்டுகண்டே ஆனந்தம் கொள்ளு வோமே.

21 மனமார்ந்த மனைவியுடன் மாண்பமைந்த மக்களுடன் வாழும் இன்பம்
கனமார்ந்த செல்வருடன் கண்ணார்ந்த கலைஞருடன் களிக்கும் இன்பம்
இனமார்ந்த சுற்றமுடன் எய்தின்பம் இத்தனைக்கும் இன்பம் மேலாம்
வனமார்ந்த கம்பரருள் கவிச்சுவையின் இன்பமென மகிழு வோமே.

22 கம்பருரை சீராமன் கருணைநிறை கருத்தினனாய்க் கண்முன் தோன்றி
உம்பருலகத்தனைக்கும் மேலுலகாம் வைகுந்தம் உவந்தே ஈவன்
வம்பருற வாஎன்னில் கருணைக்குக் கைகூப்பி வாரேன் சாமி
இம்பரிலுன் கதையுரைக்கும் கம்பர்கவி அமிழ்துண்டிங் கிருப்பன் என்பேன்.

23 கலையுலகில் தமிழுலகம் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் கம்பர் செய்த
நிலையுலவும் கவியுலவும் காவியத்தின் பெருமை என நினைந்து போற்றி
அலையுலவும் புறஉலகில் அகத்துயர்க்கு மருந்தாக அன்பார்ந்தீயும்
தலையுலவும் செஞ்சொல்சேர் கம்பர்அமிழ் துண்டமைதித் தவிசில் வாழ்வோம்.